# இறையியல் கோலங்கள்

வடிவம் 18 ஜூன் 2005 வண்ணம் 2




புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி - இறையியல் கோலங்கள்

25

யூபிலி சிறப்பிதழ்

1980 - 2005

உண்மையின்
அறிவை
நோக்கி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# IRAI IYAL KOLANGAL

*Tamil Theological Quarterly*

ST. FRANCIS XAVIER'S SEMINARY
LIBRARY
COLOMBOGAM

Vol : 18
No : 02
June : 2005

வடிவம் : 18
வண்ணம் : 02
யூன் : 2005

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் :

அருட்தந்தை : ச. வி. ப. மங்களராஜா

துணை ஆசிரியர்கள் :

அருட்தந்தை : சா. பி. கிருபானந்தன்
அருட்தந்தை : ப. ஜோ. ஜெபரட்ணம்
அருட்தந்தை : பி. கிறிஸ்துநாயகம்

நிர்வாகக் குழு :

அருட்சகோ. செ. பிரான்சிஸ் அசிசி
அருட்சகோ. பி. தே. யூட்தாஸ்
அருட்சகோ. யே. ஜெஸ்லி ஜெகானந்தன்
அருட்சகோ. எ. எட்வினாதன்
அருட்சகோ. சூ. மில்ரன் தேவராஜ்
அருட்சகோ. அ. கிறிஸ்ரி றூபன் பெனாண்டோ

வெளியீடு : புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Editor :**

Rev. Fr. S. V. B. Mangalarajah

**Sub Editors :**

Rev. Fr. S. J. Kirupananthan
Rev. Fr. P. J. Jebaratnam
Rev. Fr. P. Christunayagam

**Administrative Board :**

Rev. Bro. S. Francis Assisi
Rev. Bro. J. T. Judethas
Rev. Bro. J. Jesly Jehananthan
Rev. Bro. E. Edwinathan
Rev. Bro. S. Milton Devaraj
Rev. Bro. A. Christy Ruban Fernando

**Publication :** St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel No.: 021 222 2482, 021 222 7145.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. ஆசிரியரிடமிருந்து ..........

02. திருச்சபை வரலாற்றில் திருப்பணியாளர் பயிற்சி
அருட்தந்தை ச. வி. ப. மங்களராஜா

03. நற்கருணையும் தமிழர் போராட்டமும்
அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி அ.ம.தி

04. வீடு நோக்கி ஒரு சூழமைவு இறையியலாக்க முயற்சி
அருட்தந்தை ம. வி. இ. இரவிச்சந்திரன்

05. யாழ். புனித சவேரியார் குருமடமும் ஈழத்தமிழ் இறையியல் நோக்கும்
அருட்சகோ. பி. தே. யூட்தாஸ்

06. தொடக்க நூலின் முதல் மூன்று அதிகாரங்களில் துலங்கும் வாழ்வியல் உண்மைகள்
அருட்தந்தை சா. ஜெயறஞ்சன்

07. மரியாள் எம்முடன் வாழும் அன்னை
அருட்சகோ. எ. செ. கி. மரியதாஸ்

08. மரண தண்டனை அவசியம் தானா?
அருட்தந்தை பி. கிறிஸ்துநாயகம்

09. அன்பிய உருவாக்கத்தில் ஊக்குவிப்பாளர்கள்
அருட்தந்தை கி. அந்தோனிதாஸ் டலிமா

10. துன்பம் புதிய ஏற்பாட்டுப் பார்வையில் இயேசுவும் பவுலும்
அருட்சகோ. பாலதாஸ் பிறாயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கிறிஸ்தவ ஒன்றிப்பின் பின்புலங்களும் நம்பிக்கையின் அடித் தளங்களும்
அருட்தந்தை சா. பி. கிருபானந்தன்

12. ஊடக இறையியல் நோக்கி......
அருட்சகோ. எ. எட்வினாதன்

13. கிறிஸ்தவ ஆன்மீகம்
அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ்

14. யாழ். பெண்கள்: ஓர் இறையியல் பார்வை
அருட்சகோ. அ. ஜேம்ஸ்நாதன்

15. இவ்விதழின் இறையியலாளர்
அருட்சகோ. ம. செல்வநாதன் பீரிஸ்

16. Synopsis

17. குறுக்கெழுத்துப்போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து...

**அன்புள்ள வாசகர்களே!**

1980 ஆண்டு ஐந்து குருமாணவர்களுடன் ஆரம்ப மெய்யியல் பிரிவாக காலம் சென்ற அருட்திரு. பிலிப் பொன்னையா அடிகளாரை அதிபராகக் கொண்டு எமது முன்னாள் ஆயர் அமரர். பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் தொடக்கப்பட்டு படிப்படியாக மெய்யியல், இறையியல் பிரிவுகளுடன் இயங்கி வந்து இவ்வருடம் எமது குருத்துவக் கல்லூரி வெள்ளிவிழாக் காண்கின்றது.

கண்டி தேசியக் குருமடத்தில் இருந்து வெளிவரத் தொடங்கியிருந்த **'இறையியல் கோலங்கள்'** இக் கல்லூரியின் இரண்டாம் அதிபர் அருட்திரு. S.J. இம்மானுவேல் தேசியக் குருமடத்தில் இருந்து இக் குருமடத்திற்கு 1986ல் வந்து, அதிபராக பொறுப்பேற்ற பின் இங்கிருந்து வெளிவரத்தொடங்கியது. யாழ்ப்பாணம், மன்னாருடன் திருமலை – மட்டு நகர் ஆகிய மறைமாவட்டங்களில் இருந்து தமிழ் குருமாணவர்கள் இங்கு வந்து தமது பயிற்சியைத் தொடர்ந்ததால் கண்டி குருமடத்தில் தமிழ் குருமாணவர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டமையும் **'இறையியல் கோலங்கள்'** கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர ஒரு முக்கிய காரணமாகும்.

சுதேசமயமாக்கல், பண்பாட்டுமயமாக்கல், மண்வாசனையோடு சுவடிய பயிற்சி ஆகியவை எமது குருமடம் இங்கு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்வைக்கப்பட்ட காரணங்களில் முக்கியமானவை. சாதாரண மக்கள் மத்தியில் இறையியலை இலகு தமிழில் முன் வைப்பது, ஆற்றல் உடையவர்களை தமிழில் இறையியலை எழுதத் தூண்டுவது ஆகியவையும் எமது குருமடம் இங்கு ஆரம்பிக்கப்பட்டமைக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்களுள் அடங்கும். இந்தப் பணியை நிறைவேற்றுவதில் கடந்த பல வருடங்களாக '**இறையியல் கோலங்கள்**' தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது.

ஒவ்வொரு இதழும் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் ஆக்கங்களைக் கொண்டு மலருவது வழமை. மலரும் இவ் இதழ் யூபிலி சிறப்பிதழ், ஆதலால் சற்று வித்தியாசமாக வானவில்லில் பல்வேறு நிறங்கள் இருப்பதைப்போல பல்வேறு அம்சங் களைக் கொண்டு மலருகின்றது.

இவ் இதழில் பொதுவாக குருக்களின் உருவாக்கம், கிறிஸ்து திருத்தூதர்களுக்கு வழங்கிய பயிற்சியிலிருந்து பல்வேறு மேடு, பள்ளங்கள் ஊடாக இன்று வரை அடைந்த பரிணாம வளர்ச்சியில் எமது குருத்துவக் கல்லூரியின் ஆரம்ப பின்புலம் ஆகியவையும் அலசப்பட்டுள்ளன.

இவ்வருடம் நற்கருணை ஆண்டு ஆகையால் அதுபற்றி ஒரு சிறப்புக் கட்டுரை எமது அன்றாட வாழ்க்கையை தொடக்கூடிய விதத்தில் தமிழர் போராட்டத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு அமைகின்றது.

திருவிவிலியக் கல்வி குருத்துவப்பயிற்சியின் இதயம் போன்றது. எனவே திருவிவிலியம் இன்று உலகை, திருச்சபையை வளர்த்து வழிகாட்டும் சிந்தனைகள் சில கட்டுரைகளில் தரப்பட்டுள்ளன.

கன்னிமரியாள் எப்போதும் எம்மோடு வாழ்ந்து எம்மை அன்பு செய்து வரும் அன்னை என்ற உண்மை ஒரு கட்டுரையில் சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆதித் திருச்சபையில் இருந்தது போன்ற, அன்பு செய்து பகிர்ந்து வாழ்ந்த திருச்சபையை மீண்டும் உருவாக்கும் பணியில் அன்பியங்கள் போதியளவு வேர் விடவில்லை என்றுதான் கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பியங்கள் திறமையாக செயல்பட சில வழிகாட்டுதல்கள் குறிப்பாக அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன பிறிதொரு கட்டுரையில்.

போரின் விளைவாக தமது சொந்த வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் தற்காலிக வதிவிடங்களிலும் வாழ்வது தமிழ் மக்களின் ஒரு வேதனை மிகுந்த அனுபவம். இது பற்றிய சில இறையியல் சிந்தனைகள் ஒரு கட்டுரையில் தரப் பட்டுள்ளன.

நாளுக்கு நாள் வன்முறைகளும், கொலைகளும் மலிந்து வரும் இக் காலத்தில் இவற்றை கட்டுப்படுத்த சட்டபூர்வமாக மரணதண்ட னையை மீண்டும் அமுல்படுத்தினால் என்ன என்று ஒரு சாரார் கேள்வி எழுப்பிக் கொண்டு இருக்கும்போது, இச்சிக்கலான பிரச் சினை பற்றிய கிறிஸ்தவ கண்ணோட்டம் பலதரவுகளுடன் ஒரு கட்டுரையில் தரப்பட்டுள்ளது.

ஊடகத் துறையில் ஏற்பட்டுள்ள கடுகதிவளர்ச்சி மனித வாழ்க் கையின் எல்லா அம்சங்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரு கின்றது. இறை – மனித, மனித – மனித உறவு ஆகிய அடிப்படை அம்சங்கள் ஒரு தெளிவான ஊடக இறையியலை உருவாக்க வேண்டும் என்பது பற்றிய கருத்துக்கள் அடங்கிய கட்டுரை நமது சிந்தனைக்கு விருந்து படைக்கின்றது.

ஆண்பாதி, பெண்பாதி என்று இருக்கவேண்டிய உலகில் யதார்த்தநிலை அப்படியல்ல. பெண்கள் ஓரங்கட்டப்பட்டு வருவது எல்லாத்துறைகளிலும் இடம் பெறுகின்றது. தமிழ் உலகிலும் இன் னும் குறிப்பாக எமது வடபகுதியிலும் பெண்களின் நிலை இன்னும் எங்கேயோ தான் இருக்கின்றது. போர்ச்சூழல் ஓரளவிற்கு இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் நிலையை மேன்மைப்படுத்தியிருந்தாலும் இன்றும் செய்யவேண்டியவை சமூகத்திலும் திருச்சபையிலும் நிறைய உண்டு என்பதை 'யாழ். பெண்கள் – ஒரு இறையியல் பார்வை' சிந்திக்கத் தூண்டுகின்றது.

இப்படியாக பல்வேறு ஆக்கங்கள் சிந்தனையைத் தூண்டுவதற்கு, அறிவை மேம்படுத்த, செயல்பாடுகளை ஊக்குவிக்க, நல்லதொரு நீதியுள்ள சமத்துவமும் சமாதானமும் உள்ள சமுதாயத்தை கட்டியெழுப்ப, ஆன்மீகத்தை வளர்க்க, இவற்றின் ஊடாக இறையரசை இம்மண்ணில் ஏற்படுத்த இவ் யூபிலி சிறப்பிதழ் முனைந்துள்ளது. வாசித்து பயன் பெற இறை ஊழியத்திலும் அதன் மறுபக்கமாகிய பிறர் பணியிலும் வளர வாழ்த்துக் கூறி விடைபெறுகின்றேன்.

அருட்திரு. ச.வி.ப. மங்களராஜா

ஆசிரியர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலச்சினை விளக்கம்

இறையியல் கோலங்கள்

இறைவன் ஒருவனே, ஆயினும் படைத்தல், காத்தல், புனிதப்படுத்தல் மூலம் முழுமையை உருவாக்கும் அவன்; தந்தை, தனயன் தவறிலா ஆவி எனும் மும்மூர்த்திகளாக இயங்குகின்றான். படத்தின் நடுவே உள்ள முக்கோணம், இம் மும்மூர்த்தியாகிய இறைவனைக் குறிக்கின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள தனித்துவத்தை தெளிவுபடுத்தும் காரணிகளான அவனது குணாதிசயங்கள் வாழ்நாள் முழுவதும் அவனோடு ஒன்றித்திருக்கின்றன. முதலும் முடிவும் தனக்கிலா இறைவனுக்கு, அவன் குணாதி சயங்களுக்கு, எண்ணிக்கையோ எல்லைக்கோடோ இல்லை.

தொடக்கமும், முடிவும், எல்லையுமற்ற, பொருளைக் குறிக்கும் உருவமான வட்டங்கள்; என்றும், எங்கும் நிறைந்த வரான மும்மூர்த்தியாம் இறைவனின் எண்ணிலடங்கா, எல்லையில்லா குணாதிசயங்களை குறித்து நிற்கின்றன.

இறைவன் வெளிப்படுத்துவதை முற்றாகத் தெரிந்து கொள்ள, எல்லையுள்ள மனிதனுக்கு முடிவதில்லை; மனித னின் மதிக்கு முழுமையாக எட்டுவதுமில்லை. படத்தில் வட்டத்தை குறுக்கிடும் சிறு வட்டப் புள்ளிகள் மனிதனின் மதிப்பிற்கு எட்டிய இறைவனின் குணாதிசயங்களை குறிக்கின்றன.

“இறையியல் கோலங்கள்” எனும் பெயர் கொண்ட இம் மலரானது சில இளம் சிந்தனைச் சிற்பிகள், இம்மும் மூர்த்தியாம் இறையின் மாட்சியில் தம் மதிக்குப் புரிந்து கொண்ட சிறுசிறு துளிகளை எல்லோர்க்கும் பயனுற வேண்டி, இனிய தமிழில் வடித்துள்ள தனித்தனிக் கோலங்கள் ஆகும்.

*நிர்வாகக் குழு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: A.C.M Press, No. 464. Hospital Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணியாளர் பயிற்சி

திருச்சபை வரலாற்றில்

அருட்தந்தை. ச. வி. ப. மங்களராஜா

இன்று கத்தோலிக்கத் திருச்சபையில் திருப்பணியாளர் தெரிவு, பயிற்சி, உருவாக்கம் பற்றி பல மட்டங்களிலும் பேசப்பட்டு விமர்சிக்கப்பட்டு வருகின்றது. குருமடத்தில் குரு மாணவர்களின் பயிற்சி எவ்வளவு காலம் நீடிக்க வேண்டும், என்னென்ன துறைகளில் அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட வேண்டும், வேகமாக வளர்ந்துவரும் உலகில் என்னென்ன மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும், இடத்துக்கிடம் அவர்களின் பயிற்சி எவ்வாறு வேறுபட்டிருக்க வேண்டும் போன்ற பல விடயங்கள் அலசி ஆராயப்படும் போது ஆண்டவராகிய இயேசு ஒரே திருச்சபையை ஏற்படுத்தித் திருத்தூதர்களைப் புனித பேதுருவின் தலைமையில் அடிக்கற்களாகக் கொண்டு செயல்படப் பணித்ததிலிருந்து அவர்கள் வழிவழி வரும் திருப்பணியாளரின் உருவாக்கம் எவ்வாறு பல மாற்றங்களைக் கண்டு வந்திருக்கின்றது என்று நோக்குவது பொருத்தமாகும்.



## கிறிஸ்து வழங்கிய பயிற்சி

இயேசு ஏற்படுத்திய முதற்குருக்களாகிய திருத்தூதர் இயேசுவுடன் வாழ்ந்து, பயணம் செய்து, உண்டு, குடித்து அவ்வப்போது அறிவுரைகளையும் பெற்றுத், தம் வழிகாட்டுதல்களையும் பெற்றுத், தம் பயிற்சியைப் பெற்றனர். (முதற் சீடர்களை அழைத்தல். மத். 4:18-22; மாற். 1:16-20; 3:13-19; லூக். 5:1-12; 27-32; யோவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1:35-42) பன்னிருவரும் தெரியப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டு அனுப்பப்படல். மத். 10:1-11:1; மாற். 6:6ஆ-13; லூக். 6:12-16; 9:1-6; விதைப்பவர் உவமை சீடருக்கு விளக்கப்படல். மத். 13:18-23; மாற். 4:13-20; பேதுரு இயேசுவை மெசியாவாக ஏற்பதும் அவர் தலைவராக ஏற்படுத்தப்படலும் மத். 16: 13-20; யோவா. 21:15-19; இயேசுவின் சீடராவதற்குரிய தகுதிகள் - மத். 19:16-30; 20:20-28; மாற். 9:33-37; 10:17-31; லூக். 14:25-33; திருத்தூதருக்கு இறுதி அறிவுரையும் அனுப்பப்படுதலும், மத். 28:16-20, மாற். 16:15-18; லூக். 24:36-49; யோவா. 20:19-23; பெரும் அளவில் சீடர்கள் களப் பயிற்சிக்கு அனுப்பப்படல் லூக். 10:1-20; சீடருக்கான பொது அறிவுரைகள் லூக். 17:1-10; யோவா. 13:31-35; 15:18-27; மீட்டல் அறிவுரைகள் லூக். 24:13-49; சில சீடர்கள் விலகல் யோவா. 6:66; சீடர்களுக்குச் செயல்முறை விளக்கம் யோவா 13:2-16.

> இயேசு ஏற்படுத்திய முதற்குருக்களாகிய திருத்தூதர் இயேசுவுடன் வாழ்ந்து, பயணம் செய்து, உண்டு, குடித்து அவ்வப்போது அறிவுரைகளையும் பெற்றுத், தம் வழி காட்டுதல்களையும் பெற்றுத், தம் பயிற்சியைப் பெற்றனர்.

மேற்குறிப்பிட்ட விவிலியப் பகுதிகளில் ஒரு தகுதிவாய்ந்த திருப்பணியாளருக்குரிய முழுமையான பயிற்சியின் அம்சங்களைக் காணலாம். இயேசுவின் பயிற்சியில் அறிவுரை (பொது அறிவுரை, விசேட அறிவுரை), அறிவுரை விளக்கம், கண்டிப்புடன் கூடிய அறிவுரை, களப்பயிற்சி, செயல் முறைப்பயிற்சி, (கட்டாயப் பயிற்சியல்ல - சீடர்கள் விலகல்), மீட்டல் பயிற்சி, பிழைகள் திருத்தப்படல் போன்ற எல்லா அடிப்படை அம்சங்களையும் காணலாம்.

## திருத்தூதர் காலம் - 4ம் நூற்றாண்டு வரை

இயேசு தமது சீடர்களைத் தம்முடன் வைத்திருந்து நேரடிப்பயிற்சி வழங்கியதைப் போலவே இயேசுவின் சீடரும் பின்னர் தமது சீடருக்குப் பயிற்சி வழங்கினர். இவ்வாறாக பர்ணபா திருத்தூதர் பாவிலுவுடன் பணியாற்றுவதையும் தி.தூ.ப. 11:22; மாற்கு முதலில்

> இயேசு தமது சீடர்களைத் தம்முடன் வைத்திருந்து நேரடிப்பயிற்சி வழங்கியதைப்போலவே இயேசுவின் சீடரும் பின்னர் தமது சீடருக்குப் பயிற்சி வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிலுவுடனும் பர்ணபாவுடனும் பணியாற்றுவதையும் தி.தூ.ப. 12:25, பின்னர் பேதுருவுடன் பணியாற்றுவதையும் காணலாம். 1 பேதுரு 5:13.

திருத்தூதரின் வாரிசுகளாகிய குருக்கள் உட்பட மற்றவர்களுக்கு அறிவுரை கூறி வழிநடத்தும் பணியில் ஈடுபட்டு வந்தோரில் காணப்பட்ட குறைபாடுகளையும் இடைவெளிகளையும் நிரப்புவோராகப் பல்வேறு அருங் கொடைகளைப் பெற்றோர் விளங்கினர் என புனித பாவிலு குறிப்பிடுகின்றார். (1 கொரி. 12:18).

ஆரம்பகாலத்திலிருந்தே குருத்துவ நிலைக்கான பல்வேறு படிமுறைகள் இறுக்கமாகப் பேணப்பட்டு வந்தன. கீழ்மட்டத்திலுள்ளோர் பயிற்சியின் மூலம் தம் தகுதியை நிரூபித்ததன்பின்பே அடுத்த உயர் மட்டத்திற்குச் செல்லக்கூடியதாயிருந்தது. ஒவ்வொரு நிலையிலும் அவரவர்க்குரிய கடமைகள் தெளிவாக வகுக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வந்தது. 2ம் நூற்றாண்டின் முடிவுப்பகுதியில் பல முக்கிய நகரங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த மறைக் கல்விப் பயிலகங்கள் கிறிஸ்தவத்தைத் தழுவக் காத்திருப்போருக்கான பயிற்சி மையங்களாக மட்டுமல்ல, குருத்துவ நிலையின் ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கான பயிற்சிக் கூடங்களாகவுமிருந்தன.

**தகுதிகள்:-** இறைவனின் திருச்சபையைத் திருப்பணியாளர் ஆண்டு வழி நடத்துவதைத் தமது கடமையாகக் கொண்டிருப்பதால் இவர்களுக்குச் சில அடிப்படை உள, ஒழுக்கவியல் தகுதிகள் இருக்கவேண்டுமென புனித பாவிலு குறிப்பிடுகின்றார். ஆயராக அல்லது திருத்தொண்டராக ஏற்படுத்தப் படுவோர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைப் பற்றிக் குறிப்பிடும் போது சபைக்கண்காணிப்பாளராக இருப்பவர் குறைச்சொல்லுக்கு ஆளாகாதவராகவும், ஒரு மனைவி கொண்டவராகவும், அறிவுத் தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல் ஆகியவற்றை உடையவராகவும் இருக்கவேண்டும். அவர் குடி வெறிக்கும், வன்முறைக்கும் இடம் கொடாது கனிந்த உள்ளத்தவராய் இருக்க வேண்டும். திருச்சபையில் புதிதாகச் சேர்ந்த ஒருவர் கண் காணிப்பாளராகக் கூடாது. அவ்வாறு ஆவாரானால் அவர் தற்பெருமை கொள்ளலாம். 1 திமோத். 3:2-7; திருத்தொண்டர்களும் கண்ணியமுடையவர்களாக இருக்க வேண்டும்... தூய மனச்சான்று உடையவர்களாய் விசுவாசத்தின் மறைபொருளைக் காத்து வரவேண்டும். முதலில் இவர்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும்....... 1 திமோத். 3:8-13.

ஆதித்திருச்சபையில் மேலும் தமது பாவங்களுக்காகப் பகிரங்கமாகப் பாவப்பரிகாரம் செய்யும் கட்டாயத்திற்குள்ளானோர், கடும் நோயுற்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுழுக்குப் பெற்றோர், மேலும் தம்மைத் தாமே அண்ணகராக்கிக் கொண்டோர் (உ-ம் ஒறிஜின்) போன்றோரும் திருப்பணி நிலைக்குத் தகுதியற்றோராகக் கருதப்பட்டனர். ஆயராகத் தெரியப்படுவோர் 50 வயது நிறைந்தோராகவும் குருக்களாகத் தெரிவாவோர் 30 வயதை பூர்த்தி செய்தோராகவுமிருக்க வேண்டும்.

துவக்க காலத்தில் திருப்பணியின் பல்வேறு நிலையிலுள்ளவர்க்கான தெரிவு திருத்தூதர்களது அல்லது அவர்களது சீடர்களது தீர்மானத்திலேயே தங்கியிருந்தது. ஆனால் இவர்கள் பொதுநிலையினரின் விருப்பு வெறுப்புக்களுக்கும் மதிப்பு அளித்து வந்ததாகவும் அறியக் கூடியதாயுள்ளது என புனித கிளமன்ற் (+ 99) குறிப்பிடுகிறார். சிறிது காலத்தின் பின் (3ம் நூற்றாண்டில்) ஆயராக ஒருவர் தெரியப்படுவது அப்பகுதிப் பொது நிலையினரதும் அம்மாகாணத்தின் பிற ஆயர்களினதும் முடிவிலும் தங்கியிருந்தது. இதன்படி புனித சிப்பிரியன் (C.200-258) குறிப்பிடுவது போல மக்கள் தம் ஆயரைத் தெரிந்தெடுத்தபின் அம்மாகாணத்துப் பிற ஆயர்கள் அத்தெரிவை அங்கீகரிக்கவும் அத்தெரிவு முறையாக நடந்தது என உறுதிப்படுத்தவும் பின்னர் தெரியப்பட்ட ஆயரை அபிஷேகம் செய்யவும் உரிமையுடையவர்களாயிருந்தனர். ஆர்ல்ஸ் (Arles) நகரத்தில் 314ல் கூடிய ஆயர் பேரவை முடிவின்படியும் நீசேயாவில் 325ல் கூடிய முதலாவது பொதுச்சங்கத்தின் தீர்மானத்தின்படியும் குறைந்தது மூன்று ஆயர்களாவது இந்த அபிஷேகத்தின் போது பிரசன்னமாயிருக்க வேண்டும்.

**மணத்துறவு:-** ஆரம்பகாலத்தில் மணத்துறவு கட்டாயமானதொன்றாகக் கருதப்படவில்லை. முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் இதுபற்றிய திருச்சபையின் சட்டம் எதுவும் இருக்கவில்லை. திருத்தூதர் கடைப்பிடித்து வந்த விதிமுறைகளிலும் இதுபற்றிய வரைவு எதுவும் இருக்கவில்லை. மணம் முடித்த ஒருவர் குருத்துவ நிலைக்குத் தெரிவானால் அவர் தொடர்ந்து மணவாழ்க்கையில் ஈடுபடக்கூடியதாயிருந்தது. ஆனால் இவ்விதிமுறை குருத்துவத் திருநிலைப்படுத்தலுக்கு முன் மணம் முடித்தவர்களுக்கு மட்டும்தான் பொருந்தியது. குருத்துவ உயர் படிகளில் உள்ள ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர் தமது திருநிலைப்படுத்தலின் பின் திருமண பந்தத்திற்கு உட்பட முடியாதிருந்தது. இறைபணியில் ஈடுபடுவோர் மணவாழ்க்கையில்

> இறைபணியில்
> ஈடுபடுவோர்
> மணவாழ்க்கையில்
> ஈடுபட்டிருப்பதிலும்
> பார்க்க மணத்துறவு
> வாழ்க்கையில்
> ஈடுபடுவதே மேல் என்று
> கிறிஸ்துவின்
> வார்த்தைகளே
> பரிந்துரைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருப்பதிலும் பார்க்க மணத்துறவு வாழ்க்கையில் ஈடுபடுவதே மேல் என்று கிறிஸ்துவின் வார்த்தைகளே பரிந்துரைக்கின்றன (மத்.19:12). புனித பாவிலுவும் இதை வலியுறுத்துகின்றார். (1கொரி. 7:7) ஆரம்பத்திலிருந்தே ஆயர்களும் குருக்களும் மணத்துறவு நிலையைத் தமது நிலைக்கு ஏற்புடைய தாகக் கருதிப் பின்பற்றி வந்துள்ளனர். முதலில் குருத்துவ மணத்துறவு ஒரு சட்டமாக ஸ்பானிய தேசத்தில் நடைமுறைக்கு வந்தது. அங்கு எல் விராவில் (Elvira) 306ம் ஆண்டு நடந்த ஆயர் பேரவையில் குருத்துவ நிலைக்குட்படுவோர் மணத்துறவு மேற்கொள்ள வேண்டுமென்பதைச் சட்ட மாக்கியது.

## 4ம் நூற்றாண்டிலிருந்து மத்திய கால ஆரம்பம் வரை (7ம் நூற்றாண்டு வரை)

இதற்கு முன்னர் வழக்கிலிருந்த குருக்களுக்கான பயிற்சி முறைகளே பொதுவாக 4ம் நூற்றாண்டிலிருந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. 4ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருச்சபைக்குக் கிடைத்த மத சுதந்திரம் குருக்களின் பயிற்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம். மறை சாட்சிகள் யுகத்தில் திருச்சபையின் தந்தையர் கண்காணிப்பில் இருந்த இறுக்கமான கட்டுப்பாடு சற்றுத்தளர்ந்தது எனலாம். இதன் விளைவுகள் சில நன்மைகளையும் அதே வேளையில் தீமைகளையும் கொணர்ந்தன. ஒருபுறம் மடத்துறவு வாழ்க்கை வளர்ச்சியடைய மறுபுறம் பேதகங்களும், பின் கட்டுப்பாடு தளர்ந்த ஒரு வாழ்க்கை முறையும் உருவாக இதனால் குருத்துவப்பயிற்சியும் பாதிப்படைந்தது எனலாம்.

குருக்களை உருவாக்குவதற்கான மையங்கள் ஆங்காங்கே தோற்று விக்கப்பட்டன. வெர்செல்லி ஆயர் எயுசேபியுஸ் (283 - 371) ஹிப்போ ஆயர் புனித அகுஸ்தீனார் (354 - 430) ஆகியோர் தத்தம் இடங்களில் தங்கள் மறைவட்ட குருக்களுக்கென ஒரு குழும வாழ்க்கை முறையை ஏற்படுத்தி இக்குழுமங்களை இளைஞரான குருத்துவ ஆரம்ப நிலையிலுள் ளோர் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த குருக்களிடம் பயிற்சி பெறும் குருமடங்களாக உருவாக்கினர் என அறிய முடிகிறது. பிற ஆயர்களும் படிப்படியாக இம்முறையைப் பின்பற்றத்துவங்கினர். ஸ்பானியாவில் குருத்துவ நிலைக்குத் தயாராகும் இளைஞருக்கெனத் தனி நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டன. இத்தாலியில் கிராமப்புறங்களில் இருந்த குருக்கள் இளம் குருக் களைத் தம்முடன் வைத்திருந்து அவர்களுக்குரிய பணியை நிறைவேற்றப் பயிற்சியளித்து வந்தனர். பின்னர் தென் பிரான்சில் இருந்த லெறின்ஸ் (Lerins) போன்ற பெயர் பெற்ற துறவு மடங்கள் குருக்களுக்கான பயிற்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடங்களாகவும் செயல்பட்டன. பல புகழ் பெற்ற ஆயர்கள் இதுபோன்ற மடாலயங்களில் தங்கள் பயிற்சியைப் பெற்றவர்களாகவோ அல்லது சொற்ப காலத்தை அங்கு கழித்தவர்களாகவோ இருந்தனர்.

4ம், 5ம் நூற்றாண்டுகளில் குருத்துவ நிலையிலுள்ளோரின் முதன்மைப் பணியாகிய நற்செய்தி அறிவுப்பணி பற்றியும், ஆன்மாக்களை வழிநடத்தும் பணிபற்றியும் அறிந்திருத்தல் என்பது ஒரு பரந்த இறையியல். மேய்ப்புப் பணிபற்றிய அறிவையும் செயல்முறையையும் அறிந்திருப்பதன் வெளிப் பாடாகக் கருதப்பட்டது. ஆனால் இந்நாட்களில் திருப்பணிப் பயிற்சிக்கான பாடவிதானத் திட்டம் பற்றிய தகவல்கள் போதியளவு இல்லையென்றே கூறவேண்டும். குருக்களாக விரும்புவோர் அப்பகுதியிலுள்ள மற்றக்குருக்களால் திருவிவிலியம் பற்றிய அடிப்படை அறிவு, திருவருட்சாதனங்களை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற விதிமுறைகள் மற்றும் மேய்ப்புப் பணி சம்பந்தமான குறிப்புகள் ஆகியவற்றைப் பெற்றனர். எனினும் குருத்துவக் கல்வியின் இதயம் என்று கருதப்பட்டது திருவிவிலிய அறிவும் அதனைப் புரிந்து விளக்கும் ஆற்றலுமாகும்.

## மத்திய காலப்பகுதி (7ம் நூற்றாண்டிலிருந்து - 15ம் நூற்றாண்டு வரை)

5ம் நூற்றாண்டிலிருந்து பரந்த உரோம சாம்ராஜ்யத்தைப் படிப்படியாக வடக்கிலிருந்து வந்த வீரம் செறிந்த அதேவேளையில் கல்வி கலாச்சாரத்தில் பின்தங்கியிருந்த ஜேர்மானிய நாடோடி மக்கள் கூட்டத்தினர் ஆக்கிரமிக்கத் துவங்கியிருந்தனர். இவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியபோது இவர்களைக் கல்வியறிவுள்ளவர்களாக்கும் பணியைத் திருச்சபையே செய்ய வேண்டியிருந்தது. பல நூற்றாண்டுகள் தொடர்ந்த இப்பணியை கிறிஸ்தவ மடாலயங்களே செய்து வந்தன. இங்கு வழங்கப்பட்ட அடிப்படைப் பாடத்திட்டத்தில் முதலில் மூன்றும், பின்னர் நான்குமாக (trivium, quadrivium) ஏழுவித பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவை முறையே இலக்கணம், அளவையியல் தர்க்கசாஸ்திரம் எனும் மூன்றும் கணிதம், திரிகோண கணிதம், வான சாஸ்திரம், சங்கீதம் என்பனவுமாகும். இவற்றுள் இலக்கணப் பாடத்தில் இலக்கிய நூல்களும், திருச்சபைத் தந்தையரது எழுத்துக்களும் அடங்கின. இறையியலும் இங்குதான் கற்பிக்கப்பட்டது. இதில் திருவிவிலியத்தைப் புரிந்துகொள்வதற்கான பாடங்களும் மேய்ப்புப்பணி சம்பந்தமான நடைமுறை ஒழுங்குகளும் அடங்கின. துர்அதிர்ஷ்டவசமாக இங்கு பயிற்சி பெற்ற குருக்களுக்கு ஆன்மீகத்திலும், தவமுயற்சிகளிலும் பயிற்சியும் மிகவும் குறைவாகவே வழங்கப்பட்டது எனலாம். இக்காலத்திலும் இதற்குப்பின்னரும் குருக்களின் பணியிலும் வாழ்விலும் காணப்பட்ட குறைபாடுகளுக்கு இதுவும் ஒரு காரணம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8ம், 9ம் நூற்றாண்டுகளில் குருக்களின் சராசரி இறையியல் அறிவு எவ்வளவுக்கு கீழ்மட்டத்தில் இருந்தது என்பதற்கு 769ல் பிரெஞ்சு மாமன்னர் சார்ள்ஸ் (Charlemagne) வெளியிட்ட ஒரு பிரகடனம் சான்று பகர்கிறது. அதில் போதியளவு (இறை) அறிவின்றி இருக்கும் குருக்கள் முயற்சியெடுத்துத் தம் அறிவை வளர்ப்பதில் அக்கறையின்றி இருந்தால் அவர்கள் தம் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. இறைவனின் சட்டத்தை அறியாதோர் எவ்வாறு அதைப்பிறருக்கு அறிவிக்க முடியும்? என்று அவர் வினவினார். துறவிகளையும் குருக்களையும் பயிற்றுவிப்பதற்குக் கல்விக் கூடங்களைப் பல்வேறு இடங்களில் நிறுவினார். பிரான்சில் போதியளவு தரமான இறையியல் வல்லுனர்கள் இல்லாதிருந்ததால் இத்தாலி, இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து அவர்களை வரவழைத்தார்.

இக்காலத்தில் குருக்களுக்கு இருக்க வேண்டிய குறைந்த பட்ச இறையியல் அறிவு எவ்வளவு என்பதை 802ம் ஆண்டு ஜேர்மனியில் உள்ள ஆக்கன் (Aachen) நகரில் நடந்த ஆயர் பேரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளிலொன்று சுட்டிக்காட்டுகின்றது.

இக்காலத்தில் குருக்களுக்கு இருக்க வேண்டிய குறைந்த பட்ச இறையியல் அறிவு எவ்வளவு என்பதை 802ம் ஆண்டு ஜேர்மனியில் உள்ள ஆக்கன் (Aachen) நகரில் நடந்த ஆயர் பேரவையில் எடுக்கப்பட்ட முடிவுகளிலொன்று சுட்டிக்காட்டுகின்றது. அதன்படி குருத்துவ நிலையிலுள்ளவர்கள் விசுவாசப் பிரமாணம் (புனித அத்தனாசியாரின் விசுவாசப் பிரமாணம்), பரலோக மந்திரமும் அதன் விளக்கமும் ஆகியவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மற்றும் பல்வேறு செபங்கள், திருச்சடங்குகள் நிறை வேற்றும் முறைகள் அடங்கிய கைநூலில் உள்ள விடயங்கள், திருப்பலி வாசகங்கள், நற்கருணை மன்றாட்டுக்கள், பேய் ஓட்டும் செபங்கள், ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கும் செபங்கள், பாவப்பரிகார (செபங்கள் முறைகள்) ஒப்பரவு அருட்சாதனக் கைநூல், திருநாள் தேதிகளைக் கணிக்கும் முறை, மறையுரையாற்றுவதற்குதவியாகத் திருச்சபைத் தந்தையரின் மறையுரைகள், உரோமைய (லத்தீன்) வழிபாட்டுப்பாடல் நூலில் உள்ள பாடல்களில் பரிச்சயம் போன்ற விடயங்கள் எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி பார்க்குமிடத்து திருவிவிலியம் மற்றும் இறையியலில் ஆழமான அறிவு வலியுறுத்தப்படாமல் வெறுமனே மனப்பாடம் செய்யவேண்டிய செபங்களும், நிறைவேற்ற வேண்டிய சடங்கு முறைகள் பற்றிய அறிவு மட்டுமே போதுமானவையாகத் தோன்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரபானுஸ் மவுறுஸ் (Rabanus Maurus) எனும் புல்டா (Fulda) மடாலய மடாதிபதி 819ல் குருக்களாவதற்கான பயிற்சிப்பாடத்திட்டம் ஒன்றை வரைந் துள்ளார். இதன்படி திருவிவிலியத்தைக் குருக்கள் அதன் வரலாற்று, மறை பொருள் மற்றும் ஒழுக்கவியல் நோக்கில் அறிந்தவர்களாகவும் மறையுரை யாற்றக்கூடிய ஆற்றலுள்ளவர்களாயும் இருக்கவேண்டும். 826ம் ஆண்டு பாப்பு 2ம் யூஜின் உரோமையில் கூடிய ஒரு சங்கத்தில் ஒவ்வொரு பேரால யத்துக்கும் அருகில் குருத்துவ நிலைக்கு ஆயத்தம் செய்யவும் இளம் துறவிகள் திருச்சபையின் ஒழுக்கமுறைகளில் பயிற்சிபெறவென ஒரு மையம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று சட்டம் இயற்றினார். இந்தச் சட்டம் பின்னர் நடந்த சில பொதுச்சங்கங்களில் வலியுறுத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. இங்கு 1179ல் நடந்த 3ம் லாத்தரன் சங்கத்தையும் 1215ல் நடந்த 4ம் லாத்தரன் சங்கத்தையும் குறிப்பிடலாம். அதன்படி இங்கு குருத்துவப்பயிற்சி பெறுபவர்க்குப் பொறுப்பாக ஒரு இறையியல் வல்லுனர் நியமிக்கப்பட்டு மாணவர்க்கு திருவிவிலியத்திலும் மேய்ப்புப்பணி இறையியலிலும் பயிற்சி வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. ஆனால் பெரும்பாலான குருக் களுக்கு பேராலயங்களுடன் அல்லது மடாலயங்களுடன் இணைந்திருந்த இந்த மறைக்கல்வி மையங்களில் கற்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. எனவே பெரும்பாலான குருக்கள் குறிப்பாகக் கிராமப் புறங்களில் பணியாற்றி வந்த குருக்கள் திருவழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்றக் கூடியவர்களாக மட்டுமிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் உதவிக்குருக்களாக மட்டுமே யிருந்தனர். மத்திய காலப்பகுதியில் பெரும்பகுதியில் குருக்களின் நிலை இப்படியே இருந்தது.

மத்திய காலப்பகுதியின் இறுதிப்பகுதியில் குருத்துவ உருவாக்கம் திருச்சபையில் ஏற்பட்ட உட்பிரச்சினைகள், பாப்பரசர்கள் நாடு கடந்த நிலையில் பிரான்சில் உள்ள அவிஞ்ஞோனில் வாழ்ந்தமை (1307 - 1377) அதனைத் தொடர்ந்து வந்த மேற்கத்தையப் பிரிவினை (1378 - 1409) போன்றவற்றால் பெரும்பாதிப்புக்குள்ளானது எனலாம். குருக்கள் மிகவும் அரிதாகவே திருப்பலி நிறைவேற்றினர். 1314ல் இத்தாலியில் உள்ள ரவென்னா நகரில் நடந்த ஆயர் பேரவை எடுத்த தீர்மானங்களிலொன்று குருக்கள் ஒரு வருடத்தில் ஒரு முறையாவது திருப்பலி ஒப்புக்கொடுக்க வேண்டு மென்பதாம் (Canon - 13). பின்னர் தரகோனா நகர் ஆயர் பேரவையில் 1317ல் மூன்று திருப்பலிகளாவது குருக்கள் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், பின் 1324ல் றொலேடோ (Toledo) நகரில் கூடிய ஆயர் பேரவையில் குருக்கள் வருடத்தில் குறைந்தது நான்கு முறையாவது திருப்பலி ஒப்புக் கொடுக்கக் கேட்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ட்டின் லூத்தரின் காலத்துக்கு முற்பட்டகாலத்தில் 15ம் நூற்றாண்டின் இறுதியிலும் 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பொதுவாக எல்லா நிலைகளிலும் குருத்துவத்தில் இருந்தவர்களின் ஆன்மீக ஒழுக்க நிலைமை போற்றுதற்குரியதாக இருக்கவில்லை என்பதிலிருந்து இக்காலத்துக் குருத்துவப் பயிற்சி எத்தன்மையாயிருந்திருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. ஐரோப்பா முழுவதிலும் அனேகமாக எல்லா முக்கிய நகரங்களிலும் பெரும்பாலும் பல துறவற சபைகளின் பங்களிப்புடன் பல சர்வகலாசாலைகள் சிறந்து விளங்கினாலும் குருத்துவத்திற்கான விசேட பயிற்சி வேண்டப்பட்டதொன்றாகவே இருந்தது. ஆன்மீக தாகங் கொண்ட புனித வாழ்க்கை வாழ்ந்த குருக்கள், ஆயர்கள் ஒரு குறிப்பிடத்தக்களவு இருந்தாலும் இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. குருமடங்கள் இன்னும் ஏற்படுத்தப்படாத நிலையில் ஒரு சில குருமாணவரே பல்கலைக்கழகங்களில் பயிலக்கூடியதாயிருந்தது. அனேகமான குருக்களுக்கு குறிப்பாகக் கீழ்மட்டத்திலிருந்த குருக்களுக்கான விவிலிய, இறையியல் அல்லது குருத்துவ நிலைக்கான் மற்றைய பயிற்சிகள் மிகக் குறைவாகவே வழங்கப்பட்டன. குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவதற்கு அடிப்படைக் கத்தோலிக்கக் கோட்பாடுகளில் ஒரு மேலோட்டமான அறிவு மட்டுமே போதுமானதாயிருந்தது. அத்துடன் குருவாவதற்கு ஒருவருக்கு இலத்தீன் மொழி புரியாவிட்டாலும் வாசிக்கத் தெரிந்தாலே போதுமானதாயிருந்தது. எனவே குருக்களின் எண்ணிக்கை போதுமானதாகவிருந்தாலும் ஆன்மாக்களைப் பராமரிக்கும் பணி அவர்களால் சிறப்பாகச் செய்யப்படவில்லை என்றே கூற வேண்டும். மணத்துறவு பேணாது வாழ்ந்து வந்த குருக்களுக்குத் தண்டனை போதியளவு வழங்கப்படவில்லை. அவர்களிடமிருந்து தண்டப்பணம் மட்டுமே அறவிடப்பட்டமையால் அவர்கள் திருந்தி நடக்கப்பெரிதாக முயற்சியெதுவும் மேற்கொள்ளவில்லை.

அனேகமான குருக்களுக்கு குறிப்பாகக் கீழ்மட்டத்திலிருந்த குருக்களுக்கான விவிலிய, இறையியல் அல்லது குருத்துவ நிலைக்கான மற்றைய பயிற்சிகள் மிகக் குறைவாகவே வழங்கப்பட்டன. குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவதற்கு அடிப்படைக் கத்தோலிக்கக் கோட்பாடுகளில் ஒரு மேலோட்டமான அறிவு மட்டுமே போதுமானதாயிருந்தது. அத்துடன் குருவாவதற்கு ஒருவருக்கு இலத்தீன் மொழி புரியாவிட்டாலும் வாசிக்கத் தெரிந்தாலே போதுமானதாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை இப்படியிருந்தாலும் இக்காலத்தில் திருச்சபைக்குள்ளிருந்து குருக்களின் நிலையையும் குறிப்பாக அவர்களுக்குரிய பயிற்சியையும் ஒழுங்குபடுத்தச் சில காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உ-ம்: புனித கயித்தார் (St. Cajetan) (1480 - 1547) குருக்களின் ஆன்மீகத்தையும் இறையறிவையும் வளர்க்க இவர் வழங்கிய பங்களிப்பு காத்திரமானது. அந்நாட்களில் திருச்சபையில் தலையிலும் பிற உறுப்புக்களிலும் நிலவிய சீர்கேடுகள் இவரைச் சிந்தித்துச் செயலாற்ற வைத்தன. குருக்களின் ஆன்ம தாகத்தைத் தூண்டியெழுப்ப ஏதாவது செய்ய வேண்டுமென்று இவரும் இவர் புத்துயிர் கொடுத்த குருக்கள் சபையாகிய இறையன்புச் சபையினரும் (Confraternity of Divine Love) தீர்மானித்தனர். இந்த முயற்சியின் மையமாக இருந்து செயல்பட ஒரு சபையை (தியாற்றின் - Theatines) ஏற்படுத்தினார். அதன் முதல்வராக பீற்றர் கரப்பா (Peter Caraffa) (பின்னர் பாப்பரசர் 6ம் பாவிலு) ஏற்படுத்தப்பட்டார். இச்சபையினரின் குறிக்கோள் பல அம்சங்களின் தொகுப்பாக விருந்தது. அவை நோயாளருக்குதவுதல், திருவருட்சாதனங்களை அடிக்கடி நாடுவதைத் தூண்டுதல், குருத்துவநிலையிலுள்ளவர்களின் பற்றற்ற பண்பை மீளவும் ஏற்படுத்தல், அவர்களின் ஒழுங்கும் கிரமமுமான வாழ்க்கை முறையை ஏற்படுத்தல், இறையியல் கல்வியை குறிப்பாக திருவிவிலியக் கல்வியை ஊக்குவித்தல், போதிப்பதிலும் மேய்ப்புப்பணியில் ஈடுபடுவதிலும், ஆர்வத்தைத் தூண்டுதல், திருவழிபாட்டைத் தகுந்த முறையில் நிறைவேற்றத் தூண்டுதல் ஆகியன. இச்சபையினர் ஒரு சமூகமாக வாழ்வர். தரித்திர வாக்குறுதி ஆணித்தரமாகப் பரிந்துரைக்கப்பட்டது. இந்த ஏற்பாடு பின்னர் திரிதெந்தீன் சபையின் குருமடங்களை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைக்கு முன்னோடியாக விளங்கியது எனலாம்.

> குருக்களின் ஆன்ம தாகத்தைத் தூண்டியெழுப்ப ஏதாவது செய்ய வேண்டுமென்று இவரும் இவர் புத்துயிர் கொடுத்த குருக்கள் சபையாகிய இறையன்புச் சபையினரும் (Confraternity of Divine Love) தீர்மானித்தனர்.

## திரிதெந்தீன் சங்கத்தீர்மானம் (1545 - 1563)

சங்கத்தின் இறுதிக் கட்டத்தில் 23ம் அமர்வில் 1563 ஜுலையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஆயர்கள் வருங்கால குருக்களை உருவாக்குவதற்கென தத்தம் மறைவட்டங்களில் குருமடங்களை ஏற்படுத்தப்பணிக்கப்பட்டனர். உடனடியாகவே சங்கத்தீர்மானம் நிறைவேற்றப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1565ல் பாப்பு 4ம் பத்திநாதர் உரோமை மறைமாவட்டத்திற்கென ஒரு குருமடத்தை உருவாக்கினார். குருமடங்களை நிறுவுவதில் முன்னணியில் இருந்து செயல்பட்டவர்களுள் ஒருவர் மிலான் நகரப் பேராயர் புனித சார்ள்ஸ் பொறோமேயோ. அவர் முதலில் புனித ஸ்நாபக அருளப்பரின் பாதுகாவலில் 150 பேர் படிக்க வசதியுடைய ஒரு பெரிய குருமடத்தை ஏற்படுத்தினார். மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் மூன்று ஆயத்த குருமடங்களையும் நிறுவினார். முதலில் தமது குருமடங்களை இயேசு சபையினரைக் கொண்டு நிர்வகித்தார். பின்னர் அவற்றின் பொறுப்பு அவரே ஏற்படுத்திய துறவற சபையாகிய புனித அம்புறோசியாரின் தியாகிகள் (Oblates of St. Ambrose) சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரான்சில் றெயிம்ஸ் (Reims) பேராயர் குருமடங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் 17ம் நூற்றாண்டிலிருந்து தான் இந்த செயல்திட்டம் முழுவீச்சுடன் முன்னெடுத்துச் செல்லப்பட்டது எனலாம். இதில் முன்னணியில் நின்றவர் புனித வின்சென்ற் டி போல், ஜோன் J. ஒலியே, மற்றும் புனித ஜோன் யூட்ஸ் ஆகியோர். பின்னர் இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட குருமடங்களுக்கு இவை முன்னோடி களாயிருந்தன. முதலில் புனித வின்சென்ற் டி போல் இங்கு குருத்துவத் திருநிலைப்படுத்தலுக்கு ஆயத்தம் செய்வோருக்கு 10 நாள் நீடிக்கும் தொடர் உரைகளை வழங்கி வந்தார். இதுதான் பின்னர் அவர்களது மெய்யியல் கல்விக்கும் குருத்துவ நிலைப்படுத்தலுக்கும் இடையே 2 அல்லது 3 வருடங்கள் நீடிக்கும் ஒரு பயிற்சித் திட்டமாக மாறியது. இவர் 1635ல் இறையியல் மாணவர்க்கென ஒரு குருமடத்தை ஏற்கெனவே இருந்த ஒரு சர்வ கலாசாலை வளாகத்திலே நிறுவினார். 1642ல் இவர் ஒரு சிறிய குருமடத்தை நிறுவினார். 18ம் நூற்றாண்டின் இறுதியில் பிரெஞ்சு புரட்சிக்கு முன் இவரது சபையினர் பிரான்சில் 53 பெரிய குருமடங்களையும் 9 சிறிய குருமடங்களையும் நிர்வகித்து வந்தனர். இத்தொகை பிரான்சில் அப்போது இயங்கிய குருமடங்களின் மூன்றிலொரு பங்காகும்.

தற்கால குருமட அமைப்புக்கு முக்கிய பங்களிப்பை வழங்கிய இன்னுமொருவர் ஜோன் J. ஒலியே (Olier) என்பவர். இவருடைய திட்டம் குருமடங்களை நிர்வகிப்பதற்கென்றே ஒரு துறவறச்சபையை ஏற்படுத்துவதா யிருந்தது. இவர் 1642ல் புனித சுல்பிஸ் (St. Sulpice) ஆலயப் பங்கில் தமது முதல் குருமடத்தை ஏற்படுத்தினார். இதனை ஒரு தேசிய குருமடமாக விரிவுபடுத்த இவர் செயல்பட்டார். இரண்டு வருடங்கள் முடியுமுன் பிரான்சில் உள்ள மறைவட்டங்களில் இருபது தமது குருமாணவர்களை இங்கு அனுப் பியது. 1651ல் இந்தக் குருமடத்தின் ஒழுங்கு முறைகள் பிரான்சில் உள்ள மற்றக் குருமடங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தத்தம் பிரத்தியேகத் தேவைகளுக்காகத் தழுவியமைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித ஜோன் யூட்ஸ் 1663ல் கேன் (Caen) எனுமிடத்தில் தமது முதல் குருமடத்தை ஏற்படுத்தினார். 18ம் நூற்றாண்டில் இவர் ஏற்படுத்திய துறவற சபையினர் இயேசுவினதும் மரியாளினதும் இருதய சபையினர் (Congregation of the Sacred Hearts of Jesus and Mary) 40 குருமடங்களை நிர்வகித்து வந்தனர்.

> பிரான்சில் பயிற்சி பெற்ற குருக்கள் அந்நாட்டில் மட்டுமல்ல மற்றநாடுகளுக்கு குறிப்பாக மறைப்போதக நாடுகளுக்குப் பெரும் எண்ணிக்கையில் சென்று மறைப்பணியில் ஈடுபட்டனர். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு பணியாளர்களுள் கணிசமான தொகை திருப்பணியாளர்கள் பிரெஞ்சுக்காரரே.

ஒருவிதத்தில் தற்கால குருமடங்களுக்கு முன்னோடிகளாயிருந்த பிரான்சிலிருந்த குருமடங்கள் 1789ல் ஆரம்பமான பிரெஞ்சுப் புரட்சியினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி மூடப்பட்டாலும் பின்னர் 19ம் நூற்றாண்டில் திரும்பவும் புத்துயிர் பெற்றன. அமெரிக்கா, இங்கிலாந்து, அயர்லாந்து போன்ற மற்றநாடுகளில் தோன்றிய குருமடங்களுக்கும் முன்னுதாரணமாக அமைந்தன. பிரான்சில் பயிற்சி பெற்ற குருக்கள் அந்நாட்டில் மட்டுமல்ல மற்றநாடுகளுக்கு குறிப்பாக மறைப் போதக நாடுகளுக்குப் பெரும் எண்ணிக்கையில் சென்று மறைப்பணியில் ஈடுபட்டனர். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு பணியாளர்களுள் கணிசமான தொகை திருப்பணியாளர்கள் பிரெஞ்சுக்காரரே.

## மறைப்போதக நாட்டுக் குருமடங்கள்

இன்று மறைப்போதக நாட்டில் உள்ள குருமடங்கள் சில தனித்துவ பண்புகளைக் கொண்டுள்ளன. உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்குப் பிரமாணிக்கமாக இருந்து கத்தோலிக்க தன்மையைக் காக்கும் வேளையில் அந்தந்த இடங்களில் வாழும் மக்களின் பண்பாடு, கலாச்சாரம், மொழி ஆகியவற்றின் சிறப்பியல்புகளையும் கருத்தில் கொண்டு பண்பாட்டு மயமாக்கல், சுதேசிய மயமாக்கல் போன்றவற்றுக்கும் குருத்துவப்பயிற்சியில் இக் குருமடங்கள் இடம் கொடுக்க வேண்டும்.

17ம் நூற்றாண்டிலிருந்தே உரோமைத் திருப்பீடம் மறைப் போதக நாடுகளில் சுதேச குருக்களை உருவாக்கும்படி கூறிவந்தாலும் 19ம் நூற்றாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தான் இதற்குரிய செயல்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

இதன்படி 13ம் சிங்கராயர் கொடுத்த உந்துதலின் விளைவாக 1893ல் தென் ஆசிய நாடுகளுக்கென கண்டியில் பாப்பரசரின் குருமடம் ஏற்படுத்தப்பட்டது. 1955ல் இது இந்தியாவில் உள்ள பூனாவுக்கு இடம்மாற்றம் செய்யப்பட கண்டியில் இருந்த குருமட வளாகம் தேசிய குருமட வளாகமாக மாற்றப்பட்டது. மறைப்போதக நாடுகளின் பாப்பு (Pope of the missions) எனப்படும்: 15ம் பெனடிக்ற் (1914 - 1922), 11ம் பத்திநாதர் (1922 - 1939) ஆகியோர் முறையே Maximum Illud, Rerum Ecclesiae என்ற அப்போஸ்தலிக்க மடல் வழியாகவும், சுற்றுமடல் வழியாகவும் சுதேச குருமடங்களை ஊக்குவித்து வளர்த்தனர். பின்னர் 12ம் பத்திநாதர் (1939 - 1958) Fidei Donum என்ற சுற்றுமடல் வழியாக பழமை வாய்ந்த மறைவட்டங்கள் புதிதாக உருவாகும் குருமடங்களுக்குத் தேவையான ஆளணி உதவிகளை வளங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பின்னர் 2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி நவீன குருத்துவ உருவாக்கத்துக்கான வழிமுறைகள் உருவாகக் காரணமான 23ம் அருளப்பர் (1958 - 1963) 12ம் பத்திநாதர் பாப்புவின் மடலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தினார். அவற்றுள் சிலவற்றை குறிப்பிட்டுக் காட்டலாம். அவை - மறைபோதக நாடுகளிலுள்ள குருமடங்கள் முற்றிலும் தனிமையான இடங்களில் அமைக்கப்படலாகாது. மக்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றக் கூடியளவுக்கு ஓரளவு சுதந்திரமும் அவர்களுக்கு வழ்ங்கப்பட வேண்டும். அவர்களுக்கு மறை அறிவிப்பியலின் (Missiology) பயிற்சியும், தழுவியமைத்தல் (adaptation) போன்றவற்றில் பயிற்சியும் வழங்கப்படவேண்டும்.

மறைபோதக நாடுகளிலுள்ள குருமடங்கள் முற்றிலும் தனிமையான இடங்களில் அமைக்கப்படலாகாது. மக்களோடு தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றக் கூடியளவுக்கு ஓரளவு சுதந்திரமும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கு மறை அறிவிப்பியலின் (Missiology) பயிற்சியும், தழுவியமைத்தல் (adaptation) போன்றவற்றில் பயிற்சியும் வழங்கப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

தலைமைக்குருவாகிய கிறிஸ்து தமது சீடருக்கு நேரடிப்பயிற்சி வழங்கியதிலிருந்து திருப்பணியாளர் பயிற்சி பல்வேறு மாற்றங்களைக் கண்டிருந்தாலும் அடிப்படையில் கிறீஸ்துவின் பயிற்சிமுறை மிகச்சிறந்ததாக வும் காலத்திற்கேற்றதாகவும் அமைந்திருந்தது. அந்தப் பயிற்சியை அடிப் படையாகக் கொண்டு வடிவமைக்கப்படும் பயிற்சிமுறை எக்காலத்திற்கும் பயன்தரும். காலப்போக்கில் மக்களின் இடம்பெயர்வுகள், கலாச்சாரக் கலப் புக்கள் போர்கள், அரசு - திருச்சபை உறவு மாற்றங்கள் போன்றவற்றால் திருப்பணியாளர் பயிற்சியும் பல சாதக, பாதக விளைவுகளைக் காணவேண்டி யேற்பட்டது. அவ்வப்போது இப்பயிற்சியில் தொய்வு அல்லது தேக்கநிலை ஏற்பட்டாலும் இறையரசின் வளர்ச்சியில் உண்மையான நாட்டம் உள்ளவர்கள் இருந்ததனால் திருப்பணியாளர் பயிற்சிக்கு வழங்கப்படவேண்டிய முக்கியத்து வம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. தற்போது அறிவியல், உளவியல், சமுகத்தொடர்பு, பொருளாதார வளர்ச்சிகள் வேகமாக முன்னேறிவரும்போது திருப்பணியாளர் பயிற்சியும் அவற்றுக்கு ஈடுகொடுத்து புதிய சவால்களை எதிர்நோக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகின்றது. திருச்சபைத் தலைமைப் பீடமும் அவ்வப்போது பொதுவாகத் திருப்பணியாளர் பயிற்சிக்கும் குறிப்பாக எமது போன்ற மறை போதக நாடுகளுக்கு வேண்டிய தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. திருவிவிலியம் - பொது மொழி பெயர்ப்பு TNBCLC, Tindivanam, 1995
2. Bihlmeyer, Karl, revised by Herman Tuckle, tr. by Victor E. Mills and Francis J. Muller, Church History (in 3 vols.) Paderborn 1963.
3. Jedin, Hubert (Ed) History of the Church (in 3 vols abridged edition.) Crossroad - New York, 1992.
4. New Catholic Encyclopedia, Vol – 13, The Catholic University of America, 1967 s.v. Seminary by J.A. O'Donohue;
   s.v. Seminaries, Missionary by O. Magrath




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் போராட்டமும் நற்கருணையும்



அருட்தந்தை. ஸ்ரனி அன்ரனி அ.மதி

## முன்னுரை :

இன்றைய வாழ்வுச் சூழமைவுகள் எமது விசுவாச வாழ்வை அர்த்தமுள்ளதாக்கவும், ஆழமுள்ளதாக வாழ்வின் அநுபவமாக மாற்றிட இறை வெளிப்பாட்டிலும், நற்செய்தியின் ஒளியிலும் பொருள்படுத்தப்படவேண்டிய காலத்தின் கட்டாயமாகும். வாழ்வில் நடந்தேறும் நிகழ்வுகள் இறைவனோடு தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ளப் படுகின்றபோதே இறையநுபவமாகவும், உயிரோட்டமுள்ளதாகவும் எமது விசுவாச வாழ்வை வளப்படுத்த முடியும். இத்தகையதொரு அடித்தளத்தில் தமிழர் போராட்டத்தை நற்கருணையின் ஒளியில் விளங்கிக் கொள்ளவும், போராட்ட வரலாற்றில் எதிர்கொண்ட மடிவுகள், இழப்புக்கள், தியாகம் செறிந்த நிகழ்வுகள் அனைத்தும் நற்கருணை குறித்து நிற்கும் விழுமியங்களைத் தமிழர் சமூகத்தில் உறுதிப்படுத்தப்பட்டு, இன்னும் தன்னலமற்ற, தியாகம் செறிந்த ஒரு நற்கருணைச் சமூகமாக, தமிழர் சமூகமாக மாறிட நற்கருணையின் பல்வேறு முகங்களை இனம் காணவேண்டியது அவசியமாகும். நற்கருணை அடிப்படையில் தியாகம் செறிந்த ஒரு தற்கொடையாளியின் மரணத்தின் முன்னோடியாக நிகழ்ந்தாலும், அத்தகைய வேள்வி மனித குலத்தின் விடிவிற்கும், விடுதலைக்கும் வித்திட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழரின் போராட்ட வரலாறும் உண்மைக்கும் பொய்மைக்குமிடையே, இருளுக்கும் ஒளிக்குமிடையே, நீதிக்கும் அநீதிக்குமிடையே, பலிக்கும் வாழ்விற்குமிடையே நடைபெறும் போராட்டமாகும். இத்தகையதொரு பின்புலத்தில் நற்கருணையின் அடிப்படைப் பண்புகள் தமிழர் போராட்டத்திற்கு எவ்விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுச் சேர்க்க முடியும் என்பதை இறை வெளிப்பாட்டின் ஒளியில் சிந்தித்துப் பார்ப்பது சாலப் பொருத்தமானதே.

நற்கருணை அடிப்படையில் தியாகம் செறிந்த ஒரு தற்கொடையாளியின் மரணத்தின் முன்னோடியாக நிகழ்ந்தாலும், அத்தகைய வேள்வி மனித குலத்தின் விடிவிற்கும், விடுதலைக்கும் வித்திட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழரின் போராட்ட வரலாறும் உண்மைக்கும் பொய்மைக்கு மிடையே, இருளுக்கும் ஒளிக்கு மிடையே, நீதிக்கும் அநீதிக்கு மிடையே, பலிக்கும் வாழ்விற்கு மிடையே நடைபெறும் போராட்டமாகும்.

## பாஸ்கா உணவும் விடுதலையும்

நற்கருணை, புதிய ஏற்பாட்டின், புதிய உடன்படிக்கையின் விருந்தாகக் குறிப்பிடப்பட்டாலும், பழைய ஏற்பாட்டுப் பாஸ்காப் பின்னணியிலே இதை விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும். ஒரு சமூகத்தின் பாரம்பரியத்தின் பின்னணியில், குடும்பத் தலைவனை மையப்படுத்திய (Patriarchal) ஒரு விருந்துணவின் பின்னணியில் இது கொண்டாடப்பட்டது. தமிழர் சமூகமும் ஒரு குடும்ப ஆணை முதன்மைப்படுத்தி வாழ்ந்து வரும் சமூகமாகும். ஆனால் போராட்டத்தின் விளைவாக இச்சமூக அமைப்பு முறை ஓரளவு மாற்றப்பட்டாலும், இன்னும் ஆணாதிக்க சமூகமாகவே இருந்து வருகின்றது. யூத சமூகத்தில் நிலவிய நன்றி கூறுதலும், ஆசீரும் இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்திற்குப் பின்பு அவர்கள் வாழ்க்கையில் இடம் பெற்ற பாரம்பரியமாக அமைந்தாலும் அதன் தொடக்கம் அவர்களின் விடுதலைப் பயணத் தொடக்கமாகவே அமைந்தது. அடிமைத்தனவாழ்விலிருந்து விடிவை நோக்கிய பயணத்தின் விருந்தாகவே பாஸ்கா விருந்து அமைந்தது. தமிழர் சமூகத்தின் பாரம்பரியத்தில், விருந்து, உறவுகளை மையப்படுத்தப்பட்டதாகவே அமைகின்றது. குறிப்பாகத் தமிழர் வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் விருந்தின் மூலம் கொண்டாடப்பட்டு உறவுகள் ஆழப்படுத்தப்பட்டன. அதேவேளையில் பெரும்பாலும் குடும்பத்தலைவனே உணவிற்கு உழைப்பவராகவும் கருதப்பட்ட வாழ்க்கை முறையையே காணுகின்றோம். இங்கு பாஸ்கா உணவு நீண்டதொரு விடுதலைப் பயணத்தின், அதாவது சாவிலிருந்து வாழ்விற்குக் கடந்து, இறைவனின் மக்களாகும் உரிமையைப் பெறும் உணவாக அமைந்து விடுகின்றது. இறைவன் தனது மக்களாகச் சொந்தம் கொண்டாடும், தேர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெடுக்கப்பட்ட இனமாக மாற்றும் விருந்தாக அமைந்து விடுகின்றது. தமிழர் போராட்ட வாழ்வில் ஒரு விடுதலை பெற்ற இனமாக மாறிடக் கசப்புக்கீரையாக மடிவுகளையும், இழப்புக்களையும் நோக்கி வாழ அழைப்பு விடுப்பதுதான் பாஸ்கா உணவு. அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்று உரிமை வாழ்விற்குக் கடந்து செல்வதற்கு எகிப்தியரின் தலைச்சன் பிள்ளைகளின் மரணமே வழி வகுத்தது. (காண். வி.ப. 12: 12,13, 23,27) எனவே மடிவின் மரணத்தின் பின்னணியில் விடிவிற்கான அழைப்பை நிறைவு செய்வதாக விடுதலைப் பயணநூல் கூறுகின்றது. தமிழர் போராட்டத்தில் இரத்தம் சிந்துதல் தவிர்க்க முடியாத விடுதலை வாழ்வின் அங்கமாக மாறிவிட்டது. விடுதலைக்கான விலையாகக் கருதப்பட்ட தலைச்சன் பிள்ளைகளின் அழிவில்தான் விடுதலைப் பயணம் வித்திடப்பட்ட வரலாறு தொடர்கின்றது.

> தமிழர் போராட்ட வாழ்வில் ஒரு விடுதலை பெற்ற இனமாக மாறிடக் கசப்புக்கீரையாக மடிவுகளையும், இழப்புக்களையும் நோக்கி வாழ அழைப்பு விடுப்பதுதான் பாஸ்கா உணவு.

> தமிழர் போராட்டத்தில் இரத்தம் சிந்துதல் தவிர்க்க முடியாத் விடுதலை வாழ்வின் அங்கமாக மாறிவிட்டது. விடுதலைக்கான விலையாகக் கருதப்பட்ட தலைச்சன் பிள்ளைகளின் அழிவில்தான் விடுதலைப் பயணம் வித்திடப்பட்ட வரலாறு தொடர்கின்றது.

## புதிய விடுதலைப் பயணம்

நற்கருணையின் புதிய பரிமாணம் இயேசு நிகழ்த்திய இறுதி பாஸ்காவினால் நிறைவுபெற்றது. இயேசுவின் பாடுகளும் உயிர்ப்பும் ஒரு பாஸ்கா நிகழ்ச்சி. சாவிலிருந்து வாழ்விற்குச் செல்லும் பாதையாகவே நற்கருணையின் அடித்தளமாக பாஸ்கா கருதப்படுகின்றது. (காண். யோவா 16:28). இயேசு என்ற செம்மறியின் இரத்தம் பாவ வாழ்விலிருந்து விடுதலை வாழ்விற்கு அழைத்துச் செல்வதாக அமைகின்றது. (காண். யோவா 1:36; 19:36) இயேசு பலருடைய துன்பங்களையும் பிணிகளையும் சுமந்து விடுதலை வாழ்வைப் பெற்றுத் தந்தார். (காண். எசாயா 53:4-6) தமிழர் போராட்டமும் செம்மறிகளின் பலியிடுதலிலும், விடுதலைக்காகத் துயரங்களை, துன்பங்களையும் சுமந்து வாழும் நிலைக்குத் தமிழ் சமூகத்தை மாற்றியுள்ளது. துன்புறும் ஊழியர்களாக விடுதலையின் விலையைக் கொடுத்துத் தமிழினம் வாழ்ந்து கொண்டிருப்பது இயேசுவின் பாஸ்கா பலியை இன்னும் அர்த்தமுள்ளதாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள மீட்பு, விடுதலை என்பது இறையியல் பார்வையில் முழுமனித விடுதலையைக் குறித்து நின்றாலும், முழு மனித விடுதலைக்குத் தடையாய் இருக்கும் எதையும் எதிர்த்து நின்று போராடும்போதுதான் இறைவன் சார்பில் நின்று நாம் செயற்பட முடியும். இயேசு கொணர்ந்த நிறைவாழ்வை நாம் நற்கருணையிற் கொண்டாட விரும்பினால், விடுதலைப் போரின் இயல்பான சவால்களை எதிர்கொள்ளவேண்டும். குறிப்பாகப் பாஸ்கா விருந்தின் பின்னணியிற் போரின் பாதிப்பினால் துன்புறும் சகோதரர்களுக்குப் பொருளுதவி, ஆற்றுப்படுத்தும் உதவி, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் உதவிக் கரம் நீட்டுதல் அவசியமாகும். தமிழர் போராட்டமும் தமிழ் சமூகத்தின் மத்தியில் உதவும் பண்பை வளர்த்துள்ளது என்றே கூறலாம். அத்துடன் நற்கருணை பாஸ்கா விருந்தாக அர்த்தம் கொடுக்க வேண்டுமெனில் தமிழ் சமூகத்தின் சாதிய வேறுபாடுகள் களையப்பட்டு ஒரே இறைவனின் பிள்ளைகள் என்ற உணர்வு துளிர்விட வேண்டும். இதுவே தமிழர் போராட்டத்திற்கு உரமாகவும் உந்து சக்தியாகவும் அமைய முடியும். தமிழினத்தைச் சீரழித்து, சிதறடித்தது வெறும் போர் மட்டுமல்ல. மாறாகத் தமிழ் சமூகத்தில் நிலவிய நற்கருணை வாழ்விற்கு முரணான, ஒவ்வொரு வேறுபாடுகளும், பாகுபாடுகளும் என்று சொன்னால் மிகையாகாது.

தமிழினத்தைச் சீரழித்து, சிதறடித்தது வெறும் போர் மட்டுமல்ல. மாறாகத் தமிழ் சமூகத்தில் நிலவிய நற்கருணை வாழ்விற்கு முரணான, ஒவ்வொரு வேறுபாடுகளும், பாகுபாடுகளும் என்று சொன்னால் மிகையாகாது.

## தமிழர் சமூகமும் நற்கருணைப் பலியும்

திருச்சபை வரலாறு ஒரு இரத்தம் தோய்ந்த வரலாறு என்று கூறலாம். இயேசுவின் இலட்சியக் கனவை நனவாக்க, இரத்தம் சிந்தித் திருச்சபைக்கு உரமிட்டுள்ளனர் மறைசாட்சிகள். எனவே இயேசுவின் போதனைக்கும், இறையாட்சிக்கும் சாட்சியம் பகர்ந்து தியாக வேள்வியிற் கரைத்துக் கொண்டவர்களை மறை சாட்சிகளாகக் கருதுகின்றோம். இறைவனுக்குப் பலி செலுத்துவது எமது பண்பாட்டிலுள்ள தொன்மையான மரபாகும். உலகிலுள்ள பல்வேறு மதங்களிலும் இம்மரபு காணப்படுகின்றது. இறைவனோடு உறவை ஏற்படுத்தவும், பாவங்களிலிருந்து விடுதலை பெறவும், நன்மைகள் புரிந்த அவருக்கு நன்றி செலுத்தவும், வரங்கள் பல பெறவும் பலிகள் செலுத்தப்படுகின்றன. ஆனால் தமிழர் போராட்டப் பின்னணியில் ஒரு இலட்சியத்திற்காகத் தற்கொடையாக உயிரைப் பணயம் வைத்துப் பலியாக அர்ப்பணிக்கும் செயற்பாடுகள் அரங்கேறுவது நாம் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எதிர்நோக்கின் (hope) அடிப்படையில் பல்வேறு வடிவங்களில் தமிழர் சமூகத்தில் பலிகள் நிகழுகின்றன. விடுதலைப் போரில் விதையாகி விழுந்து மடிந்தவர்கள் பலர்; எனவே பலிவாழ்வு தமிழர் சமூகத்திற்குப் புதிதான ஒரு நிகழ்வாகக் கருதமுடியாது. தமிழர் சமூகத்திற் பெரும்பான்மையோர் நம்பிக்கை கொண்டுள்ள இச் சமயத்திற் பலி செலுத்தும் மரபு காணப்படுவதை அறிகின்றோம். "மனதை என்னிடம் வைத்து என்பால் பக்தி செலுத்தி எனக்கு யாகம் செய்து, என்னை வணங்கு" என்று பலியின் உயர்வை பகவத் கீதை உரைத்துள்ளது. (ப.கீ. 9,2) யூத சமயத்திலும் எரி பலி (1 சாமு 7:9; இச. 33:10; தி.பா 51:21), பாவம் போக்கும் பலி (லேவி 4:1-5, 13:6), குற்ற நிவர்த்திப் பலி (லேவி 5:14-26) போன்ற வேறு பலி முறைகள் இருந்தன. புதிய ஏற்பாட்டு நற்கருணைப்பலி இயேசுவின் தியாகத்தையும், அன்பையும், அர்ப்பணத் தையும் வெளிப்படுத்தும் செயற்பாடாகும். இயேசுவின் வாழ்வே ஒரு தியாகப்பலி; அவர் வாழ்ந்ததும் பணியாற்றியதும் மக்களின் விடு தலை வாழ்விற்காக, நிறைவாழ்விற்காக. அதாவது துன்பங்கள் துயரங்கள் இன்றிப் பிழைகள் பிணக்குகள் இன்றி, அநீதிகள் அடிமைத்தனங்கள் இன்றி எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகளாக அன்புப் பிணைப் பில் சகோதர உறவில் வாழ வேண்டுமென்பது அவரது இறையாட்சியின் இலக்காகும். (லூக் 11:20; மாற் 2:17). எனவே இறையாட்சியை நிலைநாட்ட அவர் கொடுத்த அர்ப்பணத்தின் விலையாகவே அவருடைய மரணத்தை நோக்குகின்றோம். கோதுமை மணி, மண்ணில் மடிந்து பலன் தருவது, போல (யோவா 12:24) இறையாட்சி நிலை நாட்டப்படும்போது எதிர்கொள்ளும் இறப்பு, இழப்பு, துன்பம், இடர்கள் தவிர்க்க முடியாதவை. நற்கருணைக் கொண்டாட்டமானது இயேசுவின் தியாகப் பலியைத் தாங்கி அருட்சாதன முறையில் நிறைவேற்றுகின்றது. தமிழர் சமூகத்தின் விடுதலை வேட்கை யானது தியாகத்தையும் அர்ப்பணத்தையும் சுமந்து நிற்பதாகவே அமைகின்றது. விடுதலைப் போரில் மடிந்த அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் நற்கருணையில் நாம் கொண்டாடும் தியாக வேள்வியிற் கரைந்து போனவர்களாகவே கருத இடமுண்டு. இயேசுவும் துன்புறும் ஊழியனாகவே, பாடுகளின் பாதையில் கல்வாரியில் அர்ப்பணித்தார். (மாற் 10:45) நீதிக்காகவும், உண்மைக்காவும், சகோதரத்துவ வாழ்விற்காகவும் உழைத்ததன் விளைவுதான் இயேசுவின்

புதிய ஏற்பாட்டு நற்கருணைப்பலி இயேசுவின் தியாகத்தையும், அன்பையும், அர்ப்பணத் தையும் வெளிப்படுத்தும் செயற்பாடாகும். இயேசுவின் வாழ்வே ஒரு தியாகப்பலி; அவர் வாழ்ந்ததும் பணியாற்றி யதும் மக்களின் விடுதலை வாழ்விற்காக, நிறை வாழ்விற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவைச்சாவு. எனவே விடுதலைப் போரால்ப் பலியாகிய அனைவரின் தியாகமும் அர்ப்பண மும், நற்கருணையை நாம் அர்த்தத்துடன் கொண்டாட உதவுவதாக அமைதல் வேண்டும். ஆனால் இயேசுவின் இறப்பு வாழ்வின் முடிவாக வல்ல, விடிவாக உயிர்ப்பாக அமைந்தது. இங்குதான் தமிழர் சமூகத்தின் இறப்புக்களும், இழப்புக்களும் பலி வாழ்வை ஆழப்படுத்தும் ஒரு புதிய தமிழ்ச் சமூகத்தின் உயிர்ப்பாக நோக்கப்படுதல் அவசியமாகும்.

இயேசுவின் இறப்பு வாழ்வின் முடிவாகவல்ல, விடிவாக உயிர்ப்பாக அமைந்தது. இங்குதான் தமிழர் சமூகத்தின் இறப்புக்களும், இழப்புக்களும் பலி வாழ்வை ஆழப்படுத்தும் ஒரு புதிய தமிழ்ச் சமூகத்தின் உயிர்ப்பாக நோக்கப்படுதல் அவசியமாகும்.

## நற்கருணையும் புதிய தமிழ்ச் சமூகமும்

பலியைக் கொண்டாடுவது மட்டும் நின்றுவிடாது, பலியாகிப் போன தமிழர் சமூகத்தின் வாழ்விற்கு உரமூட்டுவதாக நற்கருணைப் பலியானது அமையும்போதுதான் நற்கருணை உண்மை யாகவே விடுதலை விருந்தாகத் திகழ முடியும்.

ஒரு புதிய தமிழ்ச் சமூகத்தை உருவாக்க நற்கருணையின் பல்வேறு முகங்கள் உள்வாங்கப்பட்டு புதுப்பித்தல் இடம் பெற வேண்டும். நற்கருணை வெறும் வழிபாட்டுக் கொண்டாட்டம் என்ற நிலை மாறி, வாழ்வுக் கொண்டாட்டமாக (Living celebration) மாற்றப்படுதல் வேண்டும். நற்கருணை விருந்தானது தமிழகர்களிடத் தில் நிலவும் சாதீய வேறுபாடுகளைக் களைய இறையநுபவமாக மாறவேண்டும். வேறுபாடு, பாகுபாடு இல்லாத சகோதரத் துவ சமூகத்தை, மதம், இனம் கடந்த நிலையில் உருவாக்க நற்கருணை உதவ வேண்டும். இன்றும் தமிழர் போராட்டத்தின் தியாகமும், அர்ப்பணமும், நற்கருணை கொண்டாட்டத்திற்கு வலுச்சேர்த்து நற்கருணையை வாழ்வாக்க வேண்டும். தன்னலமற்ற, தியாகம் செறிந்த ஒரு புதிய தமிழ்ச் சமூகத்தை உயிர்ப்பிக் கின்ற உந்து சக்தியாக நற்கருணை உருமாற்றத்தின் அருட்சாதனமாக விளங்க வேண்டும். தமிழ்ச் சமூகத்தின் விடுதலைத் தீ வெறுமனே அரசியலோடு மட்டும் நின்றுவிடாது மதங்களையும் சுயசோதனைக்கு உள் ளாக்க வேண்டும். முழு மனித விடுதலை நோக்கிய பயணத்தில் நற்கருணை யானது சமூக விடுதலைக்கும், சகோதரத்துவ ஒன்றிப்பிற்கும் உதவும் வாழ்வின் அருட்சாதனமாக நோக்கப்படுதலே அவசியமாகின்றது. பலியைக் கொண் டாடுவதோடு மட்டும் நின்றுவிடாது, பலியாகிப்போன தமிழர் சமூகத்தின் வாழ்விற்கு உரமூட்டுவதாக நற்கருணைப் பலியானது அமையும் போதுதான் நற்கருணை உண்மையாகவே விடுதலை விருந்தாகத் திகழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு நோக்கி...........

# ஒரு சூழமைவு இறையியலாக்க முயற்சி

அருட்தந்தை. இ. ம. இரவிச்சந்திரன்

"வீடு நோக்கி ஓடுகின்ற என்னையே; என்னையே நாடி நிற்குமே அநேக நன்மையே நன்மையே........." என்ற பாடல் வரிகளை என்றோ கேட்ட நினைவு. வீடு என்றதுமே எல்லோர் உள்ளத்திலும் ஒரு நெகிழ்ச்சி; மகிழ்ச்சி. "எலி வளை என்றாலும் தனி வளை வேண்டும்" என்பது எமது மூதாதையர் சொல்லி வந்த அனுபவ வாக்கு. புதிதாக திருமணம் ஆகும் தம்பதியர் ஒவ்வொருவருக்கும் இது ஒரு கனவு; தணியாத தாகம். குடும்பத்திற்கு ஒரு வீடு என்பது ஈழத் தமிழர்களாகிய எமது உணர்வோடும் பண்பாட்டோடும் இணைந்து விட்ட ஒரு இலக்கு. இவ்வாறு தமிழ் மக்களாகிய எமது வாழ்வோடு இணைந்து விட்ட 'வீடு' என்னும் விடயத்தை முதலில் எமது சமயப் பண்பாட்டுத் தளத்திலும் பின்பு எமது சமூக அரசியல் தளத்திலும் விசாரணைக்குட்படுத்தி பின்பு அதனை யூத கிறிஸ்தவ பாரம்பரிய பின்னணியில் பொருத்திப் பார்த்து சில அருட்பணிசார் நடைமுறை முன்மொழிவுகளைத் தர முயல்கிறது இக்கட்டுரை.

## தனிவளை நாடும் தமிழினம்

தமிழ் மக்களின் தேசிய கவி எனப்படும் பாரதி ஒவ்வொரு தமிழ் மகனதும் இதயத்திலிருந்தும் எழும்பும் வீடு பற்றிய தாகத்தை அழகாகப் பாடியிருக்கின்றான்.

> **"காணி நிலம் வேண்டும் பராசக்தி**
> **காணி நிலம் வேண்டும்."**

யாழ் திட்டம் 2003, (Jaffna Plan - 2003) 1981 இல் எடுக்கப்பட்ட வீடு பற்றிய ஒரு கணக்கெடுப்பை மேற்கோள் காட்டி பேசும்போது பின்வருமாறு கூறுகிறது. "யாழ்ப்பாணத்தில் 94% மான குடியிருப்பாளர்கள் தங்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த வீடுகளிலேயே வசித்து வந்தனர். இது யாழ்ப்பாண குடித்தொகையின் முக்கியமானதொரு பண்பாட்டு மனப்பாங்காகும்" ஈழத் தமிழர் மத்தியில் திருமணப் பேச்சு வார்த்தைகள் நடக்கிறபோது 'வீடும், வளவும்' என்பது சீதனத்தின் முக்கியமானதொரு கூறாக அமைந்திருப்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

மேலும் திருமணம் வீடு அமைத்தல் ஆகிய இரண்டு விடயங்களிலும் மக்கள் நாள் பார்த்தல், நேரம் பார்த்தல், பொருத்தம் பார்த்தல் போன்ற எமது மூதாதையர்களின் பல்வேறு மரபுகளை விடாப்பிடியாக கடைப்பிடித்து வருகின்றனர். இவற்றை 'மூட நம்பிக்கைகள்' என்று கண்டித்து போதிக்கப்பட்டு வந்த போதிலும் மக்கள் விடாப்பிடியாக இவற்றை கைக்கொள்ளுவது இவ்விரண்டு விடயங்களும் அவர்களுடைய வாழ்க்கைக்கு மிகவும் ஆதார மானவையாக இருப்பதனாலேயே ஆகும். எவ்வித சோதனையிலும் ஈடுபட முடியாத அளவிற்கு இவை இரண்டும் மக்களுக்கு முக்கியமானவையாக இருக்கின்றன. வீடு ஒன்றை அமைக்கும்போது தாய் அறையை எங்கு வைப்பது? கிணறு எங்கு இருக்க வேண்டும்? அக்கினி மூலை எத்திசையில் வரவேண்டும் என்று பல விடயங்கள் வாஸ்து சாஸ்திர விற்பன்னருடைய ஆலோசனையின்படி தீர்மானிக்கப்பட்ட பின்பே பொறியியலாளர் கட்டிடக் கலைஞர் போன்றோருடைய உதவி பெறப்படுகின்றது. எவ்வாறு வீடமைப்பது என்பது பற்றிய விடயங்கள் ஒரு ஆய்வுத் துறையாகவே எமது மூதாதையர் மத்தியிலே வளர்ச்சி அடைந்திருந்தது. வீடு என்பது எம் மக்கள் வாழ்வில் பெற்ற முக்கியத்துவத்தை விளக்குகிறது.

> எமக்கு எமது வீடு கல்லாலும் மண்ணாலும் ஆனது மட்டுமல்ல. அது உயிர் உள்ளது; எமது இருப்பின் நீட்சி அது எமது தாய் மனை; குஞ்சுக்கு கூடு; எமது பெற்றார் மூதாதையரின் பிரசன்னத்தை அங்கு நாங்கள் உணர்கிறோம்.

ஐரோப்பியர் ஒருவரோடு உரையாடிக்கொண்டிருந்த போது வீடு ஒன்றை மாற்றிக் கொள்வது தமக்கு எவ்வளவு இலகுவானது என்று குறிப்பிட்டார். வீடு பருப்பொருளால் அமைக்கப்படும் ஒன்று நல்லதொரு வீடு கிடைத்தால் மாற்றிக் கொள்ள வேண்டியது தானே என்றார். தன் வசதி கருதி பல வீடுகளில் மாறி இருப்பதையும் குறிப்பிட்டார். ஆனால் எமக்கோ நாம் வாழும் வீடு ஒன்றை மாற்றுவது எவ்வளவு கடினமான அனுபவம் என்பது எமக்கும் தெரியும். எமக்கு எமது வீடு கல்லாலும் மண்ணாலும் ஆனது மட்டுமல்ல. அது உயிர் உள்ளது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இருப்பின் நீட்சி அது எமது தாய் மனை; குஞ்சுக்கு கூடு; எமது பெற்றார் மூதாதையரின் பிரசன்னத்தை அங்கு நாங்கள் உணர்கிறோம். 'நிலையிற் பிரியேல்' என்பது எமது ஆன்றோர் வாக்கு.

தமிழ் மக்களுக்கு அவர்களது பண்பாட்டோடு வீடு என்கின்ற விடயம் எவ்வளவு தூரத்திற்கு கலந்துள்ளதென்று சொன்னால் தமிழ்மறை என்று அழைக்கப்படும் சைவ சித்தாந்தத்தில் ஒருவனது இறுதிப்பேறு அதாவது 'மோட்சம்' 'வீடு' என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றது. 'ஆணவம்', 'கர்மம்', 'மாயை' என்கிற 'பாசத்தினால் அடிமை நிலையில் இருந்து 'பசு' எனப்படும் மனிதன் 'பதி' என அழைக்கப்படும் இறைவனின் 'அருள்' துணையோடு பாசத்திலிருந்து விடுபட்டு 'வீடு பேறு' அடைகின்றான். 'அறநெறி' தவறாது, வாழ்ந்து அவன் 'பொருள்' சேர்த்து 'இன்பம்' அனுபவித்து 'வீடு பேறு' அடைய வேண்டும்.

ஆக தமிழ் மக்களது சமய பண்பாட்டுப் பின்னணியில் ஒருவனது இவ்வுலக வீட்டு வாழ்க்கையானது ஒரு வகையில் அவன் மறு வாழ்வில் அனுபவிக்க இருக்கும் பெரும்பேறின் முன் சுவையாக அமைகிறது.

## எலி வளையும் இல்லாத இழி நிலை

அந்த இளைஞனுக்கு சொந்த இடம் காங்கேசன்துறை. அவனுக்கு இப்போது வயது 19. அவன் தனது குடும்பத்தினரோடு உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கமாக 1990இல் தனது வீட்டை விட்டுப்புறப்பட்டபோது அவனுக்கு வயது 05. இற்றைவரை அவன் 19 வீடுகள் மாறியிருக்கிறான். வீடு மாறி வீடு மாறி சலிப்புற்ற அவனது குடும்பத்தினர் தற்போது கடன்பட்டு ஒரு சிறு காணித் துண்டு வாங்கியிருக்கிறார்கள். அதில் ஒரு சிறிய கொட்டில் அமைத்து விரைவில் குடியேற வேண்டும் என்பதுதான் அவர்களது பேரவா. இவன் தமிழ் மக்களது ஒட்டு மொத்த விரக்தியின் குறியீடாக எம் முன் எழுந்து நிற்கிறான்.

ஒரு இறையியல் பட்டறையில் இவ்விடயங்களைக் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது பலர் தமது வீடு பற்றிய விரக்தி அனுபவங்களை உணர்வு பூர்வமாக பகிர்ந்து கொண்டனர்.

2002 இல் எடுக்கப்பட்ட தரவுகளின்படி யாழ்ப்பாணத்தில் மட்டும் 210,000 வீடுகளில் 130,000 வீடுகள் முழுமையாகவோ, பகுதியாகவோ சேதமடைந்துள்ளன. இவை உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள் தவிர்ந்த தரவேயாகும். யாழ். குடா நாட்டில் காணப்படும் உயர் பாதுகாப்பு வலய பகுதிகளில் மட்டும் 30,388 குடும்பங்களுடைய 29,525 வீடுகள் கைவிடப்பட்ட நிலையில் அழிந்து போயுள்ளன. குடும்பங்களோ முகாம்களிலும் வாடை வீடுகளிலும், புலம்பெயர்ந்தும், இடம்பெயர்ந்தும் வாழ்ந்து வருகின்றன. இதை விட அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பல்லாயிரக் கணக்கான வீடுகள் இல்லாமல் போயிருக்கின்றன.

தமிழ் சமூகத்தின் பண்பாட்டில் வீடு பெறுகின்ற முக்கியத்துவத்தின் பின்னணியில் இன்று அரசியல் சமூக சூழ்நிலை காரணமாக வீடிழந்தவர்களாக அவர்கள் மாறியிருக்கும் நிலையை பொருத்திப் பார்க்கின்ற போது அவர் களுடைய சமூக ஆன்மாவிலும் தனி மனித ஆன்மாவிலும் ஏற்பட்டிருக்கக் கூடிய ஆழமான வடுக்களை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

தனிப்பட்ட மனிதர்களாகவும், குடும்பங்களாகவும் அவர்களுக்கு ஏற்பட்ட வீடிழப்பு அநுபவமானது வடகிழக்கு மீதான இராணுவ ஆக்கிரமிப்பின் காரணமாக ஏற்பட்டு வரும் தாயக இழப்பு என்னும் கூட்டொருமைப்பாட்டு அனுபவத்துடன் இணைந்து பயணிப்பதை நாம் அவதானிக்கலாம். ஒரு காலத்தில் சுயநலமிக்கவர்களாக கருதப்பட்ட ஈழத் தமிழர்கள் தமது வீட்டிற்காகவும் நாட்டிற்காகவும் எதையும் இழக்க முன் வந்த தன்மையை இக் கோணத்திலிருந்தும் நாம் புரிந்து கொள்ள முனையலாம். முன்பு தமி ழரசுக் கட்சியின் சின்னமாக இருந்த வீடு இன்று தமிழ்க் கூட்டமைப்பின் அடையாளமாக புத்துயிர் பெற்றிருப்பது ஒரு விதத்தில் இவ்வாழ்வனுபவ குறியீடோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

> தான் பெற விரும்பும் நிம்மதியான வாழ்வு தன்னிடம் இருந்து பறிக்கப்படும்போது எத்தகைய உள சமூக உளைச்சலுக்கு ஆளாகும் என்பதை நாம் கண்கூடாகக் காணுகின்றோம்.

வீடு என்கின்ற சடப்பொருளை தமது பண் பாட்டு நடத்தைக் கோலங்களுக்கூடாக தமது இதயத்திற்கு நெருக்கமாக்கிக் கொண்டிருக்கும் ஒரு மக்களினம் அதில் தான் பெற விரும்பும் நிம்மதியான வாழ்வு தன்னிடம் இருந்து பறிக்கப் படும்போது எத்தகைய உள சமூக உளைச் சலுக்கு ஆளாகும் என்பதை நாம் கண்கூடாகக் காணுகின்றோம். மாறி மாறி இடம்பெற்ற இடம் பெயர்வுகளும் முகாம் வாழ்வும் இலக்கற்ற, ஒழுக்கமற்ற ஒரு இளைய தலைமுறையை உரு வாக்கி வருவதை நாம் அவதானிக்கிறோம். இத்தகைய எமது வாழ்வனுபவத்தை கிறிஸ்தவ நம்பிக்கைகளோடு உரசிப் பார்த்து எமக்கான இறை விருப்பை தேர்ந்து தெளிய முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏதேனின் இன்பம்

மனுக்குலத்தின் தோற்றம் பற்றிப் பேசும் தொடக்க நூல் ஏதேனில் மனிதனின் இன்ப வாழ்வோடுதான் ஆரம்பமாகிறது. கடவுள் மனிதனை ஆணும் பெண்ணுமாகப் படைத்து அவர்களை இன்பமாக வாழ ஏதேன் தோட்டத்தில் குடியிருத்துகிறார். ஆனால் அவர்களது கீழ்ப்படியாமைக்கு தண்டனையாக அவர்கள் இருவரும் ஏதேனிலிருந்து அப்புறப்படுத்தப்படு கிறார்கள். ஒரு விதத்தில் மானுட வாழ்வு முழுவதுமே இழந்து விட்ட இந்த ஏதேன் இன்பத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கான போராட்டமே என்று கொள்வதும் பொருத்தமானது.

## அலைவதா? இருப்பதா?

காயீன், ஆபேல் இருவருக்குமிடையிலான பிரச்சினையை இஸ்ராயேல் மக்களிடையே காணப்பட்ட ஒரு இடத்தில் குடியிருப்பதற்கும் நாடோடிகளாக அலைவதற்குமிடையிலான போராட்டமாகவே நோக்குகிறார்கள். சம்பவம் ஆபேலின் வழியையே ஏற்றுக்கொண்டாலும் படிப்படியாக இஸ்ராயேல் இனம் ஒரே இடத்தில் குடியிருப்பதையே தெரிவு கொள்வதைக் காண முடிகிறது.

## பாலும் தேனும் பொழியும் கானான் நோக்கி........

மீட்பை வாக்களித்த இறைவன் அதற்கென இஸ்ராயேலை வழி நடத்தியபோது மோயீசன் அவர்கள் கண் முன்னால் வைத்த இலக்கு எந்த விதமான சொத்துமற்ற எகிப்திய அடிமை வாழ்வுக்கு பதிலாக பாலும் தேனும் பொழியும் ஒரு தேசம். அதில் நிரந்தரமாக ஒரு குடியிருப்பு. அந்தக் கனவுகளோடே அவர்கள் நாற்பது ஆண்டுகள் பயணித்தார்கள்.

## இன்பமான இல்லம் இறைவனின் ஆசீர்

தமது இல்லத்தில் ஆடு, மாடு, மனைவி, மக்கள், சொத்து, செல்வம் இவற்றோடு பேரும் புகழுமாக வாழ்வதே பழைய ஏற்பாட்டில் இறைவனின் ஆசியாகக் கருதப்பட்டது. யோபுவினுடைய வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கிற போது இந்த உண்மை தெளிவாகப் புலனாகிறது. யோபுவை சோதிக்க அனுமதி பெற்ற சாத்தான் அவனுக்குரிய வீடு சொத்து சுகத்தைப் பறிக்க அனுமதி பெறுகிறார்கள். யோபு சோதனையில் வெற்றிகொண்ட பின் இறை வனின் ஆசியாக அவர் இன்பமாக இல்லத்தில் வாழ அவசியமான அனைத் தும் அவருக்கு கொடுக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணகம் என்னும் தாய்வீடு

இயேசு இறையரசு பற்றிய தனது போதனைகளின் போது ஏழு உவமைகளில் 'வீட்டுப் பொறுப்பாளர் பற்றிப் பேசுகின்றார். ஆறு உவமைகளில் வீட்டில் நடக்கும் விருந்துகள் பற்றிப் பேசுகின்றார். அது மட்டுமல்ல கப்பர்நகூமில் அவருக்கென்றொரு வீடு இருந்திருக்கலாம். பெரும்பாலும் பேதுரு அந்திரேயா ஆகியோருடைய குடும்பத்தோடு அவர்களுடைய வீட்டில் இயேசு தங்கியிருக்கலாம். (மாற். 1,21, 29, 35: மத். 4:13) என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். (காண். பவுல் லியோன் யார் இந்த இயேசு ப. 58) மேலும் எகிப்திலிருந்து திரும்பி வந்தபின்பு இயேசு தமது பெற்றோரோடு நசரேத்து வீடு ஒன்றில் வாழ்ந்து வளர்ந்து உருவாகுவதையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும். இன்னும் என்றென்றைக்கும் தமது சிலுவைப் பலியை நினைவு கூற இயேசு நற்கருணையை ஏற்படுத்திய இறுதி இராவுணவும் ஒரு வீட்டுச் சூழலில்தான் நிகழ்கிறது.

இயேசு இறையரசு பற்றிய தமது போதனைகளில் இஸ்ராயேல் மக்களுடைய இல்ல அனுபவத்தை ஒருபடி உயர்த்திச் சொல்லுகிறதை காணுகின்றோம். இயேசுவுக்கு இறையரசே மனிதனின் இல்லம் என்றாகிறது. அவருக்கு இறைவன் ஒரு அன்புத் தந்தை மனிதர்கள் அவரது நேச பிள்ளைகள் இறைவனது அன்புத் தந்தையை ஏற்று மானுட சகோதரத் துவத்தில் வாழ வேண்டியவர்களே மனிதர்கள். ஆகவே இறையாட்சியையே ஒரு இல்ல குடும்ப சூழ்நிலையிலேயே இயேசு பார்க்கின்றதைக் காணுகின் றோம். தந்தையிடம் உள்ள பல உறைவிடங்களில் தமது சீடர்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் புறப்படுகிறார் இயேசு.

'வீடு ஒன்று விண்ணில் நமக்கு உண்டு' என்கிறார் பவுல் அடிகளார் "அது மனிதக் கையால் கட்டப்படாதது நிலையானது" என்றும் "விண்ணக வீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பம்" என்றும் அவர் குறிப்பிடுகின்ற போது இறையாட்சியை வீட்டுச் சூழலில் கண்ட இயேசுவின் பார்வை விளக்கப்படுகிறது. (2கொரி. 5, 1-5) விண்ணக வாழ்வை நாம் வீடு என்று குறிப் பிடுகிறோம் என்றால் அது மண்ணில் வீட்டுச் சூழ லில் நாம் பெறும் முன் சுவையிலிருந்துதான் பிறக் கிறது.

> 'வீடு ஒன்று விண்ணில் நமக்கு உண்டு' என்கிறார் பவுல் அடிகளார் "அது மனிதக் கையால் கட்டப் படாதது நிலையானது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகள் இறையில்லம் ஆகின்றன

ஆதித் திருச்சபையில் சீடர்கள் தமது வீடுகளில் கூடி 'அப்பத்தைப் பிட்டு' உண்டு 'இறை வேண்டலில்' ஈடுபட்டு 'திருத்தூதரின் படிப்பினைகளைக் கேட்டு' 'நட்போடு உறவாடி' தம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து வந்தார்கள் என்று திருத்தூதர் பணி சொல்கிறது. இயேசு ஏற்படுத்துகின்ற புதிய மனுக்குலத் திலே வீடுகள் இவ்வாறு இறையில்லங்களாக இறை மக்களின் இல்லங்களாக புதிய பரிமாணம் பெறுகின்றன. கிறிஸ்தவர்கள் இறைவனையும் மனிதனையும் ஆழமான உறவு நிலையில் சந்திக்கின்ற, உன்னத இடங்களாக ஆதித் திருச்சபையில் வீடுகள் மாற்றம் பெற்றன.

## மீண்டும் தோன்றும் வீட்டுக் கூட்டங்கள்

ஆதித் திருச்சபையில் வீடுகள் தோறும் கிறிஸ்தவர்கள் கூடி திருச் சபையாய் வாழும் வழக்கம் இருந்தபோதிலும் படிப்படியாக திருச்சபை கிரேக்க உரோம ஐரோப்பிய கலாச்சாரத்தினூடு வளர்ச்சியடைந்த சூழ்நிலை யில் வீடுகளில் கூடி வழிபடும் வழக்கம் ஒழிந்துபோய் பெரிய பெரிய ஆல யங்களில் கூடும் வழக்கம் ஆரம்பித்தது. ஆயினும் இன்று மீண்டும் திருச்சபை வீடுகளில் மையம் கொள்ளும் திருச்சபையாக பரிணமித்து வருவதை அவ தானிக்கலாம். சுயாதீன சபைகள் பெரும்பாலும் 'வீட்டுக் கூட்டங்கள்' நடாத்து கின்றதைப் பார்க்கின்றோம். கத்தோலிக்க சபையில் அன்பியங்கள் இல்லங் களில் ஒன்றுகூடி ஆதித் திருச்சபையில் காணப்பட்ட இல்லத் திருச்சபை வாழ்க்கை முறையை மீளப் புதுப்பிப்பதையும் காணுகின்றோம். திருத்தந்தை 2ம் ஜோண் போல் அவர்கள் குடும்பம் பற்றிய தனது சுற்று மடலிலே "அன்பியங்களை ஒவ்வொருவருக்குமான இல்லமும் குடும்பமும்" (எண். 85) என்ற சாரப்பட குறிப்பிடுகின்றார்.

## சில தெளிவுகள்

- சொந்தமாக ஒரு வீடு வைத்திருந்து அதில் நிம்மதியாக வாழ வேண்டும் என்பது ஒவ்வொரு தமிழ் குடும்பத்தினது இதயநாதமாக இருக்கிறது. தங்களுடைய சொந்த வீட்டில் அவர்கள் அனுபவிக்கும் நிம்மதியான உறவு வாழ்க்கை எவ்வளவு தூரத்திற்கு அவர்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது என்பது வாழ்வின் இறுதிப் பேற்றையே வீடு பேறு என்று அவர்கள் அழைப்பதிலிருந்து புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ யூத கிறிஸ்தவ பின்னணியிலும் வீடு முக்கியம் பெறுகின்றதையும் ஒருவர் தன்னுடைய வீட்டில் வாழும் இல்வாழ்க்கைப் பண்புக் கூறுகளை அவற்றின் முழுமையான வடிவத்தில் இறையாட்சியில் ஏற்றிப் பார்ப் பதையும் காணமுடிகிறது. "புதியதொரு வீட்டையும் புதிய உலகையும் கடவுள் தயார் செய்து கொண்டிருக்கிறார். அவ்வீடு பேறு அமைதி யைத் தேடி மனித இதயத்தினின்று உதித்தெழும் எல்லா ஆவல்களை யும் நிறைவு செய்வது மட்டுமன்றி அவற்றை விஞ்சியும் திகழும்" என்று 2ம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது. (இ.உ.தி. 39)

☞ இவ்வாறு இறையாட்சியின் அருட்சாதன அனுபவமாகத் திகழும் வீட்டுச் சூழல் இன்று தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டதொன்றாக இருக் கிறது. போரும் இயற்கை அழிவும் கொண்டு வந்துள்ள இடம்பெயர்வு, முகாம் வாழ்வு தமிழ் சமூகத்தின் ஆன்மாவை சிதைக்கக் கூடியளவிற்கு கனதியானது.

## சில சவால்கள்

☞ இறையாட்சி நோக்கி மக்களை வழிநடத்த முயலும் எமது அருட்பணிச் செயற்பாடுகளிலே அதன் அருட்சாதன அனுபவமாக நிகழக்கூடிய 'வீட்டுச் சூழலை மீட்டுக் கொடுத்தலை' போதியளவிற்கு கருத்தில் எடுத்துள்ளோமா?

☞ சமாதானம் பற்றி அதிகம் பேசப்படும் இன்றைய சூழ்நிலையில் மக்கள் தங்கள் வளவுகளுக்குச் சென்று வீடுகளில் குடியேறும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோமா?

☞ இடம் பெயர்வு வாழ்விலும் இயன்றவரை மக்கள் 'வீட்டுச் சூழலை' பேணிக் கொள்ள வழி செய்ய முயல்வோமா?

☞ அருள்பணிச் செயல்பாடுகளில் வீடுகளைச் சந்தித்து இறையாட்சிச் சூழலை ஏற்படுத்தத் தக்க வீட்டுக் கட்டடங்களை ஏதாவது ஒரு வகையில் ஒழுங்கு செய்கின்றோமோ?

☞ மக்கள் வீடு ஒன்றை அமைக்கும் வெவ்வேறு கட்டங்களிலும் அவர்கள் செய்ய வேண்டி நிகழும் வெவ்வேறு சடங்குகளுக்கு (அத்திவாரம் போடும்போது, வளை வைக்கும்போது நிலை வைக்கும்போது, பிரவேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும்போது) கிறிஸ்தவ நம்பிக்கைகளை பிரதிபலிக்கும் பண்பாட்டு மையமாக்கப்பட்ட சடங்குகளை எமது விசுவாசிகளுக்கு உருவாக்கிக் கொடுப்போமா?

## இறுதியாக

வீடு என்பது ஒவ்வொரு மனித இதயத்திற்கும் நெருக்கமானது. அது அவனது இறுதி அடைவான விண்ணக வாழ்வின் முன்சுவை. அந்த முன் சுவையை அனுபவிப்பவர் அதன் முழுமையையும் இறைவனில் சுவைக்க விரும்பி நிற்பார். ஆகவே வீட்டையும் வீட்டுச் சூழலையும் இறையரசுக்குரிய வகையில் மீட்டுக் கொடுப்பதென்று திருச்சபையின் அருட்பணியில் முக்கியத் துவம் பெற வேண்டிய ஒரு விடயமாகிறது.

## துணை நின்ற நூல்கள்


1. பவுல் லியோன், யார் இந்த இயேசு? வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், 1996.
2. Wilfred, Felix, on the Banks of Ganges, ISPCK, Delhi, 2002.
3. Neuner, J., (ed) Religious Hinduism.
4. St. Paul's Publications, Allahabad, 1968.
5. Jaffna Plan - 2003.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். புனித சவேரியார் குருமடமும் ஈழத்தமிழ் இறையியல் நோக்கும்

அருட்சகோ. பி. தே. யூட்தாஸ்

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
**முன்தோன்றிய மூத்த தமிழ்"**

என்ற கூற்றானது தமிழ் மொழியினதும், தமிழ்ப் பண்பாட்டினதும் உருவாக்கத்தையும், தனித்துவத்தையும் சிறப்பாக எடுத்தியம்புகின்றது. மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழர்களாகிய நாம், எமது பண்பாட்டையும், மொழியினையும் சமயத்தையும் ஒருங்கே வளர்ப்பவர்களாகவும், போற்றுபவர்களாகவும் வாழ வேண்டும். சமயமானது பண்பாட்டிலிருந்து பிரிந்து செல்லுமாயின் அது தனது இலக்கை அடைந்துவிட முடியாது. எப்போது ஒரு சமயம் பண்பாட்டோடு கலக்கின்றதோ அப்போதுதான் அது முழு நிறைவைக் கொண்டதாக இருக்கும். எனவே தமிழ் ஈழத்திலே கத்தோலிக்கராக வாழுகின்ற நாம் எமது கத்தோலிக்க விசுவாச வாழ்வை ஓர் அந்நிய வாழ்வாகக் கொண்டிராது. எமது வாழ்வும், மறையும், பண்பாடும் இரண்டறக் கலந்து நற்கனி கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் உருவாக்கப்பட்டதே யாழ். புனித சவேரியார் குருமடமாகும்.

> சமயமானது பண்பாட்டிலிருந்து பிரிந்து செல்லுமாயின் அது தனது இலக்கை அடைந்துவிட முடியாது. எப்போது ஒரு சமயம் பண்பாட்டோடு கலக்கின்றதோ அப்போது தான் அது முழு நிறைவைக் கொண்டதாக இருக்கும்.

## கரு வளர்ச்சி

ஒவ்வோர் மறைமாவட்டமும் தன்னால் இயலும்பட்சத்தில் தனக்குரிய பெரிய குருமடத்தை உருவாக்குதல் வேண்டும் என்றும், அவ்வாறு இயலாத விடத்து திருப்பணி நிலைக்காகத் தம்மை உருவாக்கும் மாணவர்கள் இன்னோர் மறைமாவட்டத்தில் இயங்கும் குருமடத்திற்கோ அல்லது பலமறை வட்டங்களை ஒன்றிணைத்த குருமடத்திற்கோ அனுப்பப்படுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருச்சபைச் சட்டம், எண் 237/1இல் குறிப்பிடுகின்றது.[1] மேற்கூறப்பட்ட கருத்தையே இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கமும் வலியுறுத்துவதை நாம் காணலாம். "ஒவ்வொரு மறைமாவட்டமும் தனக்கெனத் திருப்பணிப் பயிற்சியகத்தைக் கொண்டிருக்க இயலாதபோது பல மறைமாவட்டங்களுக் கென்றோ, மண்டலத்திற்கென்றோ, நாட்டிற்கென்றோ பொதுவான திருப்பணிப் பயிற்சியகங்களை நிறுவிப் பேண வேண்டும்.[2]

> தமிழர்களாகிய நாம் எமது மண்ணிலே, எமது மக்களோடு வாழ்ந்து திருச் சபையின் சட்டங்களையும் போதனைகளையும் உள்வாங்கிக் கற்கின்ற போதுதான் திருப்தியான முறையில் இறை வார்த்தையை மக்களிற்கு வழங்கக் கூடிய திருப் பணியாளர்களை உருவாக்க முடியும்

மேற்கூறப்பட்ட திருச்சபையின் சட்டதிட்டங் களையும், போதனைகளையும் அடிப்படை யாகக் கொண்டு இக் குருமடம் ஆரம்பிக் கப்பட்டாலும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது. ஆனாலும் முன்னாள் ஆயர் அமரர். அதிவந்தனைக் குரிய B. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் தூரநோக்கும், மனத்துணிவும் அவரது முயற்சிக்கு எதிராக வந்த தடை களை எதிர்த்து முகம் கொடுக்க உதவி யாக இருந்தது. தமிழர்களாகிய நாம் எமது மண்ணிலே, எமது மக்களோடு வாழ்ந்து திருச்சபையின் சட்டங்களையும் போதனை களையும் உள்வாங்கிக் கற்கின்ற போது தான் திருப்தியான முறையில் இறைவார்த் தையை மக்களிற்கு வழங்கக் கூடிய திருப் பணியாளர்களை உருவாக்க முடியும் என்பது ஆயர் அவர்களின் திடமான நம்பிக்கையாகும்.

## 1.1 குருமடத்தின் தோற்றம்

1980ஆம் ஆண்டு இலங்கை ஆயர் பேரவை உறுப்பினர்களுக்கும், அன்றைய அம்பிட்டிய குருமட நிர்வாகத்தினருக்கும் இடையில் நடந்த ஒன்று கூடலின் விளைவாக சைவமும், சைவசித்தாந்தமும் ஊறியிருந்த தமிழ்ப் பகுதிகளில், தமிழர் பண்பாட்டுக் கூறுகளோடு குருத்துவக் கல்வியும் ஒன்றிணைந்து போக வேண்டியதன் தேவை அதிகமதிகமாக உணரப்பட்டு சூழமைவியல் இறையியல் பயிற்சியை நோக்கமாகக் கொண்டு முன்னாள் யாழ். ஆயர் அமரர் அதிவந்தனைக்குரிய B. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஒக்டோபர் 1980 இல் யாழ். கொழும்புத்துறையில் புனித பிரான் சிஸ்கு சவேரியார் ஆரம்ப மெய்யியலகம் ஐந்து குருமட மாணவர்களுடன் அருட்திரு. பிலிப் பொன்னையா அடிகளாரின் தலைமையில் நிறுவப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து 1981, ஒக்டோபர் 01இல் முழுமையான மெய்யியல் பிரிவு உருவாக்கப்பட்டது. பின்னர் 1983இல் தமிழர்களுக்கு எதிராக சிங்கள இனவாதிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்ட கலவரத்தின் காரணமாக இறையியல் மாணவர்கள் தென்பகுதிக்குச் சென்று கல்வியைத் தொடர முடியாத நிலை இறையியல் நோக்கை இன்னும் ஆழப்படுத்த 1983 - 1984 இற்கான கல்வியாண்டில் முழுமையான இறையியல் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்த குருமடமானது முறையே 1994 யூலை 08இல் இறையியல் பிரிவும், 1995 செப்டம்பர் 07இல் மெய்யியல் பிரிவும் உரோமை யூர்பான் பல்கலைக்கழகத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது.

## 2. ஈழத் தமிழ் இறையியல்

ஈழத்தமிழ் இறையியலானது பின்வரும் நான்கு காரணிகளின் அடிப்படையிலே ஆய்வு செய்யப்படவேண்டியது. அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம். மேற்கூறப்பட்ட நான்கு நிலைகளிலும் ஈழத்தமிழர்களாகிய நாம் பல்வேறு வகையான அடிமைத்தனங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். இவ் அடிமைத்தனமானது அமைப்பு ரீதியான (Structural oppression) முறையில் கட்டிக் காக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மனுவுடல் ஏற்றலானது அனைத்து சமூகப் பண்பாட்டுக் காரணிகளையும் புனிதப்படுத்தி, முழுமையான மானிட விடுதலைக்கு வித்திட்டது. கிறிஸ்தவ விசுவாசத்தை ஐரோப்பியப் பின்னணியில் நாம் பெற்றிருந்தாலும் அவ்விசுவாசமானது எமது மண்வாசனையோடு எமது பண்பாட்டுக் கூறுகளோடு வளர்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது.[3] ஈழத்தமிழ் இறையியலானது இன்று விடுதலையை மையப்படுத்தியதாக வளர்ந்து வருகின்றது. இவ்விடுதலையானது பின்வருமாறு ஆய்வு செய்யப்படலாம்.

> கிறிஸ்துவின் மனுவுடல் ஏற்றலானது அனைத்து சமூகப் பண்பாட்டுக் காரணிகளையும் புனிதப்படுத்தி, முழுமையான மானிட விடுதலைக்கு வித்திட்டது.

### 2.1. அரசியல் விடுதலை

இலங்கைத் திருநாட்டின் பூர்வீகக் குடிகளாக வாழ்ந்த நாகர்களே, தமிழர்கள் எனக் காலப்போக்கில் அழைக்கப்பட்டார்கள் எனச் சில அறிஞர்கள் கருதுகிறார்கள். இவ்வாறான நாம், இந்நாட்டில் உரிமையற்று பல ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றோம். சிங்கள இனவாத அரசின் திட்டமிட்ட இன அழிப்பு முறைகள், குடியேற்றங்கள், கலவரங்கள், பெண்களுக்கு எதிரான அடாவடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனங்கள் போன்ற ஈனத்தனமான செயற்பாடுகள் தமிழ் இளைஞர்களை உரிமை வேண்டிப் போராடும் நிலைக்குத் தள்ளியது. இருபது வருடங்களுக்கு மேற்பட்ட ஆயுதப் போராட்டமானது "புரிந்துணர்வு ஒப்பந்தத்தோடு" ஓய்ந்து போய் உள்ளது. ஆனாலும் அரசின் இனவாதச் செயற்பாடுகள் முடிவிற்கு வரவில்லை. மக்கள் இன்னும் அரசியல் ரீதியில் அடிமைப்படுத்தப்பட்டே வாழ்கின்றார்கள்.

"அரசியல் அமைப்பில் ஓர் அடிப்படையான மாற்றம் கொண்டு வருவதற்கு அனைவருக்கும் ஓர் அரசியல் கல்வி தேவைப்படுகிறது."[4] மனிதர் "கடவுளின் உருவில்"[5] படைக்கப்பட்டவர்கள்..... கடவுளின் மாட்சிக்காக மண்ணில் உள்ள அனைத்தையும் அவர்கள் ஆழவும், பயன்படுத்தவும்..... தலைவர்களாக அவர்களை ஆக்கினார்."[6] எனவே மனிதர்களை மனித மாண்போடு நோக்கி சமத்துவமான முறையில் அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். அரசியலானது மனிதர்களுக்குப் பணிவிடை புரிவதற்கான ஓர் அழைப்பாகும். இதையே இயேசு பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "மானிடமகன் தொண்டு ஏற்பதற்கல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற். 10:45). பணிபுரிதலானது மற்றவருக்கு உரியதை அவர்களுக்கே கொடுக்கும் உயரிய மனப்பான்மையை எமக்குள் வளர்க்கின்றது. கிறிஸ்து எமக்குக் காட்டிய அரசியல் வளம் இதுவாகும்.

> அரசியலானது மனிதர்களுக்குப் பணிவிடை புரிவதற்கான ஓர் அழைப்பாகும்.

## 2.2. பொருளாதார விடுதலை

பொருளாதார ரீதியிலே ஈழத்தமிழர்களாகிய நாம் பல்வேறு நிலைகளில் பின்தங்கிய நிலையிலேயே வாழ்ந்து வருகிறோம். நீண்டகாலப் போரின் காரணமாகப் பெரும் எண்ணிக்கையான மக்கள் வீடு வாசல்களை இழந்து, தொழில்வளங்களை இழந்து, வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். அரசாங்கம் வழங்கிவரும் நிவாரணத்தையே நம்பிப் பிச்சை எடுக்கும் நிலையில் வாழ்கிறார்கள். மறுபுறத்தில் "உயர்பாதுகாப்பு வலயம்" என்ற பெயரில் தமிழர் தாயகக் கடல் வளங்களும், விவசாய நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டு மக்கள் வாழ வழி தெரியாது தவிக்கிறார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் ஓரளவுக்கு முன் நகர முற்படும் மக்களும் பல்வேறு வகையான வரி அறவீடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் காணப்படுகிறார்கள். தொழில்நுட்ப வளங்கள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளது. வேலையில்லாப் பிரச்சினை (unemployment) கீழுழைப்புப் (underemployment) போன்ற காரணிகள் பெருமளவில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையானது முற்றிலும் மாற்றப் படவேண்டும். இயேசு தனது வாழ்விலே பகிர்வையே பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைத்தார். வளங்களின் சமமான பங்கீடு இன்மையால் பல மனிதர்கள் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை இயேசு நன்றாக உணர்ந்திருந்தார். எனவே தான் யோவான் 6:1-15இல் குறிப்பிடப்படும் அப்பம் பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் மக்களிடம் இருந்த உணவையே மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதை நாம் காண்கின்றோம். ஏழை லாசருக்குப் பகிரமறுத்த செல்வந்தனின் நிலைமையையும் இறைவார்த்தை தெளிவாக எமக்கு எடுத்துக் கூறுகின்றது. எனவே பகிர்வானது நீதியான முறையில் மேற்கொள்ளப்படும் போது சமூகம் இயல்பாகவே பல்வேறு நிலைகளில் முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கும்.

இயேசு தனது வாழ்விலே பகிர்வையே பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைத்தார். வளங்களின் சமமான பங்கீடு இன்மையால் பல மனிதர்கள் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை இயேசு நன்றாக உணர்ந்திருந்தார்.

## 2.3. சமய விடுதலை

சமயங்கள் தமது கோட்பாடுகளையும், போதனைகளையும் கொண்டு வாழ வேண்டியதாக இருக்கிறது. இலங்கையிலே பௌத்தமதம் அரச மத மாகப் பிரகடனப்படுத்தப்பட்டுப் பல்வேறு தீமைகளுக்கும் காரணமாயிருக்கிறது. தமிழர் தாயகப் பகுதியில் பெரும்பான்மையானவர்கள் இந்து மதத்தினைப் பின்பற்றுகிறார்கள். அன்று இந்து விவகாரங்களுக்குப் பொறுப்பாயிருந்த அமைச்சரால் மதமாற்றத் தடைச்சட்டம் பற்றிய சட்டமுன் வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டது. ஒரு சில விஷமிகள் அரசியல் பலத்தோடு கிறிஸ்தவர்களுக்கெதிரான வன் முறைகளில் இறங்கியுள்ளார்கள்.

"மீட்புப்பணி" என்பது ஆன்மீக விடுதலை மட்டுமன்று. முழு மனிதனின் முழு விடுதலையாகும். எனவே நற்செய்திப்பணி புதிய மனிதனையும், புதிய சமுதாயத்தையும் உருவாக்குவதில் தங்கியுள்ளது. இப் பணிக்கு பிறமறைகள் விரோதிகளல்ல. தாம் விரும்பும் சமயத்தைச்[7] சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துப்

"மீட்புப்பணி" என்பது ஆன்மீக விடுதலை மட்டுமன்று. முழு மனிதனின் முழு விடுதலையாகும். எனவே நற்செய்திப்பணி புதிய மனிதனையும், புதிய சமுதாயத்தையும் உருவாக்குவதில் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்ற மனிதருக்கு உரிமை உண்டு. அமைதிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் காரணமாயிருக்க வேண்டிய மதங்கள் பிரிவினைக்கும் பிளவுகளுக்கும் காலாகிவிடக்கூடாது. இன்றைய உடனடித் தேவையான அமைதியை, நீதியை நிலைநாட்டும் பணியில் அனைத்து மதங்களும் இணைந்து பணியாற்ற வேண்டும். மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் தீமைகளை, அநீதிகளை, எதிர்க்கும் உரிமை மதங்களுக்கு உண்டு. அன்று பலஸ்தீனா விலே மதம் என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட அநீதிகளை இயேசு தனி ஒருவராக நின்று எதிர்த்தார். அந்த மனநிலை எம்மிலும் உருவாக வேண்டும்.

மதங்கள் தனித்து நிற்காது ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். உழைக்கக்கூடிய வழிவகைகளை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும். தமிழ் ஈழத்தில் ஓரளவு பலம் வாய்ந்த நிறுவன அமைப்பாகத் திகழும் திருச்சபை யானது தன்னை இன்னும் அதிகமாக சமாதானத்தை உருவாக்கும் செயற் பாட்டில் ஈடுபடுத்த வேண்டும். மதங்களும் தம்மை காலத்திற்குக் காலம் சீரமைத்துக் கொள்ளவேண்டும்.

## 2.4. சமூக விடுதலை

ஈழத்தமிழர் சமூக வாழ்வில் அமைப்பு மயமாக்கப்பட்ட காரணியாக விளங்குவது சாதியம் ஆகும். சாதியத்தின் அடிப்படையில் பல்வேறுபட்ட ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. சமூகத்திலே பெரும் எண்ணிக்கையா னோர் ஏழைகளாக வாழ்கிறார்கள். வகுப்புகள் சீரின்மையும் காணப்படுகிறது. பெண்களுக்குச் சமூகத்திலே போதுமான சுதந்திரம் வழங்கப்படவில்லை. சிறுவர்களின் உரிமைகள் அனைத்து மக்களாலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

சாதியம் சார் தீமைகளுக்கு எதிராகப் போராடி, இக்காரணியை இல்லாதொழிக்க கிறிஸ்துவின் நாமத்தைத் தாங்கியுள்ள அனை வரும் முன்வரவேண்டும். மக்கள் மத்தியில் சாதியம் சார் விழிப்புணர்வை ஏற்படுத்த நாம் உழைக்க வேண்டும். இயேசு தன்னை ஒடுக்கப்பட்டோரோடு இனம் கண்டுகொண்டார் (லூக். 7:34, மாற். 2:15-17, 14:14, 6:34, 6:30-44, மத். 9:36, லூக். 6:9, 7:13, 15:20). தன்னை வெறுமையாக்கி ஏழையின் நிலையை ஏற்றுக் கொண்டார் (பிலி. 2:7). நாம் சமூக அநீதிகளை மூடி மறைக்காது

இயேசு தன்னை ஒடுக்கப்பட்டோரோடு இனம் கண்டுகொண்டார். தன்னை வெறுமையாக்கி ஏழையின் நிலையை ஏற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவோடு அவற்றை அம்பலப்படுத்தி, நீதிக்காகக் குரல்கொடுக்க வேண்டும்[1] (லூக். 11:42). தம்மைத் தாமே தலைவர்களாக்கி சமூகத்தை இருளின் பாதைக்கு இட்டுச் செல்லும் தீயவர்களிடம் இருந்து சமூகத்தைப் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டும். போலி வார்த்தைகளுக்கு ஏமாந்து ஏதிலிகளாக வாழும் மக்களை நல்வழிப்படுத்த எம்மாலான முயற்சிகளை நாம் எடுக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## முடிவாக:-

மேற்கூறப்பட்ட இறையியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட குருத்துவப்பயிற்சி வழங்குதலே இக் குருமட உருவாக்கத்தின் அடிநாதமாக இருந்து வருகின்றது. எம் மண்ணில் பணிபுரியும் குருக்கள் மண்ணினதும், மக்களினதும், அரசியல், பொருளாதார, சமூக, சமயக் கூறுகளில் ஒன்றி ணைந்து இவற்றின் பால் எழும் பிரச்சினைகளுக்கு இறை வார்த்தையின் ஒளியில் விடைபகர்ந்து மக்களை நல் வழிப்படுத்த உருவாக வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது.

பல்வேறு வழிகளில் துன்பத்தையும் சவால்களையும் எம் மக்கள் சந்தித்து வருகின்றார்கள். இடப்பெயர்வு எம் மக்களைப் பல தடவைகள் பதம் பார்த்துவிட்டது. இடப்பெயர்வு அனுபவம் மிகவும் கடினமானதாகும். இழப்புக்கள் அதாவது உயிர், பொருள் சார்ந்த இழப்புக்கள் எம் மக்களை பலமாகத் தாக்கியுள்ளன. இயற்கையின் சீற்றமும் எம் மக்களை விட்டு வைக்கவில்லை. சுனாமி ஆழிப்பேரலைத் தாக்கம் தமிழீழத்தின் பல பகுதிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. இவற்றின் மத்தியிலும் மக்களின் இறைவிசுவாசத்தை ஆழப்படுத்தி இறைவழி அழைத்துச் செல்வது இறை பணியாளர்களின் பணியாகும். எம் குருமடம் இவ்வாறான யதார்த்த சூழலை எதிர்நோக்கி பணிபுரியவிருக்கின்ற இறையடியாளர்களை உருவாக்கி வருகின் றது. மக்களோடு தம்மை இரண்டறக் கலந்து இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கும் பணியாளர்கள் இன்று அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இறையரசை இவ்வுலகில் நிலைநாட்டும் பணி காத்திரமானது. இப்பணியானது ஒவ்வொருவரினதும் பண்பாட்டுத் தளத்தினூடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும்.

கிறிஸ்துவினது மனுவுடல் ஏற்பால் அர்ச்சிக்கப்பட்ட அனைத்துப் பண்பாடுகளும் புனிதமானவை. ஒவ்வோர் பண்பாட்டுத் தனித்துவமும் மதிக்கப் பட்டு அதனூடாக நற்செய்தி அறிவிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். பண்பாட்டுக் கூறுகளை தன்னுள் ஈர்த்துக்கொள்ளாத விசுவாச வாழ்வு பயனற்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. cf. Canon 237/1
2. cf. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், திருப்பணிப் பயிற்சி, தேடல் வெளியீடு, திருச்சிராப்பள்ளி 2001, பக். 334.
3. cf. ஏ.ஜே.வி. சந்திரகாந்தன், தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம், கிறிஸ் தவ மன்றம், யாழ் பல்கலைக்கழகம், 1993, பக். 56.
4. cf. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், ......................., பக். 748.
5. cf. தொடக்க நூல் 1:26, 2:23
6. cf. சீராக் 17:3-10
7. cf. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், ......................., பக். 475.
8. cf. சேவியர் இருதயராஜ், வீதி எங்கும் விடுதலை, வீரமாமுனிவர் கழக வெளியீடு, திருச்சிராப்பள்ளி, 1984. பக். 193.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்க நூலின் முதல் மூன்று அதிகாரங்களில் துலங்கும் வாழ்வியல் உண்மைகள்

அருட்தந்தை சா. ஜெயறஞ்சன்

"நாம் ஏன் பிறந்தோம்?" என்ற கேள்வி பலதடவைகளில் எம்மைக் குடைந்தாலும், அதற்கான விடை தேடலில் எமது கவனம் இலகுவில் சிதறடிக்கப்பட்டு விடுகிறது. ஆயினும் அவ்வப்பொழுதுகளில் ஏன், எதற்கு, எவ்வாறு என்ற தொடர் வினாக்கள் எம்மைக் கைது செய்து எமது வாழ்வின் இருப்பைக் கேள்வியாக்கிட அதன் அடிப்படைகளுக்குள் நாம் ஆழமாகச் செல்ல வைக்கின்றன. வாழ்வின் ஆரம்பங்களில் கேட்ட ஒரு வரி நினைவுக்கு வருகிறது.

'கடவுள் படைத்தார் படைப்பை மனுவுக்காக.
மனுவைப் படைத்தார் தனை வணங்க'.

'கடவுள் படைத்தார்
படைப்பை மனுவுக்காக.
மனுவைப் படைத்தார்
தனை வணங்க'

எமது வாழ்வியலின் அடிப்படை வினாக்களுக்கான விடைகளை வழங்குவதில் தொடக்க நூலின் முதல் மூன்று அதிகாரங்கள் காத்திரமான பங்களிப்புச் செய்கின்றன. அனைத்தினதும் ஆரம்பத்தைத் தாங்கியுள்ள தொடக்கநூல் உலகினதும், மனிதனதும், பாவத்தினதும் மற்றும் மீட்பினதும் தொடக்கத்தை எமக்குத் தொட்டுக் காட்டி எம் இருப்பின் அடிப்படைகளை ஆய்வு செய்ய எமக்குக் களம் அமைக்கின்றது. குரு மரபிலும் (தொ.நூ. 1:1-2:4அ), யாவே மரபிலும் (2:4ஆ-3:24) வடிவமைக்கப்பட்டுள்ள முதல் மூன்று அதிகாரங்களினதும் சாராம்சம் வருமாறு; கடவுள் நல்லவர். அவர் படைத்த அனைத்தும் நல்லவையே! மனிதர்கள் இறைவனின் திட்டத்திற்குக் கீழ்ப்படிய கடமைப்பட்டுள்ளார்கள். கடவுள் ஒருவரே ஆராதனைக்குரியவர் என்பதாகும். அவரிலிருந்தே வாழ்வின் இருப்பைப் பெற்றுக்கொண்ட மனிதகுலம் அவரைச் சார்ந்திருந்து, பொறுப்புணர்வில் வளர்ந்தே வாழ்வின் நிறைவைக் கண்டு கொள்ளலாம் என்பதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றுமில்லாமையிலிருந்து கடவுள் ஒழுங்கமைக்கப் பெற்ற, அழகிய உலகைப் படைத்தார்

விவிலிய ஆசிரியர் தொடக்கத்திலே இறைவனின் படைப்புக் குறித்த விடயங்களை எழுத முற்பட்டபோது, இஸ்ரயேலரைச் சூழ வாழ்ந்த மொசெப் பத்தேமியர், பபிலோனியர் மத்தியிலே நிலவிய படைப்புப் பற்றிய புராணக் கதைகள் (எனுமா எலிஷ், கில்காமேஷ்) தங்கள் செல்வாக்கைச் செலுத்தி யமை கண்கூடு. அப்புராணக் கதைகள் முன்வைப்பது போன்று தெய்வங்கள் தங்களிடையே சண்டையிட்டு ஒன்றையொன்று வெற்றிகொண்டு உடற்பாகங்கள் துண்டாடபட்டு உலகம் உண்டானது என்பதில் கிஞ்சித்தும் உடன்படாத விவிலிய ஆசிரியர், கடவுள் ஞானத்தோடும், வல்லமையோடும் தமது வார்த் தையின் வலிமையால் உலகைப் படைத்தார் என்பதைத் தெளிவாக்குகிறார். கடவுள் எந்தப் பொருளும் கொள்ளாமல், ஒன்றுமில்லாமையில் தான் அனைத் தையும் உருவாக்கினார் என்பது விவிலிய ஆசிரியரின் ஆணித்தரமான கருத்து.

"ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின; அவரது சொல்லின் ஆற்றலால் வான் கோள்கள் எல்லாம் உருவாயின" (தி.பா. 33:6).

"ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின; அவரது சொல்லின் ஆற்றலால் வான்கோள்கள் எல்லாம் உருவாயின" (தி.பா. 33:6).

'படைத்தார்' என்ற தமிழ்ப்பதத்திற்கான மூலச்சொல் எபிரேய மொழியில் 'பரா' (படைத் தார்) என்ற வார்த்தையில் கடவுள் எந்தப் பொரு ளின் ஆதாரத்தையும் கொண்டிருக்காமல் அனைத் தையும் படைத்தார் என்ற கருத்து அடங்கியுள் ளது. 'கடவுள் படைத்தார்' என்று ஆரம்பத்தில் கூறுகின்ற தொடக்க நூல், இத்துடன் நின்றுவிட்டால் இந்த ஆழ்ந்த உண்மை மக்களுக்குப் புரியாது என்பதனால் கடவுள் எப்படிப் படைத்தார் என்பதை விளக்கித் தருகிறார். ஆறு நாட்கள் படைத்தார் என்று 'குருக்கள்' மரபு ஆசிரியரும், களி மண்ணினால் மனிதனை உருவாக்கினார் என்று 'யாவே' மரபு ஆசிரியரும் விளக்கம் தருகின்றனர்.

## குருக்கள் மரபில் வழங்கப்படும் படைப்பின் முதல் விவரணம்

தொ.நூ.1:1-2:4அ வரையுள்ள படைப்பின் முதல் விவரணத்தின் முதல்வரியில், "தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார்." (1:1) எனவும், அப்பகுதியின் நிறைவு வரியிலும் (2:4அ)" இவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுலக மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம்'' எனவும் குறிப்பிடப்பட்டு, இப்பகுதி ஒரு தனி அலகாகக் காட்டப்படுகிறது. இங்கு ஆசிரியர் ஆரம்பத்திலும் நிறைவிலும் தான் விவரிக்கும் படைப்புப் பற்றிய கருத்துக்களின் சுருக்கத்தை எடுத்துக்காட்டக் கையாளும் இலக்கிய நயம் 'அகப்படுத்துதல் அல்லது உள்ளடக்கல்' (Inclusion) என்பதாகும்.

கடவுளுடைய வார்த்தை படைக்கும் சக்தியுடையது. கடவுளால் என்ன உச்சரிக்கப்படுகின்றதோ, அது உடனே உருப்பெறுவதை இப்பகுதியில் போதியளவு காண்கின்றோம். வார்த்தை என்பதைக் குறித்து நிற்கும் எபிரேய மூலச்சொல் 'டபார்' (dabar) அதன் படைப்பாற்றலை வெளிப்படுத்துவதாயுள்ளது. "அப்பொழுது கடவுள், 'ஒளி தோன்றுக!' என்றார்; ஒளி தோன்றிற்று'' (தொ.நூ.1:3). கடவுள் சொன்னால் போதும். அது அக்கணப் பொழுதிலேயே உருவாகிவிடும். இதே கருத்தை, "மூதாதையரின் கடவுளே, இரக்கத்தின் ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் உமது சொல்லால் உண்டாக்கினீர்'' சாலமோன் ஞானமும் (9:1) தெளிவாக்குகிறது.

ஆறு நாள் படைப்பையும் ஆசிரியர் ஒரே விதமான வடிவமைப்புக்குள் வழங்குகின்றார்.

| | | |
|---|---|---|
| முன்னுரை | : | கடவுள் சொன்னார். |
| கட்டளை | : | உண்டாகுக. |
| விளைவு | : | உண்டாயிற்று. |
| எண்ணம் | : | நல்லது எனக் கண்டார். |
| முடிவுரை | : | மாலையும் காலையும் சேர்ந்து.... |

இதைக் கண்ணுறும்போது கடவுள் கட்டளையிட, அனைத்தும் நலமே நிறைவேறுகின்றன என்ற கருத்து தெளிவாகிறது. ஆறுநாள் படைப்பும், ஏழாம் நாள் ஓய்வும் விவிலிய அடிப்படையில் நிறைவெண் எனக் கொள்ளப் படும் ஏழின் சிறப்பைப் பகர்கின்றன.

## இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதன்

படைப்பனைத்தினதும் சிகரமாக மனிதன் படைக்கப்படுவதற்கு முன்பாக அவன் உயிர்வாழத் தேவையான அனைத்தும் உண்டாக்கப்பட்டுள்ளமையும், இறைவன் மேற்கொள்ளும் தெய்வீக ஆலோசனையும், முன்கூட்டிய திட்டமிடலும், மனிதப் படைப்பின் தனித்துவத்தையும், சிறப்பையும் பறை சாற்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். (தொ.நூ. 1:26) 'இறைஉருவிலும், சாயலிலும்' என்பதற்கு விவிலிய ஆய்வாளர்கள் கொடுக்கும் விளக்கம் பின்வருமாறு அமைகிறது. பழைய ஏற்பாட்டில், "உயிருள்ள" கடவுள் என்ற தன்மையினால் "யாவே" மற்ற கடவுளிடமிருந்து வேறுபட்டு நிற்கிறார். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர்; அவர் வழிநடத்துபவர்; உயிராற்றல் கொண்ட அத்தனை செயல்களையும் ஆற்றினார். அதே போன்று, மனிதன்-முழு மனிதன்-உயிராற்றல் கொண்டு செயல்படுவதனால் கடவுளின் சாயலுடையவனாக விளங்குகின்றான். ஆண் - பெண் சமத்துவத்திலேயே இந்நிலை மேலோங்கி விளங்குகின்றது. இறையன்பினாலே படைக்கப்பட்ட மனித இனம் தம் மத்தியிலே நிறையன்பை வாழும்போது இறை உருவிலும், சாயலிலும் பங்கேற்றல் நடைபெறுகிறது. "ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்" (1 யோவா 4:8ஆ). வத்திக்கான் சங்க ஏட்டிலே நாம் காணும் சில கூற்றுக்கள் இவற்றை வலியுறுத்துகின்றன. "மனிதர் 'கடவுளின் உருவில்' படைக்கப்பட்டவர்கள்; தம்மைப் படைத்தவரை அறிந்து அவருக்கு அன்பு செய்ய அவர்களால் இயலும். மண்ணில் மனிதர்கள் என்ற படைப்பை மட்டும் கடவுள் அவர்கள் பொருட்டே படைக்கத் திருவுளம் கொண்டார்." (இ.உ.தி. இல. 12, 24)

இவ்வாறு நோக்கும்போது மனிதர்கள் வெறும் படைப்புக்கள் அல்லர் மாறாக இறைவனின் நன்மைத்தனத்தையும், மனித மாண்பினையும் தாங்கியவர்கள். அவர்கள் மட்டுமே இறைவனோடு அன்புறவை பரிமாறும் ஆற்றலுடையவர்கள். சுய அறிவைத் தாங்கிய நிலையில் சக மனிதரோடு அன்பைப் பகிர்ந்து கொள்ளக்கூடியவர்கள் படைப்பைப் பாதுகாத்து விருத்தி செய்யும் உயர் பணியின் பங்காளிகள்.

## படைப்பின் நிறைவில் கடவுளின் ஓய்வு

"கடவுள் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார்" (தொ.நூ. 2:2ஆ-3அ). கடவுள் ஓய்ந்திருந்தார் என்பது இரு விடயங்களைச் சுட்டிக் காட்டுகின்றது. முதலாவதாகக் கடவுள் மகிழ்வோடும், திருப்தியுணர்வோடும் அவற்றிலே எதுவும் குறைவுபடவில்லை என்ற நிலையில் தம் படைப்புக்களை மீளாய்வு செய்து தியானிக்கும் வல்லமையுடையவர். இரண்டாவதாகக் கடவுள் படைப்பினை, அவை போதுமானவையாகவும், பூர்த்தியானவையுமான உள்ள நிலையில், அவை மட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கீடு செய்யாமல் தாமாகவே இயங்க மனித இனத்தின் கண்காணிப்பில் அவற்றைக் கையளித்துள்ளார் என்பதுமாகும்.

பபிலோனியருக்கும், கனானேயர்களுக்கும் ஏழாம் நாள் தீமையானது; ஆகவே அன்று வேலை செய்யக்கூடாது என்ற ஒரு எதிர்மறையான நம்பிக்கை இருந்தது. 7ம் நாள், 14ம் நாள், 21ம் நாள் தீமையான நாட்களென அவர்களால் கருதப்பட்டன. ஆனால் இஸ்ரயேல் மக்கள் "ஓய்வு நாள்" என்ற வழக்கத்தை தங்களைச் சுற்றி வாழும் மற்ற நாட்டவரிடமிருந்து தான் பெற்றனர் என்றாலும், அவர்களிடமிருந்து இஸ்ரயேல் மக்கள் ஒருபடி மேலே சென்று, ஓய்வு நாள் - வேலையிலிருந்து விடுபட்டு, சோம்பலாய் இருப்பதற்காகவன்று, மாறாக, அந்நாளை கடவுள் வழிபாட்டிற்காக ஒதுக்கிவிட வேண்டும் என்று போதித்தனர். தீமையின் நாள் என்ற நம்பிக்கையை விடுத்து, விழாவின் நாள் என்றும், கடவுளுக்கு அர்ப்பணமான நாளாகையால் மகிழ்ச்சியின் நாள் என்றும் மாற்றினர். இதிலே தான் இஸ்ரயேல் மக்களின் தனித்தன்மை விளங்குகிறது. கடவுளை மக்கள் புகழவும், போற்றவும் அதனூடாகப் புனிதப்படுத்தப்படவும் வாரத்தின் ஒரு நாளை ஒதுக்கிட வேண்டும். இதற்கு கடவுளே நமக்கு வழிகாட்டுகின்றார் என்பது தொடக்க நூல் போதனை இதற்கு தூய பவுலின் கூற்றும் பெரும் உந்து சக்தி அளிக்கிறது.

"ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம்" (தி.தூ.ப. 17:27இ-28அ).

## யாவே மரபில் வழங்கப்படும் படைப்பின் இரண்டாம் விவரணம் (தொ.நூ. 2:4ஆ - 3:24)

ஆசிரியர் இப்பகுதியில் கடவுளை 'யாவே' என்று அழைப்பதிலிருந்தும், படைப்பின் முதல் விவரணத்திலிருந்து வேறுபட்ட இலக்கிய நடையை இங்கே காண்பதிலிருந்தும் இதனை யாவே மரபு ஆசிரியர் எழுதியிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. கடவுள் படைக்கும் விதத்தையும், மிகுந்த செயற்பாடோடு மனிதனை உண்டாக்கிய விதத்தையும் மனிதவியல் முறையில் ஆசிரியர் சுவைபடத் தருகின்றார். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே நெருங்கிய, ஈடுபாடான உறவு இங்கு பரிணமிப்பது கண்கூடு.

## களி மண்ணிலிருந்து உருவாகும் மனிதன் (தொ.நூ. 2:7-16)

"ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கிட, அவன் நாசிகளில் உயிர்மூச்சை ஊத, மனிதன் உயிருள்ளவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனான்" (2:7) என்று தொடக்க நூல் ஆசிரியர் கூறுகின்றார். மனிதனைக் கடவுள் எப்படிப் படைத்தார் என்ற கேள்விக்கு விடையளிக்கும் வகையில் இந்நிகழ்வை வழங்கும் ஆசிரியர், இரண்டு செய்திகளுக்கு இங்கு அழுத்தம் கொடுக்கின்றார்: i) மனிதனை உருவாக்க இறைவன் நிலத்தின் மண்ணைப் பயன்படுத்தினார்; ii) மனிதனுக்கு உயிர் கொடுக்கத் தனது உயிர் மூச்சை ஊதினார். மனிதன் வெறும் உடலைத் தாங்கிய சடப்பொருள் அல்ல. அவ் வுடலுக்குள்ளே இறைவனின் உயிர் மூச்சைத் தாங்கிய ஆன்மாவையும் கொண்ட உன்னத படைப்பு என்பது தெளிவாகிறது. இதனால் அவன் மற்ற எல்லாப் படைப்புக்களிலுமிருந்து மேலெழுந்துள்ளான். சுயாதீனத்தோடும், அறிவுத் திறனோடும் கடவுளோடு தொடர்பு கொள்ளும் தகுதி வாய்ந்தவனாய் உள்ளான்.

## மனிதனிலிருந்து உருவாகும் பெண் (2:18-25)

படைப்புக்கள் எதுவும் மனிதனுக்கு, அவனது மகத்துவத்தில், இணையான துணையாகக் காணப்படாமையினால் அவனுக்கு சரிநிகர் ஏற்ப டுத்தக் கடவுள் விழைகிறார். "ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார்" (2:22). மனிதருக்கு மனிதரே துணையாக அமைய முடியும் என்பது இங்கு வலிந்துரைக்கப்படுகிறது. இதயத்திற்கு அண்மித்த பகுதியாகிய விலா எலும்பிலிருந்து பெண் உருவாக்கப்பட்டுள்ளமை ஆண் - பெண் சமத்துவத்திற்கான அச்சாணியாகத் துலங்குகின்றது. ஆணோ, பெண்ணோ ஒருவர் மற்றவருக்கு மேற்பட்டவரோ அன்றேல் கீழ்ப்பட்டவரோ அல்ல; மாறாக முற்றும் சமமானவர்கள். பரஸ்பர மதிப்புக்கும், அன்புக்கும், உறவுக் கும் உரித்துடையவர்கள். மனிதனின் ஆழ்ந்த நித்திரையிலே பெண் உண்டாக் கப்படுவது, அவளது இருப்பிற்கும் கடவுளே காரணமாகின்றார். கடவுளின் உயிர்மூச்சைத் தனக்குள்ளே தாங்கியவளாக உள்ளாள் என்பதை உணர்த்துகிறது.

## இறைவன் நடத்தி வைக்கும் முதற்திருமணம் (2:22-25)

திருமணம் புனிதமானது. அது இறைவனால் ஏற்படுத்தப்பட்டது. ஆண் பெண்ணாலும், பெண் ஆணாலும் நிறைவுபடுத்தப்பட்டு, அன்புறவில் கனிகளைப் பெற்று இப்புவியை நிரப்பி விருத்தியாக்கும் பணியைப் பெற்றுக் கொண்டவர்கள். உடலும், உயிரும் போல நகமும், சதையும்போல கணவன், மனைவி ஒன்றிணைந்து வாழ்ந்து அவ்வன்புறவில் இறைத் தன்மையைப் பறைசாற்றி வாழ எம் முதற்பெற்றோர் அறிவுறுத்தப்பட்டனர். திருமணத்தின் பண்புகளாகிய ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கொருவன் என்ற **ஒருமை**,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈருயிர் ஓருடலாய் இணைக்கப்படும் அவர்கள் இறுதிவரை அன்புறவில் பிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் <u>கட்டவிழாமை</u> இங்கு ஆணித்தரமாக இடித்துரைக்கப்படுகின்றன.

## பாவச் சோதனையும் பாவமும் (அதி, 3)

கடவுளின் கட்டளையை மீறிப் பாவம் செய்த எம் முதற் பெற்றோர் அருள் வாழ்வை இழந்தனர் என்பது அவர்கள் வெட்கத்தில் நாணி, ஒருவரையொருவர் நேர்கொண்டு பார்க்க முடியாமல் ஏதேன் தோட்டத்து மரங்களுக்குள் ஒளிந்து கொள்ளலில், இறைபிரசன்னத்திலிருந்து விலகிச் செல்லலில், தெளிவாகின்றது. பாவம் இறைவனுடனான எம்முறவிலும், சக மனிதர்களுக்கிடையிலான உறவிலும் விரிசலை, பிளவை ஏற்படுத்துகின்ற நிலையை தொடக்க நூலின் மூன்றாம் அதிகாரத்தில் யாவே ஆசிரியர், சுவாரஸ்மான கதைவடிவில் எம் சிந்தைக்கு விருந்தாக்குகின்றார். இஸ்ரயேல் மக்களின் வெறுப்புக்கு ஏற்கனவே ஆளாகியிருந்த பாம்பை பாவச் சோதனை யாளனாகக் காட்டுவதன்மூலம், பாவம் எவ்வளவு தூரம் வெறுக்கப்பட வேண்டியது, அருவருக்கப்படவேண்டியது என்பதைச் சொல்லாமல் சொல்லு கின்றார். பாவத்தினூடாக, கீழ்ப்படியாமையினூடாக இறைவனிடமிருந்து முதற் பெற்றோர் விலகிச் சென்றாலும், இறைவன் அவர்களை விட்டு விலகாது, தொடர்ந்தும் அவர்களைப் பரிபாலித்து, மீட்பின் வாக்குறுதியை அளிப்பது இறைவனின் பேரிரக்கத்தையும், பெருந்தன்மையையும் பறை சாற்றுகிறது.

## நிறைவாக

இறைவனின் அளவிறந்த ஞானத்திலும், வல்லமையிலும் வடிவமைக் கப்பட்ட இப்பிரபஞ்சம், வியத்தகு முறையில் இயங்கும் விதம் படைத்தவரை நாம் சிறிய அளவிலேனும் உணர்ந்து கொள்ள எமக்குத்துணை நிற்கின்றது. போரும், பூசலும், மனித அழிவும், இயற்கையோடு முரண்படலும் திசை யெங்கும் காணப்படும் இன்றைய உலகில், தொடக்கநூலின் முதல்மூன்று அதிகாரங்கள் எமக்குப் பலத்த சவாலையும், படிப்பினையையும் அளிப்பதாக உள்ளது. எமது வாழ்வியல் ஆதாரங்களின் அடிப்படைகளை நாம் அடிக்கடி மீள்நோக்குவது பரம்பொருளாம் இறைவனோடும், அவர் சாயலைத் தாங்கிய அனைத்து மனிதரோடும் நேரிய உறவு கொண்டு வாழ எமக்குத் தூண்டுதல் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாள் எம்முடன் வாழும் அன்னை

அருட்சகோ. எ.செ. கி. மரியதாஸ்

## முன்னுரை



"நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38).

இறைமகன் இயேசுவின் மீட்புத்திட்டத்திலே அன்னை மரியாள் பெரும் பங்காளியாக இருக்கின்றார். இயேசுவின் பிறப்பு முதல் அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு வரை அவருடன் கூட நடந்தவள் அன்னை மரியாள். அன்னையைப் பற்றி பழைய ஏற்பாட்டிலேயே கூறப்பட்டிருப்பது வியக்கத்தக்கது ஒன்றல்ல. எசாயா இறைவாக்கினர், பிறக்கவிருந்த குழந்தையைப் பற்றியும், அதன் தாய் பற்றியும் உரைத்த இறைவாக்கு (எசா 7:14) புதிய ஏற்பாட்டில் இயேசுவின் பிறப்பிலே நிறைவு காண்பதை நாம் காண்கின்றோம்.

இயேசுவின் பிறப்பிற்கு பின்பு அவரது வளர்ச்சிப்படிகளில் குறிப்பாக ஞானத்திலும், அறிவிலும், வளர அன்னை பங்காளியாக இருந்தார். அத்தோடு அவரால் தெரிவு செய்யப்பட்ட சீடர்களோடு கூட அன்னை இருந்ததை திருத்தூதர் பணிகளில் நாம் காண்கின்றோம் (திப 1:14). தனது அன்னையை எம் எல்லோருக்கும் அன்னையாக கல்வாரியில் தன்னை தியாகப்பலியாக ஒப்புக் கொடுக்க முன்பு அன்புச் சீடர் மூலம் மனுக்குலத்தின் தாயாகத் தந்தார். அதே போன்று அன்னையும் எம்மை தமது பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டார் (யோவா.19: 26-27).

பாவத்தில் வீழ்ந்த மனுக்குலத்தை மீட்க தனது உயிரை பலி கொடுத்தார் இயேசு. இருப்பினும் மனுக்குலம் தொடர்ந்தும் பாவத்தில் வீழ்ந்து கொண்டிருப்பதனால், அன்னை மரியாள் இப்போது பல இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம் தந்து மனமாற்றத்திற்காக எம் ஒவ்வொருவரையும் அழைப்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மையே. இவற்றை திருச்சபை அதிகார பூர்வமாக பிரகடனப்படுத்தியிருப்பதை நாம் அறிவோம்.

அன்னையின் இத்தகைய தரிசனங்கள் முடிவடைந்து விடவில்லை மாறாக தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றது.

## மரியன்னையும் திருச்சபையும்

கபிரியேல் தூதர் கன்னிமரியாளுக்கு கடவுளின் வார்த்தைகளைக் கூறியதும் அவற்றை தன் உடலிலும், உள்ளத்திலும் ஏற்றார், உலகிற்கு வாழ்வை அளித்தார். எனவே தான் மரியாள் உண்மையாகவே கடவுளும் நமது மீட்பருமானவரின் தாயென ஏற்றுக்கொள்ளப்பட்டு போற்றப்படுகின்றார். இயேசுவின் மீட்புத்திட்டத்தில் பிரிக்க முடியாத அளவிற்கு அன்னை அவருடன் இணைந்திருந்தாள். இறைத்தந்தையின் திட்டத்தை நிறைவேற்றினார். இதனால் தந்தைக்கு மிகவும் பிரியமான மகளாகவும், தூய ஆவியின் ஆலயமாகவும் திகழ்கின்றார். எனவே தான் மரியன்னை விண்ணிலும், மண்ணிலும், எல்லாப் படைப்புக்களையும் விட சிறந்து விளங்குகின்றார்.

திருச்சபையின் நிறுவுனரும், தலைவரும் இயேசு கிறிஸ்துவே இதற்கு அடிப்படைக் காரணமாக திகழ்பவர் அன்னை மரியாள். அத்தோடு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோர் திருச்சபையின் உறுப்பினராக இணைவதற்கு தனது அன்பினால் ஒத்துழைப்புக் கொடுத்தார். எனவே தான் திருச்சபையின் உயரிய, சிறப்புப் பெற்ற, முற்றிலும் தனிமை வாய்ந்த உறுப்பாகவும், நம்பிக்கையினதும் அன்பினதும் முன் மாதிரியாக மரியாள் திருச்சபையில் போற்றப்படுகின்றார். எனவே, தூய ஆவியினால் வழிநடத்தப்படும் கத்தோலிக்க திருச்சபை மரியாளை தனது தாயாக ஏற்றுக்கொண்டுள்ளது.(LG. 53)

## எமக்கும் அன்னை

ஒரு குழந்தையை பெற்றெடுத்த தாய் தனது பிரசவ வேதனை எல்லாம் முடிந்த உடனோ அல்லது குழந்தை வளர்ந்த பின்போ தாய் மைக்கு விடை கொடுத்துவிட முடியாது. இயேசுவின் தாய் மரியாள். மரி அன்னையின் தாய்மை ஓர் நிறைவான உறவாக இருப்பதாலும், நாங்கள் இயேசுவின் பாகங்களாக இருப்பதாலும் அவளின் பிள்ளைகளாகிறோம். "நான் உங்களோடு இணைந்து இருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்" (யோவா 15: 4அ). எனவே மரி அன்னை எம் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் மரியாளின் வயிற்றில் கருவுற்று பிறக்காவிடினும் இயேசுவில் தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளாகிறோம். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்தில் கூறியது போல அவள் திருச் சபையின் தாய் (LG-53).

நாங்கள் மரியாளின் வயிற்றில் கருவுற்று பிறக்காவிடினும் இயேசுவில் தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளாகிறோம்.

ஒரு பெண் தாயாக இருப்பது ஓர் தற்காலிக நிர்ப்பந்தம் அல்ல. இது வளர்ச்சியும் முன்னேற்றமும் உடைய வாழ்க்கை. வாழ்வு முழுவதும் தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் இடம்பெறும் உறவுப் பரிமாற்றங்களினால் தான் தாய்மை பக்குவப்படுகிறது. எனவே ஒரு குழந்தையின் பிறப்பை மட்டும் வைத்து ஒரு பெண்ணின் தாய்மையை நோக்குவது முறையல்ல. இந்த வகையில் இயேசுவின் பிறப்பை மட்டும் வைத்து மரியாளின் தாய்மையை நாம் நோக்க முடியாது. மாறாக மரியாளின் அமல உற்பவமும், கன்னிமையும் இறையரசின் தூய்மையான தாய்மைக்கு தயார்படுத்தியது. மரியாள் வான தூதருக்கு கொடுத்த பதிலினால் அவள் கடவுள்- மனிதரின் தாயாகினாள். இதனால் உலகத்தின் தாயானாள். சிலுவையில் தொங்கிய இயேசுவோடு கல்வாரி மலை கலங்கிய போதும் மனம் கலங்காது இறுதிவரை பயணித்ததனால் மீட்படைந்த சமுதாயத்தின் தாயானாள். இந்த உலக வாழ்வில் அன்னையின் தாய்மை பக்குவம் அடைந்து விண்ணகம் சென்று விண்ணக மண்ணக அரசியாகவும், எம் தாயாகவும் திகழ்கின்றாள்.

## மரி அன்னைக்கு பக்தி முயற்சிகள்

மக்களால் உருவாக்கப்பட்டு மக்களாலேயே உருப்பெற்று மக்கள் மத்தியில் பரவி வளர்வது மக்கள் பக்தி. அது திருச்சபையின் மேல் மட்டத்திலிருந்தோ, திருச்சபை தலைவர்களாலோ உருவாவது அல்ல. மாறாக சாதாரண பாமர மக்களினால் இறை நம்பிக்கையின், இறை அனுபவத்தின் வெளிப்பாடு. இத்தகைய பக்தி முயற்சிகள் எல்லா இனத்தவரிடமும், எல்லா நாட்டவரிடமும் இருக்கின்றது. இந்த பக்தி முயற்சியானது புனிதர்களின் வாழ்வை ஆதாரமாக வைத்து உருப்பெறலாம். அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், வாழ்ந்த இடம், அடக்கம் செய்யப்பட்ட கல்லறை போன்றவற்றை மையப்படுத்தியும் உருவாகலாம். இந்த வரிசையில் புனிதர்களுக்கெல்லாம் புனிதையாகிய அன்னை மரியாளுக்கு நூற்றுக்கணக்கான பக்தி முயற்சிகள் இருப்பது வியக்கத்தக்கது ஒன்றல்ல, மாறாக அன்னை தொடர்ந்தும் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் வாழ்கின்றாள் என்பதின் வெளிப்பாடாக இவை அமைகின்றன. அவள் எமக்காக தன் மைந்தனிடம் இடைவிடாது பரிந்து பேசுகிறாள் என்பது எமது நம்பிக்கை. மரியன்னை பக்தி முயற்சி மக்கள் மத்தியில் உருவாகினாலும், திருச்சபையும் அதிகார பூர்வமாக ஆண்டு முழுவதும் மரியன்னையின் வணக்கத்தைப் பல்வேறு பெருவிழாக்கள், விழாக்கள், நினைவு, விருப்ப நினைவு கொண்டாட்டங்களால் நினைவு படுத்துகிறது. திருவழிபாட்டு அட்டவணையில் மரியன்னையின் திருநாட்கள் 13 குறிப்பிடப்பட்டுள்ளன.

> புனிதர்களுக்கெல்லாம் புனிதையாகிய அன்னை மரியாளுக்கு நூற்றுக் கணக்கான பக்தி முயற்சிகள் இருப்பது வியக்கத்தக்கது ஒன்றல்ல, மாறாக அன்னை தொடர்ந்தும் எம் மத்தியில் வாழ்கின்றாள் என்பதின் வெளிப்பாடாக இவை அமைகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1) பெருவிழாக்கள்: | ஜனவரி | 01 | இறைவனின் அன்னை |
| | ஆகஸ்ட் | 15 | மரியன்னையின் விண்ணேற்பு |
| | டிசம்பர் | 08 | அமல உற்பவம் |
| 2) விழாக்கள்: | மே | 31 | எலிசபெத்து சந்திப்பு |
| | செப் | 08 | கன்னிமரியாளின் பிறப்பு |
| 3) நினைவு நாட்கள்: | ஆகஸ்ட் | 22 | அரசியான கன்னி மரியா |
| | செப் | 15 | வியாகுல அன்னை |
| | ஒக் | 07 | செபமாலை அன்னை |
| | நவ | 21 | மரியாளின் அர்ப்பணம் |
| 4) விருப்ப நினைவு | பெப் | 11 | லூர்துநகர் புனித கன்னிமரியா |
| | யூலை | 16 | கார்மேல் அன்னை |
| | ஆக | 05 | புனித கன்னி மரியாளின் பேராலய அர்ப்பணம் |
| | | | திரு இருதய விழாவிற்கு அடுத்த சனி, மரியாளின் மாசற்ற இருதயம் |

இவை தவிர பக்தி சபைகள், துறவற சபைகள், நினைவு ஆலயங்கள் ஆகியவையும் பாதுகாவலியான மரியன்னையின் திருநாளைக் கொண்டாடுகின்றன. (எ.கா. ஏப் - 22 இயேசு சபையின் அன்னை, புனித கன்னி மரியா)

இத்தகைய விழாக்கள் அன்னை என்றும் எம்மோடு இருக்கிறாள் என்பதை எமக்கு வெளிப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை தந்த காட்சிகள்

காலத்துக்கு காலம் அன்னை பல இடங்களில் தரிசனம் தந்து தனது பிரசன்னத்தை, தனது இருப்பை எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். இவற்றை திருச்சபை அதிகாரபூர்வமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

எடுத்துக்காட்டாக:

| | |
|---|---|
| மெக்சிக்கோவில் குவாதுலூப்பே | 1531 |
| பிரான்ஸ் நாட்டில் சலேத் நகர் | 1846 |
| பிரான்ஸ் நாட்டில் லூர்துநகர் | 1858 |
| பிரான்ஸ் நாட்டில் போந்து மென் | 1871 |
| போர்த்துக்கல் நாட்டில் பத்திமா | 1917 |
| பெல்ஜியத்தில் போரெங் | 1932 |
| இந்தியாவில் அன்னை வேளாங்கண்ணி | 16ம் நூற்றாண்டு |

காலத்துக்கு காலம் அன்னை பல இடங்களில் தரிசனம் தந்து தனது பிரசன்னத்தை, தனது இருப்பை எமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

அன்னையின் இந்த காட்சிகள் அடிப்படையில் அவளின் திருமகன் இயேசுவோடும், திருச்சபையோடும் தொடர்புள்ள செய்திகளை வழங்குவதற்காகவே அமைந்த காட்சிகளாக உள்ளன. மனித குல மீட்பில் அன்னை மரியா கொண்டுள்ள தொடர் ஈடுபாட்டை இக்காட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

## முடிவுரை

மக்கள் மத்தியில் அன்னையின் பிரசன்னம் முற்றுப் பெற்றுவிடவில்லை. மாறாக அது தொடர்கின்றது என்பதை அன்னையின் தரிசனங்கள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன. இயேசுவின் தாயான மரியா கல்வாரியில் இயேசு உயிரை தியாகம் செய்ய முன்பு மனுக்குலத்தின் தாயாக இயேசுவால் ஒப்புவிக்கப்பட்டார். அன்னையும் எம்மை தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். தாய்க்குரிய பாசத்தோடு என்றும் எமக்கு செவிசாய்த்து தம் மகனிடம் எமக்காக பரிந்து பேசிக்கொண்டே இருக்கின்றாள். அண்மையில் நாம் சந்தித்த 'சுனாமி' அழிவிலும் கூட பல இடங்களில் அன்னை தரிசனம் கொடுத்திருக்கும் செய்திகளை நாம் கேட்கின்றோம். இத்தகைய அன்னையின் ஒவ்வொரு பிரசன்னமும் கல்வாரியில் தன் மகனின் துன்பத்தில் இறுதிவரை பங்கெடுத்த அன்னை இன்றும் எமது வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் எம்மோடு கூடவே இருக்கின்றாள் என்பதை சந்தேகமின்றி தெளிவுபடுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏற்கெனவே விண்ணுலகில் ஆன்மாவோடும் உடலோடும் மாட்சிமைப் படுத்தப்பெற்றிருக்கும் இயேசுவின் தாய் வருங்காலத்தில் நிறைவு பெறப் போகும் திருச்சபையின் உருவும் தொடக்கமுமாய் இருக்கின்றார். இது போலவே இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும்வரை (2பேதுரு 3-10) பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு உறுதியான எதிர்நோக்குக்கும் ஆறுதலுக்கும் அடையாளமாக ஒளிர்கின்றார்" (LG-68).

ஆகவே எமது பக்தியானது உள்ளார்ந்த, தாய் பிள்ளை உறவு கொண்ட, பரிசுத்தமான, தொடர்ச்சியான, சுயநலமற்ற ஓர் பக்தி முயற்சியாக இருக்கவேண்டும். அப்போது உண்மையாகவே மரியா எம்மோடு வாழும் அன்னையாக இருப்பாள்.

## துணை நின்ற நூல்கள்


1) இறைவன் எழுதிய ஓவியம், மதுரை ஆனந்த், பேரா. அ. புஸ்பராஜன்.

2) அம்மா என்னும் அருளோவியம், மதுரை ஆனந்த்.

3) புதிய ஏவாள், அ. பீட்டர் (அபீர்)

4) மரியாளின் மகத்துவம், திருமதி அற்புதம் இராசநாயகம்.

5) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

6) Mary, Yesterday, Today, Tomorrow - Edward Schillbeeck & Catharina Halkes.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மரண தண்டனை" அவசியம் தானா?

அருட்தந்தை பி. கிறிஸ்துநாயகம்

சுனாமி அனர்த்தத்தின் முன் இலங்கையில் பலராலும் பேசப்பட்ட, பத்திரிகைகளில் அடிக்கடி வெளிவந்த செய்தியாக 'மரணதண்டனை மீள முலாக்கம்' அமைந்தது. 1971 ற்க்குப் பின் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரண தண்டனை, சமூக சீர்கேடுகளைக் குறைக்கும் நோக்குடன் மீண்டும் இலங்கையில் அமுல்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதியால் அறிவிக்கப் பட்டதைத் தொடர்ந்தே இச்செய்தி முக்கியத்துவம் பெற்றதுமல்லாமல் அதற்கான பூர்வாங்க ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. எனவே இக் காலப்பகுதியில் மரணதண்டனை பற்றி சற்று பின்னோக்கிப்பார்ப்பது நல்லது என்று எண்ணுகின்றேன். இக் கட்டுரையானது பொது நன்மைகருதி குற்றங் களைக் குறைப்பதற்காக மனித உயிரை எடுப்பது சரியா? அவசியம்தானா? என்பதை ஆராய்கின்றது.

## பழைய ஏற்பாட்டில் மரணதண்டனை

பழைய ஏற்பாட்டில் மரண தண்டனை பற்றி வெளிப்படையாக வே சொல்லப்படுகின்றது. "மனிதனுடைய இரத்தத்துக்காக அவனவன் சகோதரனிடம் பழிவாங்குவோம். மனித இரத்தத்தை சிந்துபவனின் இரத்தமும் சிந்தப்படும் (தொ. நூ. 9:6) கொலைக் குற்றங்களுக்காக மட்டு மல்ல வேறு பல பாரிய குற்றங் களைப் புரிபவனும் கொல்லப்படு வான் என்று விடுதலைப் பயண நூல் கூறுகின்றது. வேண்டுமென்று ஒரு மனிதனைக் கொலை செய்பவன் கொலை செய்யப்படக் கடவான். ஒரு வன் வேண்டுமென்று ஒழித்திருந்து

> "நம் உயிர் மேல் ஆணை தீயவன் சாகவேண்டு மென்பது நம் விருப்பமன்று ஆனால் அவன் தீய வழியை விட்டு திரும்பி வாழவேண்டும் என்பதே நம் விருப்பம்.
> (எசே 33:11அ).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிறனை கொன்றிருப்பானாயின், அவனை நம் பீடத்தினின்றே அகற்றிக் கொல்லக்கடவாய். தன் தந்தையையோ தாயையோ அடிப்பவனும், சபிப்பவனும் சாகவே சாவான் (வி.ப. 21:12-17). ஆனால் அதேவேளையில் குற்றவாளி கொல்லப்படவேண்டும் என்றல்ல அவன் மனம்மாற வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம் என்பதை எசேக்கியேல் இறைவாக்கினர் எடுத்துக் கூறுகின்றார். "நம் உயிர் மேல் ஆணை தீயவன் சாகவேண்டுமென்பது நம் விருப்பமன்று ஆனால் அவன் தீய வழியை விட்டு திரும்பி வாழவேண்டும் என்பதே நம் விருப்பம். (எசே 33:11அ).

## புதிய ஏற்பாட்டில் மரணதண்டனை

புதிய ஏற்பாட்டில் மரணதண்டனை பற்றிய நேரடியான கூற்றுக்கள் எதுவும் காணப்படவில்லை. ஆனால் புனித பவுல் உரோமையருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வுலகின் அதிகாரிகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்றும், தீமை செய்வோர் மீது தண்டிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு கடவுள் கொடுத்திருக்கின்றார் எனவும் கூறுகின்றார். ஆனால் எவ்வித தண்டனை என்பதை இங்கு வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. "ஆனால் தீமை செய்தால் நீங்கள் அஞ்சவேண்டியிருக்கும். அவர்கள் கையில் தண்டிக்கும் அதிகாரம் இருக்கின்றது. அது வீணாக அவர்களிடம் கொடுக்கப்படவில்லை. தீமை செய்வோர் மீது கடவுளின் தண்டனையை நிறைவேற்ற அவரே ஏற்படுத்திய தொண்டர்கள் அவர்கள்'' (உரோ 13:4). அதே வேளையில் பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட பல்லுக்குப் பல், கண்ணுக்கு கண் என்ற சட்டத்திற்கு இயேசு புதிய வடிவம் கொடுப்பதையும் காண்கின்றோம். (மத். 5: 38-39) விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்ற மோசேயின் கட்டளையை கையில் கொண்டு மக்கள் அவரை நெருங்கிய போது இயேசு அவளை மன்னித்து மரணதண்டனையிலிருந்து காப்பாற்றி அவளுக்கு புதுவாழ்வு கொடுக்கின்றார். குற்றம் இழைப்பவர்களை புதிய வழிமுறைகளான அன்பு, இரக்கம், மன்னிப்பு, மதிப்பு போன்ற உயர்ந்த புண்ணியங்கள் மூலம் திருத்தும் முறையைக் காண்கின்றோம் (யோவா. 8:1-11).

## வரலாற்றில் மரணதண்டனை

திருச்சபைத் தந்தையர்கள் மரணதண்டனை கொடுப்பதை மிகக் கடுமையாக எதிர்த்தவர்களாகவே காணப்படுகின்றார்கள். அவர்கள் கருத்துப்படி மறைவாகக் கொல்வதும் அதற்குத் தண்டனையாக குற்றம் செய்தவரைப் பொதுவில் கொல்வதும் ஒன்றுதான். மனிதனைக் கொல்வது எப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமே பாவம் தான். 'கொலை செய்யா திருப்பாயாக' என்ற கடவுளின் கட்டளை எச்சந்தர்ப்பத்திலும் எந்த விதிவிலக்கிற்கும் உட்பட்டதல்ல என்பது அவர்களது வாதம்.

மனிதனைக் கொல்வது எப் போதுமே பாவம் தான். 'கொலை செய்யா திருப்பாயாக' என்ற கடவுளின் கட்டளை எச்சந்தர்ப்பத்திலும் எந்த விதிவிலக்கிற்கும் உட்பட்டதல்ல

அக்காலத்தின் முக்கிய இறையிய லாளரான புனித அகுஸ்தினார் பலமுறை இப்பிரச்சினையைக் கையாண்டவராகக் காணப்படுகின்றார். அவர் காலத்தில் பல் வேறு தப்பறைகளால் திருச்சபை ஆட்டம் கண்டபோது, இவ்வாறான தப்பறை போத னைகளிலிருந்து திருச்சபையைக் காப்பாற்ற அரசுகள் உதவிசெய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதேவேளை தொண்ணூற்றொன்பது ஆடுகளை மலைப்பகுதியில் விட்டு விட்டு இழந்த ஒரு ஆட்டைத் தேடுகின்ற நல்ல ஆயனைப்போல, தப்பறைகளைப் பரப்பு வோரையும், திருச்சபையைத் துன்புறுத்துவோரையும் தேடிச் சென்று மனம் மாற அழைக்க வேண்டும் என்று கூறுகின்றார். (மத். 18: 12-14)

திருச்சபையின் மற்றொரு முக்கிய இறையியலாளரான புனித தோமஸ் அக்குவினாஸ் இதுபற்றிக் கூறும்போது, பொது நன்மை கருதி மரணதண்டனை கட்டாயம கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகின்றார். அவர் தனது கருத்தை பின்வருமாறு விளக்குகின்றார். அதாவது உடல் முழுவதையும் காப்பாற்றும் பொருட்டு அந்தப் பழுதடைந்த உறுப்பு அகற்றப்படுகின்றது. குற்றவாளியும் சமுதாயத்தின் ஓர் பழுதடைந்த உறுப்பே. எனவே முழுச் சமுதாயத்தினுடைய நன்மை கருதி அச்சமுதாயத்தின் பழுதடைந்திருக்கின்ற உறுப்பாகிய குற்றவாளியும் கொல்லப்படுவது சரியானதே என்பது அவரது வாதமாகும்.

மனிதனைக் கொல்வது பாவம் என்ற கூற்றுக்கு புனித அக்குவினாஸ், மெய்யியலாளரான அரிஸ்டோட்டலினுடைய தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு பின்வருமாறு கூறுகின்றார். பாவம் செய்யும் மனிதன் பகுத்தறிவுள்ள மனித மாண்பிலிருந்து அழிந்து விடுகின்றான். எனவே அவன் மிருகத்தினுடைய நிலைக்குத் தாழ்ந்தவனாகி விடுகின்றான். மனித மாண்போடு வாழ்பவனைக் கொல்வது தீமையாகக் காணப்படுகின்ற அதேவேளை குற்றவாளியாகக் காணப்படும் ஒருவனைக் கொல்வது சாதாரணமாக ஒரு மிருகத்தைக் கொல்வது போன்றதே. ஓர் முரட்டு மனிதன் மிருகத்தை விடவும் மோசமானவனும், தீமை நிறைந்தவனுமாகும் என்பது அவருடைய வாதமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணதண்டனையின் சிந்தனை ரீதியிலான நியாயப்படுத்தல்கள் (The rational justification of the capital punishment)

இன்று மரணதண்டனையின் அவசியம்பற்றி பலவிதத்திலும் பலவாறு நோக்கப்படுகின்றது. ஆனால் மெய்யியல் ரீதியாகவும், அறநெறி ரீதியாகவும் இதனை விளக்குவது மிகக் கடினமானதாகவே காணப்படுகின்றது. இருப்பினும் இறையியல், மெய்யியல் பாரம்பரியங்கள் ஊடாக மரணதண்டனையின் நியாயப்படுத்தல்கள் பற்றிய சில அடிப்படைக் கொள்கைகளைப் பார்ப்போம்.

### குழுவாதம் 1

முதலாவது குழுவின் வாதம் வரலாற்றில் காணப்படும் "பழிவாங்கும் வாதம்" (Retribution theory) என்பதன் அடிப்படையில் காணப்படுகின்றது. அதாவது பழிவாங்குதல் என்பது ஒருவர் மற்றவர் மேல் கொண்ட வெறுப் பினூடாக இருக்கவேண்டும் என்பதல்ல. மாறாக அறநெறி, சமூக சிந்தனைகள் மீறப்பட்டதன் வெளிப்பாடாக இருக்கலாம் என்று சொல்லப்படுகின்றது. ஒரு கொலை அல்லது களவு என்பது ஒரு சமூகத்தில் இருக்கும் அனைவருக்கும் எதிரான குற்றமாகும். புனித தோமஸ் அக்குவினாஸ் குற்றவாளி மீது பழி வாங்கும் தன்மை பற்றிக் கூறும்போது அது ஒருவருடைய நீதியின்பால் கொண்ட வெளிப்பாடே எனக் கூறுகின்றார். பழிவாங்கும் வாதம் என்ற கொள்கையின்படி நன்மைகள் நன்மைகளின் மூலமும், தீமைகள் தீமை களின் மூலமும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது அவர்களது வாதமாகும்.

### குழுவாதம் 2

இரண்டாவது குழுவின் வாதத்தின்படி தண்டனையானது குற்றத்துக் குப் பரிகாரமாகவோ அல்லது குற்றவாளியைத் திருத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயோ கொடுக்கப்படுகின்றது. பழமை வாய்ந்த மெய்யியல் வரலாறு இதுபற்றிக் கூறும்போது தண்டனையானது குற்றவாளியைத் திருத்தி தூய்மைப்படுத்தும் செயலைச் செய்கின்றது என்றும் ஒழுக்கச் சீர்கேடுகளுக்கு முன் மருந்தாக அமைகின்றது என்றும் சொல்கின்றது. எனவே மரணதண்டனை கொடுக்கும்போது அது அவர் குற்றத்துக்குப் பரிகாரமாகவும் அதேவேளையில் ஏனையவர்களுக்குப் படிப்பினையாகவும் அமைகின்றது என்பது இவர்களின் வாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ) கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church)

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி எனும் புத்தகத்தில் மரணதண்டனை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. இதன் இலக்கம் 2265, முறையான பாதுகாப்பு (Legitimate defense) என்ற தலைப்பின் கீழ் மரணதண்டனை பற்றிக் கூறும்போது, குடும்பத்தினது அல்லது சமுதாயத் தினது நன்மை கருதி மேற்கொள்ளப்படும் முறையான பாதுகாப்பு சரியானது மட்டுமல்ல கட்டாயமானதுமாகும் என்று கூறுகின்றது.

இலக்கம் 2266 இதுபற்றிக் கூறும்போது சமுதாயத்தினுடைய பொது நன்மை கருதி, நீதியான தற்பாதுகாப்பான முறையில் குழப்பத்தை உண்டு பண்ணுபவரை சமூகத்தை குழப்பாத ஒரு நிலைக்கு இட்டுச் செல்லும் என்று கூறுகின்றது. எனவே இவை அனைத்தின் அடிப்படையில் திருச்சபை யானது குற்றங்களுக்கு ஏற்ப தகுதி வாய்ந்த பொது அதிகாரியினால் தண்டனை கொடுக்கப்படுவதை ஏற்றுக் கொள்கின்றது. அதே வேளை மிகப்பார தூரமான குற்றங் களுக்கு மரணதண்டனை அளிப்பதையும் ஏற்றுக் கொள்கின்றது.

> இரத்தம் சிந்தாத முறையில் குற்ற வாளியிடம் இருந்து மக்களைக் காப்பாற்றி சமுதாய ஒழுங்கைப் பேண முடியுமென்றால் முதலில் அதையே பின்பற்ற வேண்டும்.

அதேவேளை இலக்கம் 2267 ஆனது இரத்தம் சிந்தாத முறையில் குற்ற வாளியிடம் இருந்து மக்களைக் காப்பாற்றி சமுதாய ஒழுங்கைப் பேண முடியுமென் றால் முதலில் அதையே பின்பற்ற வேண் டும். ஏனெனில் மனித உயிர் மதிக்கப்பட வேண்டியது என மேலும் சொல்கின்றது.

## ஆ) வாழ்வின் நற்செய்தி (Evangelium Vitae)

பரிசுத்த தந்தை 2ம் யோவான் பவுல் எழுதிய 'வாழ்வின் நற்செய்தி' என்னும் திருமடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். மனிதன் பயங்கர குற்றவாளியாக இருந்தாலும் அவனை ஒரு சாதாரண பொருளின் தன்மைக்கு குறைத்து மதிப்பிட முடியாது. ஏனென்றால் அவன் எப்போதும் ஒரு மனிதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதனின் மாண்பு ஒருபோதும் இழக் கப்படுவதில்லை. கடவுளின் இரக்கம் நிறைந்த அன்பு அவனிடம் இருந்து எடுக்கப்படுவதில்லை. கடவுள் மனிதன் நல்லவனா கெட்டவனா என்பதற்குப் பதிலாக அனைவருக்கும் நல்லவராகவே காணப்படுகின்றார்.

இரக்கம் உள்ள கடவுள் காயினுக்குத் தண்டனை கொடுத்தபோது கூட, மற்ற மனிதர்களால் அவன் கொல்லப்படக்கூடாது என்பதற்காக அவன் மேல் ஓர் அடையாளம் இடுகின்றார் (தொ. நூ. 4:15). ஆபேலினுடைய கொலைக்கு பழிவாங்க வேண்டும் என்ற நிலையிலும் கூட கடவுள் ஒரு தனித்துவ அடையாளத்தை காயினுக்குக் கொடுத்து அவனைக் கொல்ல முயற்சிப்பவர்களிடம் இருந்து காப்பாற்றுகின்றார். ஒரு கொலையாளி கூட அவனது மனித மாண்பை இழப்பதில்லை என்பதை இதன்மூலம் கடவுள் உறுதிப்படுத்துகின்றார் என்று திருத்தந்தை தனது திருமடலின் மூலம் விளக்குகின்றார்.

## முடிவுரை

பாவி சாகவேண்டும் என்பதல்ல அவன் மனந்திரும்பி வாழ வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம். பாவியை அல்ல பாவத்தையே கடவுள் வெறுக்கின்றார். புனித அம்புறோசியார் இதுபற்றி சொல்லும்போது குற்றம் புரிந்தவர் தனது குற்றத்தை ஏற்கும்போது கடவுளின் இரக்கம் உடனடி யாகவே அவன்மீது காட்டப்படுகின்றது என்று சொல்கின்றார். மேலும் கடவுள் பாவியினுடைய மரணத்துக்கு மேலாக மனமாற்றத்தையே விரும்புகின்றார். எனவும் ஒரு கொலையானது இன் னொரு கொலையின் மூலம் தண்டிக் கப்படுவதை கடவுள் விரும்பவில்லை எனவும் கூறுகின்றார்.

> மிக மோசமான குற்றவாளிகளுக்கு ஆயுள்தண்டனை கொடுப்பதன் மூலம் சமுதாயத்தையும் காப்பாற்ற முடியும். குறித்த குற்றவாளியின் உயிரையும் காப்பாற்ற முடியும். அவன் மனம் மாறுவதற்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்க முடியும்.

மரணதண்டனையின் மீள் அமுலாக்கம்பற்றி பேசிக் கொண்டிருக் கையில் அது அவசியம் தேவைதானா என்பது பற்றி மேலும் சிந்திப்பது நல்லது என்று எண்ணுகின்றேன். எந் தளவு குற்றவாளியாக ஒருவர் காணப் பட்டாலும் அவரின் உயிரை எடுப்பதற் குரிய உரிமை கடவுளுக்கு மட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என்பதை நாம் மறக்கக்கூடாது. எனவே மிக மோசமான குற்ற வாளிகளுக்கு ஆயுள்தண்டனை கொடுப்பதன் மூலம் சமுதாயத்தையும் காப் பாற்ற முடியும். குறித்த குற்றவாளியின் உயிரையும் காப்பாற்ற முடியும். அவன் மனம் மாறுவதற்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தையும் கொடுக்க முடியும்.

## துணை நின்ற நூல்கள்


1. John Paul II, Evangelium Vitae, Vatican City, 1995.

2. Catechism of the Catholic Church, Theological Publications in India, New Delhi, 1994.

3. Faggioni Maurizio, Introduction to Bio Ethics, Rome, 2002

4. Bernard Haring C.SS.R, The Law of Christ, Moral Theology for Priests and Laity, The Mercier press, Briton, 1967.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பிய உருவாக்கத்தில் ஊக்குவிப்பாளர்கள்

அருட்தந்தை தி. அந்தோனிதாஸ் டலிமா

## அன்பியம் :-



'இவர்கள் அப்போஸ்தலர்களின் படிப்பினையைக் கேட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், அப்பம் பிட்குதலிலும், செபிப்பதிலும் நிலைத்திருந்தார்கள்' அற்புதங்கள், அருங்குறிகள் பல அப்போஸ்தலர் வழியாய் நடைபெற்றன. இதனால் மக்களிடையே அச்சம் நிலவியது. விசுவசித்தவர்கள் எல்லோரும் ஒருமித்து தங்கள் உடமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாய்க் கொண்டிருந்தார்கள். நில புலங்களையும், உடமைகளையும் விற்று அவரவர் தேவைக்கேற்ப எல்லோரும் பங்கிட்டுக் கொண்டனர்.

நாடோறும் தவறாமல் ஒரே மனதாய்க் கோயிலில் கூடினர். வீடுகளில் அப்பத்தைப் பிட்டு மன மகிழ்வோடும் கபடற்ற உள்ளத்தோடும் உணவைப் பகிர்ந்து கொண்டனர். இங்ஙனம் கடவுளைப் புகழ்ந்து பாடி வந்தனர். (தி.தூ.ப. 2:42-46)

வேப்பங்காய், பாகற்காய், குறிஞ்சா இலை என்பன மிகவும் கசப்பு நிறைந்தவை ஆனால் மிகுந்த மருத்துவப் பயனுடையவை. இயற்கையாகவே இறைவனால் இவற்றிற்கு நோய் தீர்ப்பு ஆற்றல் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் நம்மில் பலர் இந்த உண்மையை அறிந்திருந்தும், கசப்பு, விரும்பப்படாத சுவை என்பதற்காக இவைகளை வெறுத்து ஒதுக்கி விடுகின்றனர். இன்னும் சிலர் நோய் வந்து விட்டால் நோய் தீர வேண்டும் என்பதற்காக கட்டாயத்தின் பேரில் உண்ணுகின்றனர். இன்னும் பலர் நோய் இருக்கும் போது பயன்படுத்தி விட்டு பின்னர் இவைகளின் பாவனையைக் கைவிட்டு விடுகின்றனர். ஒரு சிலர் மாத்திரமே அன்றாட உணவில் பயன்படுத்துகின்றார். இங்கே இவைகளின் பயன்பாடு முற்று முழுதாக அவைகளின் இயற்கை, இயல்புத்தன்மையோடு புரிந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் படவில்லை என்பது தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அன்பியம்' இது பலருக்கு வேப்பங்காய் போலவும், பாகற்காய் போலவும், குறிஞ்சா இலை போலவும் இருக்கின்றது. நாளாந்த நமது நுகர்வுக் கலாச்சார, ஆடம்பர, இறுக்கமான மரபுகளைக் கட்டிப் பிடித்து வாழ்கின்ற, அமைப்புக்குள் இருந்து வெளியே வர விரும்பாத, தீர்க்க தரிசனப் பார்வையற்ற, பணியார்வமற்ற பலருக்கு அன்பியம் விரும்பப்படாத ஒன்றாக, அவர்களுடைய வாழ்வுக்கு சுமையாகக் கருதி அன்பியத்தை சந்தேகப் பார்வையோடும், பய உணர்வோடும் நோக்குகின்றனர். இன்னும் சிலர் தங்களுடைய வாழ்க்கையின் ஏதோ ஒருகாலப் பொழுதிற்கும் அவசரத் தேவைக்கு உகந்ததாகவும் கருதுகின்றனர். இன்னும் சிலர் ஏதோ ஒரு உந்துதலினால் அல்லது காலத்தின் அல்லது வாழ்க்கையின் கட்டாயத்தால் அன்பியத்தை ஏற்றுக் கொண்டு சில காலங்களின் பின் சலிப்படைந்து சோர்வுற்று அன்பியத்தைக் கைவிட்டு விடுகின்றனர். மிக மிகச் சிலரே அன்பிய வாழ்வு தங்கள் ஆன்மீக வாழ்வின் அடிப்படை என்பதைப் புரிந்து கொண்டு செயற்படுகின்றனர்.

அருட்பொழிவோடும் ஆற்றல் பெற்று இயேசுவே ஆண்டவர் என்று சாட்சியம் பகர்ந்த இயேசுவின் அப்போஸ்தலர்களின் போதனைகளால் புதுவாழ்வு பெற்று கிறிஸ்துவைக் கண்டு கொண்ட மக்களின் கூட்டு வாழ்க்கையின் உண்மை வடிவமே அன்பியம் ஆகும்.

நம்முள் பலர் அன்பிய வாழ்வின் அடித்தளத்தை, அதன் இயல்பை நோக்கத்தை அறிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கின்றோம் அது உயிர்த்த கிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஒரு நற்கருணைச் சமூகமாகி கிறிஸ்துவின் பணியை முன்னெடுத்துச் செல்ல நம்மைத் தூண்டுகின்றது. விசுவாசம், சமூகப்பணி என்பன அன்பியத்தின் முப்பெரும் தூண்களாக உள்ளன. அன்பிய வாழ்வு ஆண்டவர் இயேசுவால் வெளிப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட வாழ்வேயன்றி வேறொன்றுமல்ல. தூய ஆவியானவரின் வருகையோடும், அருட்பொழிவோடும் ஆற்றல் பெற்று இயேசுவே ஆண்டவர் என்று சாட்சியம் பகர்ந்த இயேசுவின் அப்போஸ்தலர்களின் போதனைகளால் புதுவாழ்வு பெற்று கிறிஸ்துவைக் கண்டு கொண்ட மக்களின் கூட்டு வாழ்க்கையின் உண்மை வடிவமே அன்பியம் ஆகும். ஆதித் திருச்சபை எப்படி இருந்ததோ, அந்த ஆழமான சமூக உறவு ஆன்மீக வாழ்வை மீண்டும் வாழ்வதற்கான ஒரு வழியும் தளமுமே அன்பியமாகும். ஆதித் திருச்சபை வாழ்வு இன்றைய கிறிஸ்தவ சமூக, ஆன்மீக சமூக வாழ்வில் இல்லாது விட்டால் அது அழிவிற்கான ஆக்கிரமிப்பென்றுதான் சொல்ல வேண்டும். இந்த அழிவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட அன்பிய வாழ்வை நமது அடிப்படை வாழ்வாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அன்பிய பணிவாழ்வை முன்னெடுத்துச் செல்ல இன்று இணைந்து பணியாற்றுபவர்கள் அன்பிய ஊக்குவிப்பாளர்களே. இவர்களின் பாதையைப் பசுமைப்படுத்த, பார்வையைக் கூர்மைப்படுத்த, பணிவாழ்வைப் பதப்படுத்த, இறையனுபவத்தை ஆழமாக்க, தங்களைக் கண்டடைந்து கொள்ள அவர்களின் அன்பிய வாழ்வுப் பயணத்தில் பக்கபலமாக அமைய சில துணைகளைத் தருகின்றோம்.

## அன்பிய ஊக்குவிப்பாளர்கள்:-

'நீங்களோ தெரிந்தெடுக்கப்பட்ட இனம் அரச குருத்துவத் திருக் கூட்டம். பரிசுத்த குலம். இறைவனுக்கு சொந்தமான மக்கள் உங்களை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சியை அறிவிப்பதே உங்கள் பணி' (1 பேதுரு : 9) அன்பிய ஊக்குவிப்பாளர்கள் இறைபணி செய்ய, இறைவனின் புகழ்ச்சிகளை எடுத்துரைக்கவே அழைக்கப் படுகின்றார்கள். இங்கே இறைவனின் புகழ்ச்சிகளை எடுத்துரைக்கவே என்பது வெறும் வார்த்தைகளால் அல்ல, எல்லாவற்றையும் விட மேலான சாட்சிய வாழ்வின் மூலமாக இறை புகழ்ச்சியை எடுத்துரைக்கவே அழைக்கப்படு கின்றார்கள். இந்த அழைத்தல் வாழ்வானது இயேசுவுக்கு சான்று பகரும் வாழ்வாகவே இருக்கின்றது. எனவே அன்பிய ஊக்குவிப்பாளர்கள் இறையனுப வத்திற்குள் ஆழமாகச் செல்வதன் மூலமே இந்த சாட்சிய வாழ்வு வலுப்படுத் தப்படுகின்றது.

'ஆதிமுதல் இருந்ததை,
நாங்கள் கேட்டதை,
கண்ணால் பார்த்ததை,
உங்களுக்கு அறிவிக்கின்றோம்.
அதை நாங்கள் நோக்குகின்றோம்,
கையால் தொட்டுணர்ந்தோம்.
நாங்கள் அறிவிப்பது உயிரின் வார்த்தை பற்றியது.
அந்த உயிரின் வார்த்தை
வெளிப்படுத்தப்பட்டது.
அதை நாங்கள் கண்டோம்.
அதற்கு சான்று பகர்கின்றோம்.
தந்தையோடு இருந்து நமக்கு
வெளிப்படுத்தப்பட்ட
முடிவில்லா வாழ்வைப் பற்றிய செய்தியை
உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.

தந்தையோடு இருந்து
நமக்கு வெளிப்படுத்தப்பட்ட
முடிவில்லா வாழ்வைப்
பற்றிய செய்தியை
உங்களுக்குத்
தெரிவிக்கின்றோம்.
நீங்களும் எங்களோடு
நட்புறவு கொள்ளும்படி,
நாங்கள் பார்த்ததை,
நாங்கள் கேட்டதை
உங்களுக்குத்
தெரிவிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் எங்களோடு நட்புறவு கொள்ளும்படி,
நாங்கள் பார்த்ததை, நாங்கள் கேட்டதை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்.
எங்களுக்குள்ள நட்புறவோ பரம தந்தையோடும்
அவர் மகன் இயேசுக் கிறிஸ்துவோடும் உள்ளதாகும்.
நம் மகிழ்ச்சி நிறைவு பெற இதனை எழுதுகின்றோம்.
(1 அரு. 1: 1-4)

இவ்வாறு கூறப்படுவது பணியாளர்கள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக் கொண்ட அனுபவத்திலிருந்து தான் நிலையான பயனுள்ள சாட்சிய வாழ்வை வாழ முடியும் என்பதை வலியுறுத்தவே. உள்ளத்தின் நிறைவின் நின்றே வாய் பேசும். நல்லவன் நல்ல கருவூலத்தினின்று நல்லதை எடுக்கின்றான். (மத் 12: 34-35) என்ற இறைவாக்கு பணியாளர்களின் வாழ்வு முறை எப்படி அமைய வேண்டும் என்பதை வரைவிட்டுக் காட்டுகின்றது. நாம் கண்டதையும் கேட்டதையும் உணர்ந்து அனுபவிப்பதையும் மாத்திரமே சாட்சியமாகக் கூறமுடியும். ஏனெனில் காலத்தின் அழைப்பும் தேவையுமாக இருப்பது இயேசு ஆண்டவர் என்று சொல்லும் அனைவரும், வழிகாட்டிகளாக வாழ விரும்பும் அனைவரும் இயேசுவின் வாழ்வு, வார்த்தை இவை இரண்டிற்கும் சான்று பகர வேண்டும் என்பதே.

## அன்பிய ஊக்குவிப்பாளர்களது இலக்கு:-

கிறிஸ்துவையும் நற்செய்தியையும் அறிவிப்பது என்பது சாட்சியம் அளித்தல் என்று பொருள்படும். இந்த நிலையில் இருந்து கொண்டு பணி யாற்றும் அன்பிய ஊக்குவிப்பாளர்களின் முழுமையான இலக்காக அமைவது.

1. உயிர்த்த கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாக உருமாறி விசுவாசம், சமூகவாழ்வு, பணி என்பவற்றை முன்னிலைப்படுத்தி அன்பிய வாழ்வை வாழ்தல்.

2. சீடத்துவ வாழ்வின் அனுபவத்தை பெற ஏனையோருக்கும் உதவி யளித்து அன்பியங்களை வளர்த்தல்.

3. இறையாட்சி மலர கொள்கைப் பிடிப்போடு உழைத்தல், அன்பிய வாழ்வை வளமாக்குதல் என்பனவாகும்.

⏭ கிறிஸ்துவின் சீடராகி அன்பிய வாழ்வை வாழ: சீடத்துவ, அன்பிய வாழ்வின் இயக்காற்றல் சக்தியான இறைவார்த்தையின் மீது இயல் பான விருப்பு ஏற்பட வேண்டும். இந்த விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறைவார்த்தையை வாசித்து அறிதல்.
- இறைவார்த்தையைப் புரிந்து வாழ்வாக்குதல்.
- இறைவார்த்தையை வாழ்ந்து இறை அனுபவம் பெறல். என்னும் தளத்தில் உருவாக வேண்டும்.

⏭ **ஏனையவர்களுக்கும் சீடத்துவ அனுபவத்தைப் பெற உதவுதல்:-** இறைவார்த்தையை தம் வாழ்வின் அனுபவமாக்கி அதனைப் பிறரோடு பகிர்ந்து, விளக்கி அவர்களையும் இத்தகையதொரு வாழ்வுக்கு அழைத்து வருதல். இந்த அழைத்து வரும், உதவியளிக்கும் செயன் முறைகளுக்கு முன்மாதிரிகையான சாட்சிய வாழ்வும், சொந்த இறையனுபவப் பகிர்வும், முன்மாதிரிகையான பணியாளர்களை இனம் கண்டு அவர்களை உருவாக்கி வளமாக்குவதும் வேண்டப்படுபவை களாக உள்ளன. இவ்வாறு நமது அழைத்தலை முழுமையடையச் செய்யலாம்.

⏭ **இறையாட்சி மலர உழைத்தல்:-** இறையாட்சி மலர உழைக்க வேண் டிய தளம் அன்பியம் என்பது இன்று தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அன்பிய வாழ்வுக்குள்ளும், செயற்பாட்டிற்குள்ளும் நாம் இறங்கி அதற்காக உழைப்பதன் வழியாக இறையாட்சியின் மலர்ச் சியை நாம் இம் மண்ணிலே இனம் கண்டு கொள்ளலாம். எனவே அன்பியத்தை வளப்படுத்துவது அதன் வளமைக்கு அர்ப்பணத்தோடு செயலாற்றுவது ஒவ்வொரு ஊக்குவிப்பாளர்களினதும் இன்றிய மையாத கடமையாகும். அதாவது அன்பும், நீதியும், உண்மையும், சகோதரத்துவமும், மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு சமுதாயத்தை இறை வார்த்தையின் ஒளியோடும், தூய ஆவியானவரின் வழிநடத்துதலி னோடும் உருவாக்க உழைப்பதே இதன் இலக்காகும்.

## வேண்டப்படும் ஒழுங்கு

இன்று அன்பிய ஊக்குவிப்பாளர்கள் பலர் தங்களைத் தியாகம் செய்து பணியாற்றுகின்றனர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒரு நிலையாகும். இருந்தும் ஊக்குவிப்பாளர்கள் பணியார்வத்தோடு, அணுகுமுறை பற்றியும் சிந்திக்க வேண்டும். பல வேளைகளில் நம்மிடம் இருக்க வேண்டிய நல்ல மனிதப் பண்புகள் இல்லாமற் போகும்போது நாம் மற்றவரை அணுகு கின்ற விதம் சரியாக அமையாமற் போய்விடும். இதனால் உறவில் பாதிப்பு ஏற்பட்டு 'அன்பிய' வாழ்வுக்கு மாபெரும் தடை ஒன்று ஏற்படுகின்றது. இந் நிலையில் ஊக்குவிப்பாளர்கள் நல்ல மனிதப் பண்புகளிலும் ஆளுமையிலும் ஒழுக்கத்திலும் வளரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விசுவாசிகளை மேற்பார்வையிடுவோர் கடவுளுடைய கண்காணிப் பாளருக்கு ஏற்ப, குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருத்தல் வேண்டும். அகந்தை, கடுஞ்சினம், குடிவெறி, கலகம், இழிவான ஊதியத்தின் மேல் ஆசை ஆகிய வற்றை விலக்கி விருந்தோம்பல், நன்மையில் நாட்டம், விவேகம், நீதி, புனிதம், தன்னடக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்து நற்போதனையோடு பொருந்தியதும், நம்பிக்கைக்குரியதுமான படிப்பினையை உறுதியாய்ப் பற்றிக் கொள்பவராய் இருக்க வேண்டும். அப்போதுதான் நலம் மிக்க போதனையைப் போதித்து அறிவுரை கூறவும், எதிர்த்துப் பேசுவோருக்கு மறுப்புக் கூறவும் அவர் வல்லவராக இருக்க முடியும்." (தீத். 1: 7-9)

இப்படியான வாழ்வு முறையை ஊக்குவிப்பாளர்கள் கொண்டிருந் தாலன்றி நிறைவாகப் பயனளிக்க கூடிய பணியை அவர்களால் முன்னெடுத்துச் செல்ல முடியாது. எனவே கீழ்வரும் செயற்பாடுகள் அவர்களில் இயல்பாகவே காணப்படுதல் வேண்டும்.

1. தவறான உலகியல் வாழ்க்கைப் போக்கினால் கவரப்படாது இறை வார்த்தையை மையமாக வைத்து வாழ்ந்து செயற்படுதல்.
2. தம்முடைய வாழ்வின் செயற்பாடுகளில் செபத்திற்கு முன்னுரிமை கொடுத்து தனிச் செபத்தோடு மட்டுமல்ல குடும்பத்தோடும், குழுவாக வும் இறைவார்த்தைப் பகிர்வை மேற்கொண்டு செபித்து வாழ்வாக்கி அதே ஈடுபாட்டோடு பிறரையும் ஈடுபட வைத்தல்.
3. தூய ஆவியானவரின் ஆழுகைக்கு உட்பட்டு அவரது சக்தி பெற்ற வராய் வாழ்வை அமைத்தல்.
4. சமுதாயத்திலும், குடும்பத்திலும், தாம் வாழுகின்ற சூழலிலும் சாட்சிய வாழ்வு வாழல்.
5. தீமைகளுக்கும், போதனைகளுக்கும் இடம் கொடாதிருத்தல்.
6. அடுத்தவரின் பலவீனங்களையும், தவறுகளையும் இழிவாகக் கரு தாமல் அவர்களை அவைகளிலிருந்து விடுபட உதவியளித்தல்.
7. திருச்சபையின் பணிகளில் தமது ஈடுபாட்டையும் ஏனையவர்களின் ஈடுபாட்டையும் அதிகரிக்க வழியமைத்தல்.
8. தனி, குடும்ப, சமூக வாழ்வில் பிரச்சினைகள் ஏற்படும் போது அன் பியங்கள், பங்கின் அருட்பணிப் பேரவைகள் மூலமாக தீர்த்து வைப்ப தோடு ஏனையவரை அணுகாதிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னாய்வு நம் தனித்துவத்தை உயர்த்தும்:-

நம்மை நாம் ஆய்வு செய்து கொள்வதன் மூலம் நம்மை நாம் கண்டு கொண்டு, நமது ஏற்ற இறக்கங்களை சீர்படுத்திக் கொள்ளலாம். எனவே அன்பிய ஊக்குவிப்பாளர்கள் கீழ்வரும் வினாக்களின் அடிப்படையில் சுய ஆய்வு செய்வது மிக முக்கியமாகும். அத்தோடு இந்த வினாக்களின் அடிப்படையில் ஏனையோரின் கருத்துக்களையும் கேட்டறியலாம். மற்றவர் களுக்கு ஆலோசனை கூறுபவர்களும், உண்மையிலேயே திறந்த மனத் தோடும், உதவி செய்யும் நோக்கத்தோடும் செயற்பட வேண்டும்.

1. இறைவனோடும் அயலவரோடும் நான் ஆழமான அன்புறவைக் கொண டுள்ளேனா?
2. இறைவார்த்தையை பகிரும்போது அல்லது அதை விளக்கிக் கூறுமுன் நான் என்னை நல்ல முறையில் ஆயத்தப்படுத்துகின்றேனா?
3. கிறிஸ்துவின் புகழ் விளங்க நான் என்ன செய்கின்றேன்? எப்படிச் செயலாற்றுகின்றேன்?
4. என்னிடம் உள்ள ஆற்றல்கள், திறமைகள், வளங்கள் என்னுடைய வைகள் அல்ல, அவை இறைவனின் அருட்கொடைகள் என்பதை ஏற்றுக் கொள்கின்றேனா?
5. என்னுடைய இறையனுபவப் பகிர்வு என்பது அனுபவப் பகிர்வா? அல்லது அறிவு நிலையோடு ஒட்டியதா?
6. நான் சமாதானத்தை எந்த அளவு தூரம் நேசிக்கின்றேன்?
7. கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளும் தியாகமும், அர்ப்பணமும் என்னிடம் இருக்கின்றதா?
8. பிறர் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கின்றேனா?
9. தவறுகளை ஏற்றுக்கொண்டு திருந்தி வாழும் மனப்பக்குவம் என்னிடம் உள்ளதா?
10. மன்னித்து வாழ்கின்றேனா?
11. தூய்மை என்னில் உள்ளதா?
12. ஞானத்தோடும் விவேகத்தோடும் செயலாற்றுகின்றேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நிதானத்தோடு செயற்பட்டு சமநிலை பேணுகின்றேனா?

14. ஏழைகள்பால் நான் காட்டும் கரிசனை எப்படி உள்ளது?

15. திறந்த மனத்தோடு செயற்படுகின்றேனா?

16. உண்மைக்குச் சான்று பகர்கின்றேனா?

17. இறைவனைச் சார்ந்திருக்கின்றேனா?

18. இறைவன் மீது தாகம் கொண்டுள்ளேனா?

19. குழுவாழ்வில் நான் எவ்வாறு பங்களிக்கின்றேன்?

### முடிவாக:-

நாம் பொறுப்புணர்வோடு இப் பணியை முன்னெடுத்துச்சென்று நற்கருணைக் கலாசாரத்தில் மையம்கொண்டு புதுவாழ்வை நோக்கி நம்மை நகர்த்திச் செல்லும் அன்பிய வாழ்வைப் பலப்படுத்துவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டுப் பார்வையில் இயேசுவும் பவுலும்

அருட்சகோ. பாலதாஸ் பிறாயன்



## முதலிலே

துன்பம் என்ற சொல்லை அறியாத மனிதன் இல்லை என்றே கூறி விடலாம். அதுவும் எமக்கு இந்தச் சொல் எம் வாழ்வின் பிரிக்க முடியாத ஒரு நிலைமை என்றால் அதுகூட மிகையில்லை. எம் வாழ்வின் அனுபவத்தில் துன்பத்திலே துவண்ட சந்தர்ப்பங்கள்தான் அதிகம். போரும், நோயும், கை கலப்பும், சண்டைசச்சரவும், சோகமும், வெறுப்பும், மரணமும் எம் வாழ்விலே அலை மோதியது போதாதென்று 'சுனாமி' என்னும் பேரலை எம் உறவுகளையும், உடைமைகளையும் இன்னும் ஆழமாகச் சொன்னால் எம் 'வாழ்வையே' அடித்துச் சென்று விட்டது. அனுபவித்தவர்களின் ஆழமான துன்ப வடுக்களை எந்த மருந்து கொண்டும் ஆற்ற முடியாத பரிதாப நிலை இன்று. யாருக்கு யார் ஆறுதல் கூறுவதென்று பரிதவிக்கும் துன்பச் சுமைகளோடு வாழுகின்ற மக்கள் ஏராளம். ஐந்து நிமிடத்தில் 'அனைத்தையும்' இழந்து விட்ட துன்பக் கதைக்கு எதைக் கொண்டு நாம் முற்றுப் புள்ளி வைக்க முடியும்? இருந்தும் துன்ப அலை எம் வாழ்வில் மோதினாலும் துணிவோடு

> ஐந்து நிமிடத்தில் 'அனைத்தையும்' இழந்துவிட்ட துன்பக் கதைக்கு எதைக் கொண்டு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும். இருந்தும் துன்ப அலை எம் வாழ்வில் மோதினாலும் துணிவோடு எதிர் நீச்சல் போடுவது எம் அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர் நீச்சல் போடுவது எம் அவசியமாகிறது. துன்பத்திலே துவண்டு விடுதல் துன்பக் கேள்விகளுக்கு விடையாகாது. துணிந்து பயணித்தாற் சுமைகளையும் துன்பங்களையும் சுகமாக்க முடியும்.

விவிலியத்தின் தொடக்க முதல் இறுதி வரை துன்பக் காற்றுச் சுழன்று அடிக்கின்றது. துன்பத்தின் நிழல் விவிலிய நாயகர்களை மூடிய போதும் அவர்கள் அதை வெற்றியாக்கிய விதம் போற்றத்தக்கது.

விவிலியத்தின் தொடக்க முதல் இறுதி வரை துன்பக் காற்றுச் சுழன்று அடிக்கின்றது.

பின்வருவது புதிய ஏற்பாட்டின் நாயகனாகிய இயேசுவும் அவர் வழி நின்ற பவுலின் 'துன்ப எழுச்சிப்' பாதைகள்.....துணிந்து நடந்தால் துன்பமும் வெற்றியாகும்.

## இயேசுவின் துன்பக் கதை

இயேசுவின் பாடுகள், துன்பங்கள், வேதனைகள், மரணம் இவற்றை எத்தனை முறை தியானித்தாலும் உள்ளம் உருகுகின்றது. கண்களில் நீர் சொரிகின்றது. ஏன் என்றால் துன்பத்தைக் காண நாம் துணியாத தன்மை. அதனால் இயேசுவின் துன்பத்தை எம் நாளாந்தத் துன்பத்தோடு நாம் ஒப்பிடுகின்றோம். இதில் ஆழமான ஒரு இறையியல் இருந்தாலும் இயேசு துன்பத்தை எவ்வாறு வெற்றி கொண்டார் என்பதை நோக்குவது இங்கே பொருத்தமானது.

## இயேசுவின் துன்பச் சாவு

ஏழை, எளியவர்களோடு, நசுக்கப்பட்டுத் துன்பப்பட்டவர்களோடு, இகழப்பட்டு அனாதையாக்கப்பட்டவரோடு, தூற்றப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டோரோடு இயேசு தன்னை அடையாளப் படுத்தினார். தம் சீடராய் இருப்பதற்கான தகுதியையும் அவரே தம் சீடருக்கு வெளிப்படுத்தினார். 'என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்' (மாற் 8:34).

தன் சொந்த வாழ்வில் இயேசு எமக்காகத் தன்னைக் கையளித்தார். அடிமையின் கோலம் பூண்டு எமக்காக இறப்பதற்கும் தயார் ஆனார்.

தன் சொந்த வாழ்வில் இயேசு எமக்காகத் தன்னைக் கையளித்தார். அடிமையின் கோலம் பூண்டு எமக்காக இறப்பதற்கும் தயார் ஆனார். 'மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்' (மாற் 10:45) என்றார்.

வார்த்தைகளின் வடிவத்தை இயேசு செயலிலே புனைந்தார், தொடர்ந் தார். அவர் ஜெருசலேம் செல்ல முடிவெடுத்தார். தன் துன்பச் சாவை விருப்புடன் வரவேற்றார். அதனால் பிதாவின் சித்தத்தைச் செவ்வனே செய்தார்.

## சிலுவை தரும் இனிய பாடம்.




சிலுவை ஒரு துன்பத்தின் அடையாளம், தோல்வியின் அறிகுறி, விரக்தியின் வேதனையின் விடை. ஒருவகையில் சிலுவை பாவத்தின் சின்னம். இருந்தும் இந்தத் துன்பச் சிலுவை இயேசுவைத் தாங்கியதால் புனிதமானது. எனவே துன்பச் சிலுவை புனிதமானது இயேசுவின் தொடுகையால்.

பழைய சிலுவையின் விளக்கங்கள் மறைய இயேசுவின் சிலுவை மேன்மை பெற்றது. உண்மையில் சிலுவை என்பதற்குச் சிறந்த ஒரு தெளிவு எமது புதிய வாழ்க்கையாகும்.

> "கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும் இச்சைகளோடும் சேர்த்துச் சிலுவையில் அறைந்து விட்டார்கள்" (கலா 5:24).

எனவே துன்பச் சிலுவை எமது புதிய வாழ்வின் அச்சாணியாகும்.

## இயேசுவின் துன்ப வாழ்வு

உண்மையில் இயேசுவின் துன்ப வாழ்வு எமக்கு ஆசீர்வாதங்களை அள்ளித் தருகின்றது.

பாவமன்னிப்பு அருள்கின்றது
புதிய வாழ்வை அளிக்கின்றது
பரிசுத்த ஆவியைத் தருகின்றது
நோவிலிருந்து விடுதலை வழங்குகின்றது.
மரண நிழலிலிருந்து விடுவிக்கின்றது
விண்ணக இன்பம் சேர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் துன்ப வெற்றி இவ்வாறு நிற்கப் பவுலின் பக்கம் திரும்பினால்,

## அழைக்கும் போதே துன்பம்

"என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக்காட்டுவேன்" (தி.ப 9:16) என்று அனனியா வுக்கு ஆண்டவர் பவுலைக் குறித்துக் கூறினார். எனவே அழைத்தலின் குழந்தைப் பருவத்திலேயே துன்பத்தின் செய்தியை நுகர்ந்தவர்தான் தூய பவுல். பவுலின் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் அவர் துன்பத்தின் கொடிய போராட்டத்திலே தன்னை உட்படுத்தினார். அதனால் அவர் தெளிவடைந்து முன்னேறினாரே தவிரச் சோர்ந்து போய்ப் பின்வாங்கிவிடவில்லை.

## நற்செய்திப் பணியின் துன்பங்கள்

கிறிஸ்துவுக்காக அனைத்தையும் குப்பையாகக் கருதிய பவுலின் வாழ்வில் துன் பங்கள் சூழ்ந்தே யிருந்தன.

நற்செய்தியைத் தன் வாழ்வாக்க முனைந்த பவுலின் வாழ்வில் நற்செய்தியின் பொருட்டுப் பல துன்பங்கள் காத்திருந்தன. கிறிஸ்துவுக்காக அனைத் தையும் குப்பையாகக் கருதிய பவுலின் வாழ்வில் துன்பங்கள் சூழ்ந்தேயிருந்தன.

அவர் மூன்று முறை கப்பல் சிதைவில் அகப்பட்டார். ஒரு இரவும், பகலும் ஆழ்கடலில் அல்லலுற்றார், ஆறுகளால் துன்பங்கள், கள்வரால் துன்பங்கள், சொந்த, பிற மக்களால் துன்பங்கள், நாட்டில், காட்டில், கடலில் துன்பங்கள், போலித் திருத்தூதர்களால் துன்பங்கள், பாடுபட்டு உழைத்தார், பசிதாகமுற்றார், கண்விழித்தார், பட்டினிகிடந்தார், குளிரில் வாடினார். இப்படி நற்செய்திக்காகத் துன்பப்பட்ட பவுலின் துன்பங்களில் அவர் இன்பம் கண்டது கூடப் பெருமைப்படவேண்டிய சிலுவைத் துன்பத்தை முன்னிட்டே.

## யூதரினால் பவுல் பட்ட துன்பங்கள்

"அவருடைய துன் பங்களில் பங்கேற்றுச் சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன்,"

தூய பவுல் யூதரினாற் பட்ட துன்பங்கள் ஏராளம். தனது பரிசேய நிலையை உணர்ந்த பவுல், துன்பச் சிலுவை சுமந்த இயேசுவின் பாடு கள், மரணத்திற்கு வாழ்வின் அர்த்தம் கொடுத் ததை யூதர்களால் ஜீரணிக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவருடைய துன்பங்களிற் பங்கேற்றுச் சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன்," (பிலி 3:10) என்ற பவுலின் துணிவு துன்பத்தில் இன்பம் காணும் தெளிவு.

பவுல் சிறையில் அடைக்கப்பட்டார், கொடுமையாய் அடிக்கப்பட்டார், சாவின் வாயிலில் நின்றார், ஐந்து முறை யூதரால் சாட்டையால் ஒன்று குறைய நாற்பது அடி அடிக்கப்பட்டார், மூன்று முறை தடியால் அடிக்கப்பட்டார். (2 கொரி 11: 23-24) இவை துன்பத்தின் கொடுமுடிகள் என்றாலும் இலக்கை நோக்கி ஓடும் பயணத்தில் துன்பங்கள் இன்றியமையாதது என்பதைப் பவுல் அறிந்திருந்தார்.

"ஏனெனில் என் உடலில் உள்ள தழும்புகள், நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம்" (கலா 6:17) என்று இயேசுவுக்காகப் பட்ட துன்பங்களுக்குப் புது அர்த்தம் கண்டு இன்பம் கொள்கின்றார். ஏனெனில் அவரே விதந்துரைப்பது போல "நானோ நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப் பற்றியும் ஒரு போதும் பெருமை பாராட்ட மாட்டேன்" (கலா 6:14) என்று துன்பத்திலே தெளிவும், வாழ்வும் கண்டு சிலுவையிலே சங்கமிக்கின்றார்.

## முடிவிலே

துன்பம் எம் வாழ்வின் இன்றியமையாத ஒரு நிலை. துன்பத்தைக் கண்டு துவண்டு சோர்ந்துவிடாது, துன்பத்தின் போதும் வாழும் மனப்பக்குவம் அவசியம். இயேசு துன்பம், சிலுவையைக் கண்டு பின்வாங்கியிருந்தால் மீட்பின் செய்தி கானல் நீராகியிருக்கும். தூய பவுல் துன்பத்திலே துவண்டிருந்தால் கிறிஸ்துவின் பாடுகளில், மரணத்தில். உயிர்ப்பில் தன்னை அடையாளப்படுத்தியிருக்க முடியாது.

எனவே துன்பத்தின் நிழலில் நின்று சுதந்திரமான ஒளியைக் காண எம் முயற்சி தேவை. அது இறையருளுடன் மட்டுமே முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஒன்றிப்பின் பின்புலங்களும் நம்பிக்கையின் அடித்தளங்களும்

அருட்தந்தை சா.பி. கிருபானந்தன்

இறையியலின் வரலாற்று யதார்த்தங்களின் பின்புலங்கள், குறிப்பாக விவிலிய ஆய்வு முன்னெடுப்புகள், ஒருங்கிணைந்த சமூகச் செயற்பாடுகள் போன்ற புதிய செல்நெறிகள் இறையியல் தளத்தில் அறிவுபூர்வமான ஊடாட்டங்களுக்கு வழிவகுத்தது. பணித்தள உறவுகளும், உரையாடல்களும் குறிப்பாக மறைப்பணித் தளங்களில் ஏற்பட்ட புதிய வரலாற்றுச் சூழ்நிலையால் எதிர்நோக்கப்பட்ட நெருக்கடியான காலகட்டங்களில் ஒன்றித்த செயல்பாடு களும் கிறிஸ்தவ ஒன்றிப்பின் போக்கை வலுப்படுத்தியது. வரலாற்றுத்தன்மை யான விமர்சனப்போக்குள்ள இறையியல் வாசிப்புக்களும் புதிய செல்நெறிக்குப் பாதை அமைத்தது. எந்த கிறிஸ்தவ பிரிவுகளும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான நிலைப்பாட்டிற்கான எதிர்விளைவுகளும் கிறிஸ்துவின் ஒற்றுமைக்கான அழைப் பின் மறுப்பேயாகும் எனக் கபிரியல் பிளையன் கூறுகிறார். (Theology Digest 2004) ) பல வேறுபட்ட நம்பிக்கைப் பாரம்பரியத்தில் பிறந்தவர்கள்மேல் திருச்சபைகளின் பிளவுக்கான வரலாற்று எதார்த்தங்கள் சுமத்தப்படலாகாது என்னும் உயரிய எண்ணம் இறையியலாளரிடத்தில் வலுப்பெற்றது.

## கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருச்சங்கம்

திருத்தந்தை 23ம் யோவானை கிறிஸ்தவ ஒன்றிப்பின் திருத்தந்தை என வர்ணிப்பர். எம்மை ஒன்றாகக் கட்டுவது எம்மைப் பிரிப்பவற்றைவிட வலுவானது எனத் திருத்தந்தை 23வது யோவான் கூறினார். நீண்டகாலம் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சிகளிலிருந்து ஒதுங்கியிருந்த கத்தோலிக்க திருச்சபையில் கிறிஸ்தவ ஒன்றிப்புப்பணியை உயிரூட்டியவர் இவர். கத்தோலிக்க திருச்சபையானது தற்காப்பு கிறிஸ்தவத்திலிருந்து உரையாடல் திருச்சபையாகத் தன்னை மாற்றிக்கொண்டது. தாய்த் திருச்சபைக்குத் திரும்புதலே கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற இறையியல் அடித்தளமான கர்வப் போக்கு மாற்றமுற்று முழுமையானதும், வெளிப்படையானதுமான, திருச்சபை நோக்கிய மனமாற்றப் பயணத்தில் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என 2ம் வத்திக்கான் சங்கம் தாழ்மையுடன் அழைப்பு விடுத்தது. கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய செயற்பாட்டினை நெறிப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றி வெளியிட்ட மறை ஏடு வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஆன்மீக ரீதியான கிறிஸ்தவ ஒன்றிப்பை இம்மடல் வலியுறுத்தியது. "20ம் நூற்றாண்டுக் கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்தின் வரலாற்றில் உலகத் திருச்சபைகள் மன்றம் அமைக்கப்பட்ட பின்பு இரண்டாம் வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றி வெளியிட்ட மறை ஏடு குறிப்பிடத்தக்க, மிகவும் முக்கியத்துவமான செயற்பாடாகும்." என வொல்வாட் பனன் பேர்க் (Wolfhart Pannenberg) என்ற லூத்தரன் இறையியலாளர் இவ்வாறு தன் அவதானிப்பை முன் வைத்தார். (Theology Digest 2004)

கத்தோலிக்க திருச்சபையானது தற்காப்பு கிறிஸ்தவத்திலிருந்து உரையாடல் திருச்சபையாகத் தன்னை மாற்றிக்கொண்டது. தாய்த் திருச்சபைக்குத் திரும்புதலே கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற இறையியல் அடித்தளமான கர்வப் போக்கு மாற்றமுற்று முழுமையானதும், வெளிப்படையானதுமான, திருச்சபை நோக்கிய மனமாற்றப் பயணத்தில் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என 2ம் வத்திக்கான் சங்கம் தாழ்மையுடன் அழைப்பு விடுத்தது.

## கிரேக்க மரபுத் திருச்சபையில் உருவான எதிர்விளைகள்

திருச்சபையில் உருவான முதலாவது பெரும்பிளவு கொன்சாண்டிநோபிளைத் தலைமையாகக் கொண்ட கிரேக்க சபைகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. பின்னர் குறிப்பாக அரேபியப் பாலைநிலங்களில் எழுந்த முஸ்லிம் மத எழுச்சிகளின் அலைக்கு முகங்கொடுக்கவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் உருவானது. திருச்சபையின் கோட்பாட்டு நிலைப்பாடு கடுமையான அரசியல் போராக வெடித்ததினால் கோட்பாட்டுரீதியில் பிரிந்துபோன குழுக்கள் பல முஸ்லிம்களின் கிளர்வுக்குள் சங்கமமாயினர். பழைய மையங்களிலிருந்த நூற்றுக் கணக்கான கிறிஸ்தவர்கள் இசுலாமுக்குப் போனார்கள் எனத் திருச்சபை வரலாற்றுவியல் அறிஞர் பிராங்கிளின் எச். லிட்டில் கூறியுள்ளார். (Franklin. H. Little, Historical Atlas of Christianity)

இப்போக்கு துருக்கியின் இராணுவரீதியான மேலாதிக்கத்துக்கு இட்டுச்சென்றது. ஜெருசலேம் உட்படப் பல வரலாற்றுப் பழமையான கிறிஸ்தவ இடங்கள் துருக்கி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சங்கமமாயினதுடன் மதரீதியான பண்பாட்டு மாற்றங்களையும் சந்தித்துக்கொண்டது. துருக்கிப் பேரரசு இசுபானியா ஊடாக போர்த்துகால்வரை பரவியிருந்தது. புனித பூமியை விடுவிக்கப் பின்னர் உருவான சிலுவையுத்தங்கள் கிரேக்க மரபுத் திருச்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க திருச்சபையின் உறவில் பாரிய விரிசல்களை ஏற்படுத்தியது. போல்சிவிக் புரட்சிக்குப் பின்னாலான காலகட்டங்களில் கீழைத்தேயத் திருச் சபை, குறிப்பாக இரசிய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள திருச் சபைகள் இரஸ்சியப் போல்சிவிக் அதிகாரத்தின் இறை நம்பிக்கையற்ற போக்கின் சட்டங்களுக்கும் வேதகாலபனைகளுக்கும் முகங்கொடுத்தது.

## நவீனத்துவத்தின் சவால்கள்

“நவீனத்துவம் இறைமை உலகப்பார்வையிலிருந்து மனிதமையப் பார்வைக்கான பாய்ச்சலாகவே பார்க்கவேண்டும். இறைமையம் காலப்போக்கில் திருச்சபை மையமாகவே உணரப்பட்டதும் வெளிப்படுத்தப்பட்டதும் கண்கூடு. வரலாற்றுரீதியாகக் கிறிஸ்தவர்களுக் கிடையிலுள்ள பிளவுகள், கோட்பாடு வேறுபாடுகள் என்ற பெயரில் நடத்தப்பட்ட பயங்கரமிக்க, வெறித்தனமான சண்டைகள் போன்றவையே நவீனகாலத்தின் அவநம்பிக்கையின் எழுச்சிக்குப் பெருமளவில் பொறுப்பாகும். (செருபரி கேபட், ஸ்பினோசா, 18ம் நூற்றாண்டு மெய்யியல்கள்) கிறிஸ்தவர்களுக்கிடையிலான பிளவு உலகிற்கு இடைஞ்சல் என்பது உறுதியானதாகும் என இறையிலாளர் ஜிவ்ஸ் கொங்காரின் மதங் களுக்கிடையிலான போர் நவீன இறைமறுப்புவாதத்தின் எழுச்சிக்கு முக்கிய மான காரணங்களில் ஒன்றாகக் கருதுகிறார்.

> முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் கிறிஸ்தவ அறநெறிக்கும், இறையியலுக்கும் குறிப்பாக நம்பிக்கை கொண்டோரின் வாழ்வுக்கும் பல எதிர்வினைகளை உருவாக்கின.

முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் கிறிஸ்தவ அறநெறிக்கும், இறையியலுக்கும் குறிப்பாக நம்பிக்கை கொண்டோரின் வாழ் வுக்கும் பல எதிர்வினைகளை உருவாக்கின. ஐரோப்பிய நாடு இரண்டாம் உலகப் போரின் போது, ஐரோப்பிய நாகரிகம், பண்பாடு, தன் சாவை நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டது. ஹோமர், சாக்கிரடீஸ், இயேசு, சேக்ஸ்பியர், கோத்தே, கானட், ஹேகல், மார்க்ஸ் என்ற மாபெரும் சிந்தனையாளர்களை உற்பத்தி செய்த ஐரோப்பா கிட்லரிடம் தோல்வியடைந் தது. கிரேக்க தத்துவம் கிறிஸ்தவம், இத்தாலிய மனிதநேயம், தொழில் யுகம், வாக்களித்த ஜனநாயகம், முன்னேறிய வளர்ச்சி, பகுத்தறிவு விஞ்ஞானப் பார்வை, தனி மனித உரிமை இவையனைத்தும் தோல்வி கண்டன எனத் தனது ஐரோப்பிய தத்துவங்கள் என்ற நூலில் முனைவர் முத்துவேலு குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைகள் மன்றம்

1910 ஸ்கொட்லாண்ட், எடின்பரோ நகரில், சீர்திருத்த சபைகளின் முதலாவது கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சி, அனைத்துலக வேதபோதகர்களின் மாநாடு எனலாம். தம்மிடையே காணப்படும் பிளவால் பூர்வீகமதங்களினால் பலத்த எதிர்ப்பை முகங்கொடுக்க வேண்டியுள்ளது என்று ஆசியா, மற்றும் ஆபிரிக்காவின் கிறிஸ்தவ சிறுபான்மையினர் முன்வைத்தனர். பிளவுபட்ட திருச்சபை என்னும் பாவம் முதலில் செயற்பாட்டு ரீதியானதிலிருந்து இறையியல் ரீதிக்கு விவாத மாற்றம் பெற்றது. கிறிஸ்தவ நாடுகளுக்கிடையில் எழும் அடிக்கடியான போரின் இடைஞ்சல் போதகப் பணியைப் பாதிக்கின்றது எனவும் குரல் எழுப்பினர்.

> சங்கத்தின் பின் கிறிஸ்தவ ஒன்றிப்பை வலியுறுத்திய போதும் ஜேர்மன் சபைகளின் அந்நியமானபோக்கினால் தொடக்கத்தில் கடினமானதாய் இருந்தபோதிலும் 1938இல் உலகத் திருச்சபைகள் மன்றம் உருவாகியது.

1921இல் எடின்பரோ நகரில் அனைத்துலக வேதபோதகப் பணியாளர் காங்கிரஸ், 1920 இல் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா மாநகரில் நம்பிக்கையும் ஒழுங்கும் (Faith & Order) இயக்கம், சுவீடனிலுள்ள ஸ்ரொக் ஹோல்ம் நகரில் வாழ்வும் உழைப்பும் (Life & Work) இயக்கம் ஆகியவை வடிவம் பெற்றது. சங்கத்தின் பின் கிறிஸ்தவ ஒன்றிப்பை வலியுறுத்திய போதும் ஜேர்மன் சபைகளின் அந்நியமான போக்கினால் தொடக்கத்தில் கடினமானதாய் இருந்தபோதிலும், 1938இல் உலகத் திருச்சபைகள் மன்றம் உருவாகியது. இம்மூன்று இயக்கங்களும் உலகத் திருச்சபை மனறத்தில் கூட்டிணைக்கப்பட்டன. அதன் தலைமைச் செயலகம் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா மாநகரில் உள்ளது. இம் மன்றத்தில் கத்தோலிக்க திருச்சபை, பார்வையாளர் நிலையில் உறுப்புரிமை வகிக்கிறது.

## காலனித்துவ நாடுகளின் திருச்சபைகள்

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து மூன்றாம் உலக நாடுகள் என்ற குறியீட்டுப் பெயருடைய முன்னைய காலனித்துவ நாடுகள் விடுதலை பெறத்தொடங்கின. நீண்டகால வரலாற்று ரீதியான காலனித்துவ அரசியலின், சமூக பண்பாட்டு பொருண்மிய அடக்குமுறைகள் தீவிர மொழிவாத, இனவாத, மதவாத, அரசியலாகச் சுதந்திரத்தின்பின் பரிணமித்தது. கிறிஸ்தவ காலனித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவ மதம் என அடையாளப்படுவதை அவதானிக்கலாம். ஆனால் கிறிஸ்தவம் சீர்திருத்த மற்றும் மாற்றுச்சீர்திருத்த திருச்சபைகள்தான் காலனித்துவ நாடுகளில் ஊன்றப்பட்டது. பணித்தளங்களில் ஒன்றித்த முயற்சி வேண்டப் பட்டது. ஐரோப்பிய நாடுகளில், கிறிஸ்தவ நாடுகளுக்கிடையிலான போர் நற்செய்தியை, பலவீனப்படுத்துகின்றது. ஆனால் மறைபோதகப் பணித்தளங் களில் பிளவுபட்ட நிலை நற்செய்திக்கு இடறலாகவும், அமைப்பு ரீதியான பாவமாகவும் கருதப்பட்டது. இதில் இலங்கைத்தீவில் உருவான நெருக்கடியான காலகட்டங்களில் யாழ். மறைவட்ட முன்னாள் ஆயர் பேரருள்திரு. எமிலி யானுஸ்பிள்ளை, தென் இந்தியத் திருச்சபை ஆயர் பேரருள்திரு. சபாபதி குலேந்திரன், மெதடிஸ்த வட புலத் தலைவர் அருள்திரு. நைல்ஸ் ஆகியோரின் வளலாய் கருத்தாடல்கள் குறிப்பிடத்தக்கவை. (ஜெயசீலன், யாழ். திருச்சபை வரலாறு)

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்

கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் ஜனவரி 18இல் இருந்து 25 வரை அனுசரிக்கும் வழக்கம் பல சபைகளிடையே உருவானது. ஜனவரி 18இல் பேதுருவின் ஆசனம் என்னும் விழாவும் ஜனவரி 25 பாவிலுவின் மனந்திரும்பல் விழாவும் எனத் திருச்சபையின் வழிபாட்டு நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விருவிழாக்களுக்கும் இடைப்பட்ட வாரமே கிறிஸ்தவ ஒன்றிப்பின் வாரம் எனப்படுகின்றது. இதனை அறிமுகப்படுத்தியவர் போல் வற்சன் என்ற அங்கிலிக்கன் இறையியலாளர், அங்கிலிக்கன் சபையில் ஆன்மீக ஒன்றிப்பின் அடிப்படையில் உரோமைக்கு திரும்புதல் என்ற நோக்கில் இவ்வாரத்தை அறிமுகம் செய்தார். ஐரோப்பாவில் பல கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான செயற் பாடுகள் மற்றும் உரையாடல்கள் இடம்பெறத்தொடங்கின. தெசே (Taize) கிறிஸ்தவ ஒன்றிப்புக் குழுமங்கள் இளந் தலைமுறையினர் மத்தியில் புதிய கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஊட்டத்தை உருவாக்கியது.

## இறையியலாளர்களின் ஊட்டம்

20ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ ஆன்மீகத்தை வலுப்படுத்தியவர்களில் இருவரான லூத்தரன் சபை டெரிச் போன்ஹேவரின் (Dietrich Bonhoeffer) நாசிகால நம்பிக்கை அனுபவங்களும், சிறிய சகோதரர் சாள்ஸ் பூக்கோ (Charles de Foucauld) என்னும் கத்தோலிக்கத் துறவியின் பாலைவன அனுபவங்களுமாகும். நவீன இறையியலின் தந்தை ஸ்கிலேயர்மாக்கர் (Schleier- macher) என்ற லூத்தரன் போதகரின், இறையியலில் வரலாற்றுத் தன்மையை வலியுறுத்திய பார்வை கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யியலாளர்களை ஒன்றிணைத்தது. நவீன விவிலிய ஆய்வுகள் மற்றும் குறிப்பாக திருத்தந்தை 11ம் பயஸின் திவினோ அவுளான்றே ஸ்பிரிற்று (Divino Afflante Spiritu) என்ற திருமடல் விவிலிய ஆய்வு மட்டத்தில் புதிய ஊடாட் டத்திற்கும் உறவுக்கும் வழிவகுத்தது. சீர்திருத்த அக்குவினா தோமை என அழைக்கப்பட்ட சுவிட்சர்லாந்து லூத்தரன் போதகர் கார்ள் பாற்தின் (Karl Barth) நியாயவாக்கத்தின் புதிய பார்வை கிறிஸ்தவ ஒன்றிப்புப் பாதையில் புதிய தடங்களை உருவாக்கியது. கத்தோலிக்க ஆசிரியர்களின் முக்கியமான இறையியல் ஆய்வுகள் பல பார்த்தின் படிப்பினைகளை வன்முறையுடன் பார்க்கத் தொடங்கின என பொனிபர் வில்யம்ஸ் தனது "கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்திற்கு கார்ல் பார்த்தின் பங்களிப்பு என்ற" கட்டுரையில் தெரிவிக்கிறார். பிரான்ஸில் பல்வேறு கிறிஸ்தவ மக்கள் மத்தியில் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான ஒத்துழைப்புக்கு தெசே குழுமம் வித்திட்டது. கத்தோலிக்க திருச்சபையில் யக்குஸ் மாரிரையின், ஜிவிஸ் கொங்கார் போன்றவர்களின் தளமுயற்சிகளும், சிறப்பாக இறையியல் சிந்தனைகளும் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான புதிய அலையை உருவாக்கின. இப்பின்புலத்தில் பல கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

## கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான பேராயம்

கிறிஸ்தவ ஒன்றிப்பை வளர்க்கும் செயலகத்தை வத்திக்கானில் கருதினால் பே (Bea) தலைமையில் 1960 இல் திருத்தந்தை 23வது யோவான் தொடக்கிவைத்தார். உலகம் முழுவதும் தல ஆயர் சங்கங்களை வழிநடத்த வும் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான புதிய தடங்களை இறையியலில் உருவாக்க வும் இவ் ஆணைக்குழு பல வழிகாட்டல்களை வெளியிட்டது. வரலாற்று ரீதியில் திருச்சபை அமைப்புகள் பிளவுபட்ட போதிலும் இவ்வாணைக் குழு இறையியல் ரீதியில் நடத்திய பல கலந்துரையாடல்கள் புதிய தடங்களை உருவாக்கின. விவிலிய மொழிபெயர்ப்பை மூல மொழியில் இருந்து பொது மொழி பெயர்ப்புக்கு வழிகாட்டியது.

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருப்புமுனை

கத்தோலிக்க திருச்சபையில் கிறிஸ்தவ ஒன்றிப்பின் கிளர்தலுக்கு ஜிவ்ஸ் கொன்காரின் மூலாதாரமான மாற்றம் 2 ம். வத்திக்கான் சங்கத்தில் திருச்சபையியல் மறுமலர்ச்சி புத்தூக்கமான பங்களிப்பாக சங்கமித்தது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் அக, புற மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. சீர்திருத்தச் சபையினரைப் பார்வையாளராகப் பங்குபெற விடுத்த அழைப்பு, புதிய உறவுக்கும், உரையாடலுக்கும் வழிதிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையியலில் உருவான மாற்றம் திருச்சபையை இறையாட்சியின் பணியா ளாக தன்னை அடையாளப்படுத்த உத வியது. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளின் மொழிப் பிரயோகம் திருச் சபை அதிகாரத் தன்மையான திருச் சபைச் சட்ட மொழியிலிருந்து மாறுபட்ட தாய் இருந்தது. பிரஞ்சு இறையியலாளர் ஜிவிஸ் கொன்காரின் கிறிஸ்தவ ஒன்றிப் புக்கான செல்நெறி வத்திக்கான் சங்க மடல்களில் பிரதிபலித்தது. கபிரியல் பிளையன் என்ற இறையியலாளர் பிரஞ்சு இறையியலாளர் ஜிவிஸ் கொன்காரின் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கான செல் நெறி யின் போக்குப் பற்றிய ஆய்வுக் கூற்று எமது அவதானத்துக்குரியது.

> இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் அக, புற மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தது. சீர்திருத்தச் சபையினரைப் பார்வையாளராகப் பங்குபெற்ற விடுத்த அழைப்பு, புதிய உறவுக்கு, உரையாடலுக்கும் வழிதிறந்தது. திருச்சபை யியலில் உருவான மாற்றம் திருச்சபையை இறையாட்சியின் பணியாளாக தன்னை அடையாளப்படுத்த உதவியது.

## புதிய பார்வை

**லூமென் ஜென்சியும்** - இது 'மக்களின் ஒளி' என்னும் தலைப்பில் 21. நவம்பர் 1964 இல் 2ம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கமாகும். வரலாற்று மாற்றத்திற்கேற்ப திருச்சபை தன்னைப்பற்றிப் புதிய மொழியில் அடையாளப்படுத்தியது. புதிய செல் நெறிக்கான சுயவிமர்சிப்பாக இம்மடல் அமைந்தது. கத்தோலிக்க திருச்சபை சட்டவாக்க மொழிப் பிரயோகத்தில் பேசா மல் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான உரை யாடல் மொழியில் கதைத்தது. இம்மடல் கோட்பாட்டுரீதியில் ஒரு திருப்புமுனை என லாம். கத்தோலிக்க திருச்சபை தாம் மட்டும் இறைமக்கள் எனும் குறுகிய வரையறையை விடுத்து தன்னை அனைத்துலகத்தினது பணியாளனாகவும் அறிவித்தது. ஸ்தாபன ரீதியை விடுத்து விவிலியத்தின் பின்னணி யில் இறைமக்கள் எனும் புதிய தோற்றப் பாட்டை உருவாக்கியது. இறைவனோடு உள்ள நெருங்கிய உறவையும் மனிதகுலத் தின் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும்

> கத்தோலிக்க திருச்சபை தாம் மட்டும் இறைமக்கள் எனும் குறுகிய வரையறையை விடுத்து தன்னை அனைத்துலகத்தினது பணியாளனாகவும் அறிவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியாகவும் அருளடையாளமாகவும் திருச்சபை தன்னை வரையறை செய்கின்றது. கிறிஸ்துவின் ஒரே திருச்சபை பேதுரு வழி வருபவராலும் அவரோடு ஒன்றித்திருப்பவர்களாலும் வழிநடத்தப்படும் கத்தோலிக்க திருச் சபையில் உளது எனத் தாழ்மையாக அறிவித்தது.

## புதிய செல்நெறிக்கான பாதை

1964. நவம்பர் 21ம் நாள் திருச்சபை வெளிக்கொணர்ந்த **"யூனித் தாதிஸ் ரெதின்தெக்ராஸியோ"** ஒன்றிப்பு மீண்டும் ஏற்படுவதை எனும் தலைப் புடன் 2ம் வத்திக்கான் சங்கத்தின் கிறிஸ்தவ ஒன்றிப்புப்பற்றிய விதித்தொகுப்பு, கத்தோலிக்க திருச்சபையில் கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய புதிய செல் நெறிக்கான பாதைக்கு தளமிட்டதுடன் நம்பிக்கையின் புதிய செல்நெறிக்கு ஒளி பாய்ச்சியது.

எதிர்ப்பாளர்கள், பிரிவினைக்காரர்கள் எனும் மறுசீரதிருத்தவாத மொழிப் பிரயோகத்தை விடுத்து ஆண்டவரில் சகோதரர் சகோதரிகள் எனத் திருச்சபை அழைத்ததும், கிறிஸ்தவ ஒன்றிப்பு, தாய்த் திருச்சபைக்குத் திரும்பல் என்னும் வரலாற்றுப் பார்வையை விடுத்து தன்னை அருள் அடையாளமாகவும், அருள் பணியாளனாகவும் அடையாளப்படுத்தி புதிய இறையியல் மொழியில் பேசியது. திரிபுவாத சமூகங்கள் என்ற கருத்தியலை விடுத்து இச்சமூகங்களைத் திருச்சபையாக, மற்றும் திருச்சபைசார் சமூகங் களாக அழைத்ததும் கிறிஸ்தவ ஒன்றிப்பின் பாதைக்குத் திருச்சபையின் புதிய திருப்புமுனையாக 2ம் வத்திக்கான் சங்க மடல் அமைந்தது. இம்மடல் திருச்சபை வரலாற்றில் எதிர்கொண்ட பல எதிர்வினைகளின் வெளிப்பாடாகவே கருதவேண்டும்.

## மூன்றாம் உலகத் திருச்சபைகள்

கிறிஸ்தவர்களின் மதப்பிரிவையோ, வரலாற்றுப் பரிமாணத்தையோ, நம்பிக்கை கொண்டோரின் வரலாற்றுப் பங்களிப்பையோ கருத்தில் கொள்ளா மல் கிறிஸ்தவம் காலனித்துவ மதம் என மொத்தமாக அழைப்பதும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் கிறிஸ்தவ ஒன்றிப்பை மறைபரப்பு பணித்தளங் களில் வலியுறுத்தியது. இலங்கைத் தீவில் பாடசாலைகள் மறைப்பணியாளர் களிடமிருந்து தேசியமயமாக்கப்பட்டது. வைத்தியசாலைப் பணியிலிருந்து மறைப்பணியாளர்கள் நிறுத்தப்பட்டனர். பிரிந்துநின்று இயேசுவை அறிவிக்கும் சவாலை நம்பிக்கைகொண்டோர் சந்தித்தனர். ஒன்றிப்பிற்கான எண்ணம் வலுவுறத் தொடங்கியது. சிறப்பாக விடுதலை இறையியல் சிறப்பான செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டின் வலியுறுத்தல், ஒருங்கிணைத்த செயற்பாட்டிற்கு மூன்றாம் உலகில் வழிவகுத்தது. மூன்றாம் உலகக் கிறிஸ்தவ ஒன்றிப்பு இறையியலாளர் அமைப்பு மூன்றாம் உலகத் திருச்சபையில் ஒன்றிப்புக்கான இறையியல் தளத்தை வலுப்படுத்தியது

## கிறிஸ்தவ ஒன்றிப்பின் சில மைற்கற்கள்

2ம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான ஈடுபாடு தனித்துவமான வளர்ச்சியை இறையியல் தளத்திலும் செயற்பாட்டு ரீதியிலும் உருவாக்கியது. திருத்தந்தை 6வது பாவிலு கொன்சாண்டிநோபிளில் கிரேக்க மறைத்தந்தை அத்தனகோரசை சந்தித்ததும் ஒருவர் ஒருவர் மேல் விதிக்கப்பட்டிருந்த விலக்கலை விலக்கிக் கொண்டதும் கிறிஸ்தவ ஒன்றிப்பில் புதிய நம்பிக்கையையும் ஒளியையும் தந்தது. இதே ஆண்டு மார்ச் மாதம் அங்கிலிக்கன் தலைமைப் பேராயர் இராம்சியுடன் இணைந்து கிறிஸ்தவ ஒன்றிப்பை வலியுறுத்தி வெளியிட்ட கூட்டு அறிக்கை கிறிஸ்தவ ஒன்றிப்பில் இன்னுமொரு மைற்கல்லாகும். இதனைத் தொடர்ந்து திருத் தந்தையர்கள் 6வது பாவிலுவும் பின்னர் 2வது யோவான் பாவிலுவும் கீழைத்தேய மரபுச்சபைகளோடு இணைந்து பொது விசுவாச அறிக்கை மற்றும் பொது கிறிஸ்தியல் விசுவாச அறிக்கை ஆகிய பல கூட்டு அறிக் கைகளை வெளியிட்டுள்ளார்கள்.

மறைக் கோட்பாட்டுப் பேராயம், கீழைத்தேய மரபுத் திருச்சபை களுக்கான பேராயம், கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான பேராயம் போன்றவைகள் கூட்டு முயற்சிகளுக்கான செல்நெறியை வழிப்படுத்தின. விவிலியப் பொது மொழி பெயர்ப்பை வலியுறுத்தியதுடன் திரு முழுக்கு, திருப்பணி, திருமணம் போன்ற தலைப்பில் ஒன்றிப்புக்கான பல இறையியல் உரையாடல்களை நெறிப்படுத்தின.

சபைகளுக்கிடையில் மந்தைகளைத் திருடும் போக்கு கிறிஸ்தவ அறநெறியைக் கொச்சைப் படுத்துகிறது. திருச்சபை புதுப்பிக்கும் நோக்கத்தை விடுத்து, பிளவு மனப் பான்மையை உருவாக்கல் நற்செய்தியை வலுவற்ற தாக்குகிறது.

## கிறிஸ்தவ ஒன்றிப்பின் எதிர்ப்பலைகள்

சீர்திருத்தத்தை உருவாக்கப் பிரிந்து சென்றவர்கள் தமக்குள் பல குழுக்களாக பிரியத்தொடங்கினர். இன்று கிட்டத்தட்ட 35,000 கிறிஸ்தவக் குழுக்கள் தளத்தில் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ அடிப்படை வாதக் குழுக்கள் எப்பிரிவில் இருந்த போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ ஒன்றிப்பை ஏற்பதில்லை. ஒருவரையொருவர் சாத்தான்கள், எதிர் கிறிஸ்துகள் என அழைக்கும் போக்கு திருச்சபையின் உறவுகளைக் கசப் பாக்குகிறது. மற்றைய மதத்தினருடனான உரையாடல் போக்கின் வழிகளைக் கடினமாக்குகிறது. சபைகளுக்கிடையில் மந்தைகளைத் திருடும் போக்கு கிறிஸ்தவ அறநெறியைக் கொச்சைப்படுத்துகிறது. திருச்சபை புதுப்பிக்கும் நோக்கத்தை விடுத்து, பிளவு மனப்பான்மையை உருவாக்கல் நற்செய்தியை வலுவற்றதாக்குகிறது.

## பற்றுறுதியோடு முன் செல்வோம்

"உரோமை ஆயருக்குப் பகிர்தலின் அடையாளமாக உள்ளது, உங்கள் பிரசன்னம். எல்லாவற்றிகும் மேலாக எம்மை எது பிளவுபடுத்தும், முழுமை யானதும் வெளிப்படையுமான ஒன்றிப்புக்கு ஐயப்பாடான நிழலை விழுத்தும் நிலையில் உங்கள் பிரசன்னம் பகிர்தலின் அடையாளமாகவும் உரோமை ஆயருக்கான ஆதரவாகவும் உள்ளது. எனவே பற்றுதியில் பயணிக்கக் கிறிஸ்துவாகிய தலைமையை நோக்கி வளர உங்களைப் பெரிதும் தங்கி யிருக்கலாம்" எனப் புதிய திருத்தந்தை 16வது பெனடிக்ட் கிறிஸ்தவ ஒன் றிப்பை வலியுறுத்தியுள்ளார்.

ஒற்றுமையின் கொடையை மந்தைகள் நல்ல ஆயனிடமிருந்து கொடையாகப் பெறக் கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு ஒரே மனத்துடனான தொடர்ச்சி யான மன்றாட்டு தேவைப்படுகிறது எனக் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான திருத் தந்தையின் ஆணைக்குழுத் தலைவர் கருதினால் வோல்ர் கஸ்பார் குறிப் பிட்டதுபோல பற்றுறுதியான பயணிப்புக்கு அர்ப்பணம் தேவை.

## துணை நின்ற நூல்கள்


1. Bonijac Williams, What Does Karl Barth Contribute to Ecumenical Movement? Concilium, Vol. 4, No. 2, April 1966.
2. Franklin H. Littell, Historical Atlas of Christianity, Continuum, London, 1976
3. Wolfhart Pannenberg, The Ecumenical Movement since Vatican II – a Lutheran view, in Theology Digest, Vol.51. Nov.3 2004.
4. Gabriel Flynn, Yves Congar's Ecumenical Heritage: an Ecumenical Ethics for Reconciliation, in Theology Digest, Vol.51. Nov.3 2004.
5. L'OSSERVATORE ROMANO, No. 18, 4. May. 2005





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக இறையியல் நோக்கி..........

அருட்சகோ. எ. எட்வினாதன்

## தொடக்கமாக

மனித வாழ்வுக்கு மற்றொரு பெயர் உறவு எனலாம். மனித வாழ்வு சமூகத்தில் உள்ள உறவால் பரிணமிக்கிறது, வளர்கிறது, நிறைவு பெறுகிறது. இத்தகைய அடிப்படையான மனித உறவு வெகுஜன தொடர்பு சாதனங்களில் மெருகூட்டப்படுகிறது. திசை திருப்பப்படவும் செய்கிறது.

இன்று உலகமே ஒரு சிறு குழுமமாக மாறி விட்ட நிலை; சமூகத் தொடர்புச் சாதனங்களும், ஊடாகச் சக்திகளும் உலகை வித்தியாசமாக் கிவிட்டன. செய்திகள் பரிமாற்றத் திலிருந்து சிந்தனை உருவாக்கம் வரை ஊடகங்கள் ஆதிக்கம் எங்கும் எதிலும் வியாபித்து இருக்கிறது. இன்று, ஒருபுறம் வியக்க வைக்கும் ஊடக வளர்ச்சி மறுபுறம் மனித சிந்தனை யையும் மனிதகுல மேம்பாட்டையும் திசை திருப்பும் ஊடகத்தின் இன் றைய நிலை. இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம், இணை யத் தளம் போன்ற ஊடகங்கள் இன்று மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறாக மக்களுடன் இரண்டறக் கலந்துவிட்ட ஊடகம் என்ற விடயப்பொருளை, சமயப் பண்பாட்டுச் சூழலிலும், சமூக, அரசியல் தளத்திலும் ஆய்வுக்குட்படுத்தி, பின்னர் கிறிஸ்தவ பாரம்பரிய பின்னணியில்

இன்று உலகமே ஒரு சிறு குழுமமாக மாறி விட்ட நிலை; சமூகத் தொடர்புச் சாதனங்களும், ஊடாகச் சக்திகளும் உலகை வித்தியாசமாக்கிவிட்டன. செய்திகள் பரிமாற்றத்திலிருந்து சிந்தனை உருவாக்கம் வரை ஊடகங்கள் ஆதிக்கம் எங்கும் எதிலும் வியாபித்து இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிட்டுப் பார்த்து சில மேய்ப்புப் பணி கருத்துக்களை முன்வைக்க இக் கட்டுரையில் முனைகிறேன்.

## தமிழர் பண்பாட்டு பின்னணியில் ஊடகம்

இன்று ஊடகங்கள் உலகை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன. சிந்தனையாளர்கள் மத்தியில், ஊடகங்கள் பற்றிய பேச்சு பரவலாகக் காணப்படுகின்றது. இந்த ஊடகங்கள் "சமூகத் தொடர்புச் சாதனங்கள்" அல்லது "சமூகத் தொடர்புக் கருவிகள்" என்று அழைக்கப்பட்டு வந்தன.

இன்று ஊடகங்கள் உலகை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன. சிந்தனையாளர்கள் மத்தியில், ஊடகங்கள் பற்றிய பேச்சு பரவலாகக் காணப்படுகின்றது. இந்த ஊடகங்கள் "சமூகத் தொடர்புச் சாதனங்கள்" அல்லது "சமூகத் தொடர்புக் கருவிகள்" என்று அழைக்கப்பட்டு வந்தன.

ஊடகம் என்ற சொல் மரபு, நவீன ஊடகங்களை உள்ளடக்கிய ஒரு சொல். பொதுவாக இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப் படங்கள், கணினி, இணையத் தளம் போன்ற நவீன ஊடகங்களையே இன்றைய சொல் வழக்கில் குறித்து நின்றாலும், மரபு ஊடகங்களின் தொடக்கமே ஊடகங்களின் ஆரம்பமாக கருதப்படுகின்றது.

மனிதன் சமூகமாக வாழ ஆரம்பித்த பொழுதே ஊடகம் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. மனிதன் பயன்படுத்திய முதல் ஊடகம் சைகை ஆகும். மனிதர்கள் சைகைகளின் மூலமாகச் செய்திகளை பரிமாறிக் கொண்டார்கள். மனிதன் கண்டுபிடித்த இரண்டாவது ஊடகம் மொழி ஊடகமாகும். மொழி என்ற ஊடகத்திற்குள்ளும், பல்வேறு உட்பிரிவு ஊடகங்கள் உண்டு. தமிழ்மொழி என்ற ஊடகத்திற்குள்ளும், இயற் தமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் ஊடகங்கள் காணப்படுகின்றன. இயற் தமிழ் (பேச்சு கலை) தமிழ் சமூகத்தில் ஒரு முக்கிய ஊடகமாக இதுவரை இருந்து வந்துள்ளது. இயற் தமிழ், தமிழ் இந்து சமூகத்தின் ஆலயத் திருவிழாக்களிலும், இன்னும் அவர்களுடைய கலாச்சார அமர்வுகளிலும் முக்கியமாக பயன்படுத்தப்பட்டு வந்த ஒரு ஊடகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத் தமிழ் ஊடகமும் மிகப் பழமையானது. அண்மைக்காலம் வரை இசைத் தமிழ் ஊடகம் எளிய நாட்டுப்புற இசையுடன் இணைந்து தமிழ் மக்களின் சமய பண்பாட்டுத் தளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. இசை ஊடகம் மிகவும் ஆழமாக மனிதனைப் பாதிக்கக்கூடிய இயல்பைக் கொண்டது. இதனால் மனிதனைப் பல்வேறு உணர்ச்சி நிலைகளுக்கு இட்டுச் செல்லக் கூடிய ஆற்றலையும், ஆழமான உணர்ச்சி நிலைகளிலிருந்து எளிதில் மாற்றக்கூடிய சக்தியையும் கொண்டிருப்பதால், இந்து சமய பண்பாட்டிலே மக்களை பக்தி பரவச நிலையிலே இறைவனோடு ஒன்றிக்கச் செய்யும் ஊடகமாக சிறந்து விளங்குகிறது.

நாடகத் தமிழ் ஊடகம், இயல், இசை தமிழ் மற்றும் நடனம், நாட்டியம் ஆகிய கலைகளையும் உள்ளடக்கியிருந்ததால் மனிதனை ஒட்டு மொத்தமாக பாதிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தது. எமது தமிழ்ச் சமுதாயத்தின் சமயப் பின்னணியை எடுத்து பார்ப்போமானால், தங்களுடைய சமய மரபுகள் பண்பாடுகளையும் இந்த ஊடகங்கள் வாயிலாக வளர்த்து வந்தார்கள் என்றால் அது தமிழ்ச் சமூகத்துக்குச் சாலப்பொருத்தமானதே. ஆரம்பகாலக் கலைகள் இந்து சமயப் பின்னணியில் தான் வளர்க்கப்பட்டு வந்தன. இவ்வாறாக மரபு ஊடகங்கள் குறிப்பிட்ட மக்களின் சமயப் பண்பாட்டை அவர்களது மொழியில், அவர்களது தனிப்பட்ட பிரச்சனைகளை மையமாக வைத்து செயல்பட்டது. அந்தந்த மக்களின் உணர்வு, பண்பாட்டுத் தளங்களில் ஊன்றியதால் அவை ஆழமாக மனிதனைப் பாதிக்கக் கூடியவையாக இருந்தன. குறிப்பாக, மிக எளிய மொழியில் ஒட்டு மொத்த உணர்வுகளையும் பாதிக்கக்கூடிய இயல்பினைக் கொண்டவை தான் மரபு ஊடகங்கள்.

இவ்வாறாக மரபு ஊடகங்கள் குறிப்பிட்ட மக்களின் சமயப் பண்பாட்டை அவர்களது மொழியில், அவர்களது தனிப்பட்ட பிரச்சனை களை மையமாக வைத்து செயல்பட்டது.

காலத்தால் கட்டுப்படுத்தப்பட்ட தொடர்பை அல்லது செய்தியை காலத்திற்கு அப்பாற்பட்டு அல்லது இடத்திற்கு அப்பாற்பட்டு வழங்கி வருவது தான் நவீன ஊடகங்கள். 18ம் நூற்றாண்டில் கண்டு பிடித்த அச்சு ஊடகத்தின் வழியாக ஊடகத்தினுடைய தன்மை மேன்மை பெற்றது. முதலில் விவிலியத்தையும் செபங்களையும் அச்சடித்து வழங்குவதற்கு அச்சு ஊடகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து இதழ் ஊடகம் வளர்ச்சியடையத் தொடங்கியது. இப்பொழுது நாளிதழ், வார இதழ், மாதத்தின் இதழ்கள் என நூற்றுக்கணக்கான இதழ்கள் உள்ளன. இந்த இதழ்கள் குறிப்பாக கற்றறிந்த வர்களுக்கு அல்லது எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு பயன்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து நவீன ஊடகங்களின் வரிசையில் வானொலியும், தொலைக்காட்சியும், கணிணி, இணையத் தள ஊடகங்களும் தோற்றம் பெற்று, மிகப் பெரிய செய்தி ஸ்தாபனமாக உருவாக்கம் பெற்று, இன்று சமூகத் தொடர்புச் சாதனங்களாக மக்களுக்குச் சிறந்த சேவையாற்றி வருகின்றன.

இலங்கைச் சூழலில் குறிப்பாக தமிழகப் பின்னணியில் இந்தச் சமூகத் தொடர்புச் சாதனங்களைச் சொந்தம் கொண்டாடுவது அல்லது இயக்கிச் செல்வது இந்து மதவாத ஆதிக்க வர்க்கத்தினர். இதனால் இவர்கள் தங்களின் கலாச்சாரத்தையே மக்களின் கலாச்சாரமாகத் திணிக்கும் செயற்பாடு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நடக்கிறது. இவர்கள் பயன்படுத்தும் சொல்லாடல்கள், பழக்கவழக்கங்கள் இவர்களுடைய மேன் மையை நிலைநாட்டுவதோடு, மற்றவர்களும் கடைப்பிடிக்க இவர்கள் அவர்கள் மேல் திணிக்கிறார்கள். ஏழை மக்களின் வாழ்வையும் கலாச்சார, பண்பாட்டு, பொருளாதார, பின்னணியையும் சிறிது கண்ணோக்கி பார்க்க இவர்கள் முயல்வதில்லை.

## அரசியல், சமூக, பொருளாதார பின்னணியில் ஊடகம்

இன்றைய மானுட உலகில் ஊடகம் மிகப்பெரிய தாக்கத்தை நிகழ்த்தியுள்ளது. ஊடகத்திற்கு முன் மனிதன் பிரமித்துப் போய் நிற்கிறான். ஊடகம் என்ற படைப்பின் படைப்பாளியாகிய மனிதன், தனது படைப் பாகிய ஊடகத்திற்கு முன் கைகட்டி, வாய் பொத்தி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்று ஊடகத்தை மனிதன் ஆள்வதற்குப் பதிலாக ஊடகம் மனிதனை ஆண்டு கொண்டு இருக்கிறது. ஊடகத்தின் பாதிப்பி லிருந்து எந்த மனிதனும் தப்ப இயலாத நிலையும் ஏற்பட்டுள்ளது. மனிதன் விரும் பாதவற்றையும், எதிர்பார்க்காதவற்றையும்

ஊடகத்திற்கு முன் மனிதன்
பிரமித்துப்போய் நிற்கிறான்.
ஊடகம் என்ற படைப்பின்
படைப்பாளியாகிய மனிதன்,
தனது படைப்பாகிய
ஊடகத்திற்கு முன் கைகட்டி,
வாய் பொத்தி நிற்கும் நிலை
ஏற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் முதலில் மனித மூளையில் திணிக்கின்றன. இவ்வாறாக, முதலில் செய்தித் திணிப்பு சிந்தனைத் திணிப்பு நிகழ்கிறது. இப்படியாக நிறையச் செய்திகளைத் திணிப்பதால் மனித சுய சிந்தனை அழிகிறது. அரசியலைப் பின்புலமாகக் கொண்டு ஊடகங்கள் மக்களை அடக்கி ஆள் வதை இன்றைய சூழலில் நாம் காண்கின்றோம்.

## இலங்கையின் பலசமயப் பின்னணியில் ஊடகம்

இலங்கை நாடு பல்சமய மக்கள் வாழுகின்ற ஒரு நாடாக இருப்பதால், இங்கு இயங்கும் ஊடகங்கள் மற்றச் சமயங் களைப் பற்றிய அறிவிக்கும், அனைத்துச் சமயங்களையும் மதிக்கும் பண்பிற்கும் இட் டுச்செல்ல வேண்டிய கடப்பாடு கொண்ட வையாக இருக்க வேண்டும். பல்சமய உரை யாடலுக்கும், வெவ்வேறு சமயங்கள் சார்ந் தோர் ஒருவரை மற்றவர் புரிந்து கொண்டு பரஸ்பர உணர்வோடும் நல்லிணக்கத்தோடும் ஒற்றுமையாய் வாழ்வதற்கு ஊடகங்கள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. ஒவ் வொரு மனிதனும் தான் விரும்பிய மதத் தைப் பின்பற்ற அவனுக்கு உரிமை உண்டு என்பதை ஊடகங்கள் மறந்து விடாது பக்க சார்பற்று, நடுநிலைமையோடு கருத்துக்களை முன்வைக்க ஊடகங்கள் உதவும் போது தான் மக்கள் பல்சமயப் பின்னணியை உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

> இலங்கை நாடு பல்சமய மக்கள் வாழுகின்ற ஒரு நாடாக இருப்பதால், இங்கு இயங்கும் ஊடகங்கள் மற்றச் சமயங்களைப் பற்றிய அறிவிக்கும், அனைத்துச் சமயங்களையும் மதிக்கும் பண்பிற்கும் இட்டுச்செல்ல வேண்டிய கடப்பாடு கொண்டவையாக இருக்க வேண்டும்.

ஆனால் இலங்கையில் ஊடகங்கள் மதசார்பாகச் செயல்படுவதையே காணுகிறோம். இலங்கையின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் பெரும் அபாய மாக உள்ள பௌத்த பேரினவாதிகளுக்கும் மற்றைய மதங்களுக்குமிடையில் உண்மையில் எந்தவிதமான உறவோ, தொடர்போ இருந்து வந்ததில்லை. இவர்கள் அரசியல், பொருளாதார இலாபங்களுக்காக தங்களுடைய மதத்தை பயன்படுத்துபவர்கள். அண்மைக்கால அரசியல் அமைப்பை எடுத்துப் பார்ப் போமானால் பௌத்த மத பேரினவாதிகளைப்போல், இந்து மத தனிநபர்களும், பிற மதத்தினரை தங்களின் பகைவர்களாக ஊடகங்கள் வாயிலாகச் சித்தரித்து தேர்தலில் வெற்றி பெறவும், வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுவதன் மூலம் கிடைக்கின்ற பலன்களை பெரும்பான்மையினரது மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, பெரும்பான்மையினரின் அரசியல் ஆதரவைப் பெற, ஊடகங்களைப் பயன்படுத்திய, 'மதவாத சக்திகளாக' அண்மைக்கால தமிழ் போராட்ட வரலாற்றிலே பார்க்கக்கூடியதாக உள்ளது.

## ஊடகத்தின் சமூக பொருளாதாரப் பின்னணி

எந்த ஒரு சமூகத் தொடர்புச் சாதனத்துக்கும் பெருமளவிலான முதலீடும், நவீன தொழினுட்ப கருவிகளும் மூலதனமாக இருக்க வேண்டி இருப்பதால் 'தொடர்புச் சாதனங்கள்' ஒரு சிலரின் உடைமையாக காணப்படுவ தோடு, பெரும்பான்மையான மக்களை நுகர்வோராய்த் தன்வசமாகக் கவர்ந்து கொண்டிருக்கிறது.

அரசால் நடத்தப்படும் சமூகத் தொடர்புச் சாதனங்களான வானொலி தொலைக்காட்சி, பத்திரிகை அரசின் கொள்கைகளுக்கு துதிபாடவும், அரசின் கருத்தியல்களை நிலைப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. தனி முதலாளி கள் கையில் இயங்கும் தொடர்புச் சாதனங்கள் லாபம் ஈட்டுவதற்கும் சந்தையில் தங்கள் மதிப்பை தக்க வைத்துக் கொள்ளவும், ஏற்கனவே இருக்கும் சமதளமற்ற சமுதாயத்தை நியாயப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்பு சாதனங்களில் வெளிவரும் தகவல்கள் ஒவ்வொன்றும் இயக்குபவரின் ஆதிக்க செய்திகளையும், நிகழ்ச்சிகளையும், பொழுதுபோக்கு அம்சங்களை யும் இந்த வடிவத்தில் இப்படித்தான் கொடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக தீர்மானித்து கொடுக்கிறார்கள்.

ஊடகங்கள் பெரும்பாலும் நகர்ப்புறச் சாய்வை கொண்டவையாக காணப்படுகின்றன. இதனால் கல்வியறிவு, பணவசதி போன்றவற்றில் சார்ந்து இருக்கின்றன. ஆதலால் நகர வாசிகளிடமும், நடுத்தர வர்க்கத்தினரிடமும் அதிகம் தங்கியுள்ளதால் பெரும்பாலானவை நகரத்திலேயே நின்றுவிடுகின்றன. இவ்வாறாக உரிமையாளர்களும், நுகர்வோரும் பெரும்பாலும் நகரவாசிகளாக இருப்பதால் நகரவாசிகளின் தேவைகளை அதிகரிக்கச் செய்ய ஊடகங்கள் முனைகின்றன. இதுவரை ஊடகத்தை எமது சமய பண்பாட்டு, அரசியல், பொருளாதார தளங்களில் பார்த்து அவற்றில் காணப்படும் பல்வேறு பிரச்சினை களை அடையாளம் கண்ட நாங்கள் அவற்றை கிறிஸ்தவ சிந்தனையின் பின்னணியில் சீர் தூக்கிப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் ஊடகங்களூடாக தன்னை வெளிப்படுத்துகிறார்

கடவுள் மனிதர்களுடன் உறவு கொள்ள வேண்டும் என்னும் நோக்குடன், தொடக்க முதல் தன்னை பல்வேறு நிகழ்வுகள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளார். இதனைத்தான் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் (1:9) இல் பவுல் குறிப்பிடுகிறார். "நன்னயமும், ஞானமும் உள்ள கடவுள் தம்மைத் தாமே வெளிப்படுத்தவும் தமது திருவுளத் திட்டத்தை அறிவிக்கவும் விரும்பினார்."

இத்திருவுளத் திட்டம் தம்முடன் உள்ளார்ந்த முறையில் தொடர்பு கொண்ட செயல்களாலும், சொற்களாலும் நிறைவுபெறுகின்றது. அதாவது மீட்பு வரலாற்றில் கடவுள் புரிந்த அளப்பரிய செயல்கள், போதனைகள், சொற்கள் அனைத்தும் இவருடைய திட்டத்தின் உள்ளார்ந்த உண்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

வாக்கு வழியாக அனைத்தையும் படைத்து, காத்து வரும் கடவுள் படைக்கப்பட்ட பொருள்கள் வழியாக உறவு கொள்ள விரும்பினார். தன்னைப் பற்றி மக்கள் அறிந்து கொள்ள அவற்றை ஓர் சிறந்த ஊடகமாக ஏற்படுத்தினார். மேலும் விண்ணக வாழ்விற்கான பாதையைக் காட்ட முற்காலத்திலிருந்தே ஆதிப்பெற்றோருக்கு வெளிப்படுத்திய வேளையிலும், அவர்களது வீழ்ச்சியின் பின்னரும் மீட்பை வாக்களித்து, அதன் மூலம் அவர்கள் நிறைவாழ்வுக்காக எதிர்நோக்கியிருக்க பல நிகழ்வுகள் மூலமாக அவர்களை தயார்படுத்தினார்.

இவ்வாறாக தொடக்கத்திலிருந்தே, கடவுள் படைப்பு பொருட்கள் வாயிலாகவும் இன்னும் பற்பல சம்பவங்கள், நிகழ்வுகள், நபர்கள் மூலமாக, தான் மனிதர்களுடன் உறவுகொள்ள விரும்பி தன்னையே ஒரு ஊடகமாக ஏற்படுத்தினார்.

## இயேசு இறைவனை வெளிப்படுத்தும் ஊடகம்

"பலமுறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள் இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார், இவரை எல்லாவற்றுக்கும் உரிமையாளராக்கினார்; இவர் வழியாக உலகங்களைப் படைத்தார்." (எபே. 1:1-2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் வாழும் இறைவாக்காகிய இயேசு கிறிஸ்து எல்லா மனிதர் முன்னும் ஒளியாய் ஒளிர்ந்து, கடவுள் பற்றிய உள்ளார்ந்த உண்மைகளை மக்களுக்கு உண்மையுடன் எடுத்துரைக்கும்படி கடவுள் அவரை அனுப்பி வைத்தார். மனிதருக்காக மனிதராக இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இயேசு கிறிஸ்து "கடவுளோடு இருந்து கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறார். ஏனெனில் தந்தை அவருக்கு நிறைவாழ்வுப் பணியை நிறைவேற்ற அருள் வழங்கியுள்ளார்.

இயேசு கிறிஸ்து உண்மையில் தன் உடனிருப்பாலும் வெளிப்பாட்டாலும், சொற்களாலும், செயல்களாலும், அருள் அடையாளங்களாலும், புதுமைகளாலும் தந்தையை வெளிப்படுத்துகின்றார். அனைத்திற்கும் மேலாக இயேசு கிறிஸ்து இறந்து மாட்சியுடன் உயிர்பெற்றெழுந்ததாலும், உண்மையின் ஆவியானவரை அனுப்பியதாலும் இறைவனை முழுமையாக வெளிப்படுத்தி தன்னுடைய பணியை நிறைவு செய்கிறார்.

இவ்வாறாக, இயேசு கிறிஸ்து இறைவனை, மக்களுக்கு வெளிப்படுத்த பல வழிமுறைகளை கையாண்டார். குறிப்பாக அவரது உரைகளில் உறுதி இருந்தது, உண்மை வெளிப்பட்டது. அவருடைய வார்த்தைகள் அவருடைய உள்ளத்திலிருந்து வெளிப்பட்டன. தீமையை எதிர்ப்பதிலும், நன்மையை எடுத்துரைப்பதிலும் அவர் முனைப்புடன் செயல்பட்டு முற்று முழுதாக இறைவனை வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாக விளங்கினார்.

## திருவிவிலியம் ஒரு சிறந்த ஊடகம்

அறநெறி வாழ்விலும், ஆன்மீகத்திலும் மக்கள் ஏற்றம் பெற திருவிவிலியம் பல சிறந்த கருத்துக்களைக் கொண்டுள்ளது. திருவிவிலியத்தின் முதல் பகுதியாம் பழைய ஏற்பாடு ஒரு நாடோடி இனமான இஸ்ராயேல் மக்களின் வரலாற்றைத்தான் கருவாகக் கொண்டுள்ளது. இஸ்ராயேல் மக்கள் வாழ்வில் கடவுள் பற்றிய செய்திகளும், கடவுள் கூறிய அருளுரைகளும் ஏற்படுத்திய தாக்கங்கள் அனைத்தையும் திருவிவிலியத்தில் இறைவார்த்தையாக ஏற்றுக்கொள்கிறோம். இந்த இறைவார்த்தையின் ஆற்றலும், மேன்மையும் ஆங்காங்கே பறைசாற்றப்பட்டு திருவிவிலியத்தின் ஊடகத்தன்மைக்கு பெருமை சேர்க்கப்படுகிறது.

விவிலியம் கூறும் செய்திகளை அறிவிக்கும் இறையடியார்களின் பாதங்கள் அழகானவை என்று கடவுளே புகழாரம் சூட்டுவதாக எசாயா இறைவாக்கினர் குறிப்பிடுகின்றார். (எசாயா 52:7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களும், ஊடகப்பணி புரிவோரும் அஞ்சா நெஞ்சத்துடன் நீதிக்குச் சான்று பகர வேண்டும். இதையே திருவிவிலியத்தில் ஏரேமியாவின் அழைப்பு புலப்படுத்துகிறது.

ஊடகங்களும், ஊடகப்பணி புரிவோரும் அஞ்சா நெஞ்சத்துடன் நீதிக்குச் சான்று பகர வேண்டும்.

ஆண்டவர் கையை நீட்டி ஏரேமியாவின் வாயைத் தொட்டு கூறியது:

**இதோ பார்! என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்.**
**பிடுங்கவும், தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும்,**
**கட்டவும், நடவும் இன்று நான் உன்னை**
**மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும்**
**பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்.** (ஏரே. 1:9-10)

இவ்வாறாக திருவிவிலியம் என்னும் ஊடகத்தின் ஊற்று கடவுளே என்றும், விவிலியத்தின் வார்த்தைகள் அனைத்தும் மனித வாழ்வின் மேம்பாட்டிற்காக மட்டுமே அளிக்கப்பட்டுள்ளன. விவிலிய வார்த்தையின் ஆற்றலும், தன்மையும் ஊடகத் தன்மையைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளது. உண்மையில் ஊடகங்கள் எத்தகைய வார்த்தையை தாங்கி வரவேண்டும் என்பதற்கு எபிரேயருக்கு எழுதிய திருமுகம் சான்று பகர்கின்றது.

**கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது.**
**இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது.**
**ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது.**
**எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது.**
**உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது.**
(எபி. 4:12)

இவ்வாறாக திருவிவிலியம் ஊடகங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகவும் ஊடகங்களில் தலைசிறந்த ஊடகமாகவும் இயேசுவை வெளிப் படுத்தும் ஊடகமாகவும் காணப்படுகின்றது.

## ஊடகத்தின் முழுமை இயேசு கிறிஸ்து

திருவிவிலியம் எனும் ஊடகத்தின் இரண்டாவது பகுதியாகிய புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்துவை கருப்பொருளாகக் கொண்டுள்ளது. இறைமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்துவின் பணிவாழ்வைக் கூர்ந்து நோக்கும்போது அவரே திரு விவிலியம் என்ற மாபெரும் ஊடகத்தின் முழுமை என்று நாம் உறுதியாகக் கூறலாம். ஏனெனில் பழைய ஏற்பாடு கூறும் வார்த்தை ஊடகம் இயேசுக் கிறிஸ்துவில் மிகச் சிறப்பாக நிறைவு பெறுகின்றது.

ஊடகத்தின் அடிப்படைத் தன்மையே அவற்றின் மக்கள் தொடர்பு தான். மக்களுக்காகவே ஊடகங்கள் உள்ளன. ஓர் ஊடகம் வெற்றிகரமாகச் செயல்படவோ, அல்லது தன் முழு சக்தியையும் மக்கள் பெற்றுக் கொள்ளவோ அதற்குத் தேவையான அடிப்படைத் தகுதி மக்கள் தொடர்புதான்.

**ஊடகத்தின் முழுமை இயேசு கிறிஸ்து. இந்த இயேசுக் கிறிஸ்து மக்கள் தொடர்பை முன்னிலைப்படுத்துகின்றார். "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார்" என்ற வாக்கியம் இயேசு மக்களோடு இரண்டறக் கலந்து விட்ட தன்மையைத் தான் பறை சாற்றுகின்றது.**

ஊடகத்தின் முழுமை இயேசு கிறிஸ்து. இந்த இயேசுக் கிறிஸ்து மக்கள் தொடர்பை முன்னிலைப்படுத்துகின்றார். "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடி கொண்டார்" என்ற வாக்கியம் இயேசு மக்களோடு இரண்டறக் கலந்து விட்ட தன்மையைத் தான் பறை சாற்றுகின்றது. இதைத்தான் பவுல் அடிகளார் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் தெளிவாகக் கூறுகிறார்.

**"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்"** (பிலி. 2:6-7)

இவ்வாறாக இயேசுவின் வாழ்வில் மக்கள் தொடர்பு ஒரு தன்மையோடு இருந்தது. தான் வாழ்ந்த யூதச் சமுதாயத்தில் இடம்பெற்றிருந்த பல்வேறு சமூகப் பிரிவுகளை இயேசு சரியாகக் கணித்தார். அன்றைய சமூகத்தின் கீழ்மட்டத்தில் இருந்த பெருவாரியான மக்களோடு இயேசு தன்னை அதிகமாக இணைத்துக் கொண்டு அவர்களுடைய உரிமைகளையும், நல்வாழ்வையும் தனது பணிக்கொள்கையாக்கினார். இயேசுவின் பணிக் கொள்கையில் ஓர் ஆன்மீக உள்ளுணர்வும், அதேவேளையில் மக்களின் நல்வாழ்வை நோக்கமாக கொண்ட உணர்வும் காணப்பட்டது. ஆதலால் தான் குருக்கள், பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர் ஆகியோரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையாகக் கண்டித்ததோடு, ஏழைகள், சிறைப்பட்டோர், பார்வையற்றோர், ஒடுக்கப்பட்டோர் போன்ற அடித்தட்டு மக்களின் விடுதலையையும், நல்வாழ்வையும் கருத்திற் கொண்டு சிறந்த ஊடகமாகச் செயற்பட்டார்.

அவருடைய பணிக்கொள்கை இன்றைய ஊடகங்களுக்கு ஒரு சவாலாகவே அமைந்துள்ளது.

**"ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது ஏனெனில்**
**அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்.**
**ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர்**
**விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர்**
**என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து**
**அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை**
**முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்."**

(லூக். 4:18-19, எசா 61:1-2)

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் மக்கள் தொடர்பு அவர் கையாண்ட பேச்சு நயங்களில் பெரும்பாலும் வெளிப்பட்டது. அவரது உரைகளில் உறுதி இருந்தது, உண்மை வெளிப்பட்டது. அவருடைய வார்த்தைகள் அவருடைய உள்ளத்திலிருந்து வெளிப்பட்டன. தீமையை எதிர்ப்பதிலும், நன்மையை எடுத்துரைப்பதிலும் அவர் முனைப்பாகச் செயல்பட்டார். அன்றைய மக்கள் வாழ்வில் காணப்பட்ட இலக்கிய நயங்களைப் பயன்படுத்துவதிலும், உயர்ந்த மதிப்பீடுகளை பேணுவதிலும் திறமையுடன் செயல்பட்டார். இயேசு கிறிஸ்து ஓர் சிறந்த ஊடகமாக விளங்குவதற்கு அவருடைய பேச்சுத் தன்மை ஒரு சான்றாக விளங்கியது.

"இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்ன இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன் தானே!" இவ்வாறாக ஊர்மக்கள் பேசும அளவுக்கு இயேசு சிறந்த இலக்கியப் பண்புகளை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஒரு சிறந்த ஊடகமாக யூத சமுதாயப் பின்னணியில் வாழ்ந்து, ஊடகங்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.

## திருச்சபை இயேசுவை வெளிப்படுத்தும் ஊடகம்

இறைத் தந்தையின் திட்டப்படி மகன் அனுப்பப்பட்டதிலிருந்தும், தூய ஆவி பொழியப்பட்டதிலிருந்தும் திருச்சபை தோன்றி நற்செய்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பதேயே தலையாய பணியாகக் கொண்டு செயற்படுகிறது. இறைத் தந்தையின் "அன்பின் ஊற்றிலிருந்து" அதாவது இறைத் தந்தையின் பரம அன்பிலிருந்து இவ் அறிவிப்பு பணியானது ஊற்றெடுக்கிறது.

ஆதலால் ஆண்டவர் இயேசு தொடக்கத்திலிருந்தே "தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார்....... தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும்..... அவர் பன்னிருவரை நியமித்தார்" (மாற். 3:13-15). இவ்வாறாக தந்தையால் தாம் அனுப்பப்பட்டதுபோலவே அவரும் திருத்தூதர்களை உலகம் முழுவதற்கும் அனுப்பினார். 'உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர்; நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். (மாற். 16:15-16) ஆதலால், கிறிஸ்து தரும் நம்பிக்கையையும், நிறைவாழ்வையும் பரப்புகின்ற கடமையானது கிறிஸ்துவினால் திருச்சபை மேல் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே திருச்சபையில் கிறிஸ்துவின் நற்செய்திப்பணி தொடர்கிறது. ஏழைகளுக்கு நற்செய்திப் பணி ஆற்ற அனுப்பப்பட்ட கிறிஸ்துவின் பணியை இவ்வுலகில் தொடர்ந்து ஆற்றுவதை திருச்சபை செயற்படுத்துகிறது. கிறிஸ்து சென்ற வழியோ ஏழ்மை, கீழ்ப்படிதல், பணிவிடை புரிதல், சாவுக்கு இட்டுச் சென்ற தற்கையளிப்பு. இச்சாவிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்து வெற்றிவீரராக வந்தார். இவ்வாறாக, கிறிஸ்து சென்ற அடிச்சுவடுகளை பின்பற்றி திருச்சபையின் பணியாளர்கள் செல்வதன் மூலமும், பணியாளர்களினால் நடாத்தப்படும் வழிபாடுகள் மூலமும் திருச்சபையானது இயேசுவை வெளிப்படுத்தும் சிறந்த ஊடகமாக திகழ்கின்றது.

## ஊடகங்கள் இயேசுவை - இறையாட்சியை வெளிப்படுத்தும் ஊடகங்களாக....

### 1) சமூக நீதியை பிரதிபலித்தல்:

சமூகத்தைக் கட்டியெழுப்பும் பணியில், இறையரசுப் பணியில் எல்லாத் தரப்பு மக்களும் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்பதில் ஊடகங்கள் தெளிவாக இருக்க வேண்டும். சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, பாமரமக்களும் சிரமங்களின்றி ஊடகக் குழுவோடு இணைந்து கொள்ள ஊடகங்கள் வழி காட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2) எதிர்மறைத் தன்மையை நீக்க வேண்டும்:

சமகால ஊடகங்களில் முக்கியம் பெறுவது அரசியல் நடவடிக்கைகளும் வன்முறைகளும், விளம்பரங்களும். இவற்றின் மூலம் மக்களை ஊடகத்துறைக்கு அடிமைகளாக்கி, தொடர்புப் பணியை வர்த்தக மயமாக்கி விட முனைகிறார்கள். ஆனால் இயேசுவின் பணி படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவிப்பது. அதாவது இலவசமாகப் பெற்றுக் கொண்டதை இலவசமாக கொடுக்க முயல வேண்டும்.

## 3) கூர்மையான கவனங்கள்:

ஊடகத் துறையில் செயற்படும் ஊடகவியலாளர்கள் தாங்கள் வாழ்கிற சமூகத்தை, சுற்றி நடக்கிற நிகழ்வுகளை உன்னிப்பாகவும், கூர்மையாகவும் கவனிக்கிறவராகவும் இருக்க வேண்டும்.

## 4) மனிதன் முதன்மைப்படுத்தப்படல் வேண்டும்:

மனிதனது மேலான மாண்பினை பலவீனப்படுத்தாது, மனிதனுடைய போலித்தனமான பண்பாட்டு இறுக்கங்களை தகர்க்க ஊடகங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

## 5) வாழ்வில் மாற்றம் கொண்டு வரவேண்டும்:

ஊடகத் தொடர்பு மனித வாழ்வில் தகவல் தருவதற்கோ அல்லது அறிவை வளர்ப்பதற்கு மட்டும் பயன்படும் ஒன்றாக அமையாது, மாறாக மனித வாழ்வில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்த ஊடகங்கள் முயல வேண்டும்.

ஊடகங்கள் ஒவ்வொன்றும் அஞ்சா நெஞ்சுடன் அநீதியைச் சுட்டிக் காட்டி நீதியை நிலைநாட்டுவதன் மூலம் உண்மைக்கு சாட்சியம் பகர பணியாற்ற வேண்டிய தலையாய கடமையுண்டு.

## 6) உண்மைக்கும் சாட்சியம் பகர்தல்:

ஊடகங்கள் ஒவ்வொன்றும் அஞ்சா நெஞ்சுடன் அநீதியைச் சுட்டிக் காட்டி நீதியை நிலைநாட்டுவதன் மூலம் உண்மைக்கு சாட்சியம் பகர பணியாற்ற வேண்டிய தலையாய கடமையுண்டு. ஊடகங்கள் மனிதனின் மலிவான உணர்வுகளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், உந்துதல்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் தீனியிடுவதை நோக்கமாகக் கொள்ளாது மனித வாழ்வை வளர்ப்பதை கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.

## இறுதியாக

இதுவரை ஊடகங்களின் அடித்தளத்தையும், தாக்கங்களையும் அதற்கான தீர்மானங்களையும் பார்த்த நாம் இனி என்ன செய்ய வேண்டும். எனச் சிந்திக்க வேண்டும். ஊடகங்கள் மத்தியில் விழிப்புத் தோன்றிவிட்டால் நமக்கு வெற்றி நிச்சயம். தமிழ்ச் சமூகம் இனியாவது சமூகப் பொறுப்பினை வளர்க்கும், உறவினை வலுப்படுத்தும், மக்கள் மொழிகளை கையாளும், அடித்தள மக்களை மையப்படுத்தும், இழிவுகளை விமர்சனம் செய்யும், வாழ்வையே செய்தியாய்க் காட்டும் தொடர்பு ஊடகங்களை மட்டுமே கையில் எடுக்க வேண்டும். அதனையே முன்னிலைப்படுத்த வேண்டும். இதற்கு ஊடக சமூகமும் பணியாளர்களும் உதவிட வேண்டும். இதைத்தான் திருச்சபையும் விரும்புகிறது, வரவேற்கிறது. இதுவே பணியாளர்களின் கடமையுமாகும்.

> தமிழ்ச் சமூகம் இனியாவது சமூகப்
> பொறுப்பினை வளர்க்கும், உறவினை
> வலுப்படுத்தும், மக்கள் மொழிகளை
> கையாளும், அடித்தள மக்களை
> மையப்படுத்தும், இழிவுகளை
> விமர்சனம் செய்யும், வாழ்வையே
> செய்தியாய்க் காட்டும் தொடர்பு
> ஊடகங்களை மட்டுமே கையில்
> எடுக்க வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


1. திருவிவிலியம் - பொதுமொழி பெயர்ப்பு TNBCLC, Tindivanam.
2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்
3. தோழன், 2002
4. மீடியா; நதி மூலம் ரிஷி மூலம் ஊடக இறையியல் தேடல் மதுரை ஆனந்த' தொகுப்பாசிரியர்
5. John Paul II, "Aetatis novae", Vatican City - 1992





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிறிஸ்தவ ஆன்மீகம்

அருட்தந்தை கிறிஸ்ரியன் வாஸ்

## அறிமுகம்

ஆன்ம வாழ்வு பற்றிப் பார்க்கும் இம்முயற்சி ஆன்ம இயல், ஆன்ம நெறி பற்றிய முழுமையான ஆக்கமல்ல. குருக்கள் துறவியர்களை இலக்காகக் கொண்டதுமல்ல. இறைமக்கள் அனைவரின் குறிப்பாக பொது நிலையினரின் வாழ்வுக்குப் பயன்படக்கூடிய ஆன்மீகம் பற்றிய சில அடிப் படைக் கருத்துக்களே. இறைவார்த்தையின் ஒளியில், இலங்கை நாட்டுச் சூழலில் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பின்னணியில், எழுத்து வடிவம் பெறும் சில எண்ணக் கோலங்களே.

## பின்னணி

அந்நியரின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற பின், நிலவும் ஐம்பது வருட இன முரண்பாடு போராக உருவெடுத்து ஆயிரக்கணக்கானோரைப் பலி கொண்டு இலட்சக்கணக்கானோரை இடம் பெயர வைத்து நாட்டை பல தளங்களில் பின்நகர்த்தி உள்ளது. போர்நிறுத்தம் மூன்று வருடங்கள் நீடித்தும் தீர்வுக்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

ஆழிப்பேரலை ஏற்படுத்திய பேரழிவுகளின் மத்தியில் முண்டியடித்து முதலுதவிகளைச் செய்தாலும் மலை போல் குவியும் உலக உதவிகளை மனமுவந்து பகிர்ந்து உருக்குலைந்த உள்ளங்களையும் ஊர்களையும் நாட்டையும் மீளக்கட்டும் பணியை மேற்கொள்ள முடியாத இழுபறி நிலை தொடர்கிறது.

பல சமயங்கள் உள்ள இந்நாட்டில் சமய சுதந்திரம், (நிகழ்காலம் வரை) சமயங்களுக்கான அமைச்சுக்கள், நிதி ஒதுக்கீடு, தேசிய கல்வியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய பாடம், அரச நிகழ்வுகளில் பல் சமய வழிபாடுகள், சமய உரையாடல்கள், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் சமயங்களின் ஈடுபாடுகள் உண்டு. அதே வேளையில் இனப்பிரச்சினைக்குத் தூண்டுதலாகவும், தீர்வு முயற்சிகளுக்கு தடையாகவும் இருக்கின்ற சமயவாதிகளும் உள்ளனர் என்ற குற்றச்சாட்டுகளும் உண்டு. இதனால் சமய உரசல்களும் மோதல்களும் தொடர்ச்சியாக இடம் பெறுகின்றன.

இந்நாட்டில் கிறிஸ்தவம் தோன்றி ஐநூறு ஆண்டுகளாகிவிட்டன. நாட்டு மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள் ஏழு விகிதமானாலும் கல்வியிலும் சமூகவாழ்விலும் இனமத ஒன்றிப்பு முயற்சிகளிலும் பெருமளவு ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும், பின்வரும் நிலைகளையும் கவனிக்கலாம்.

- இருமொழி பேசுபவர்களைக் கொண்ட பங்குகளிலும் ஆலயங்களிலும் குருத்துவ துறவற குழுக்களிலும் பணி அமைப்புக்களிலும் ஆழமான புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் உறவும் போற்றப்படும் அளவுக்குக் காண்பதரிது.

- இரண்டாம் வத்திக்கான் சங்கம், ஆசிய ஆயர் மன்றம், மூவாயிரமாம் ஆண்டை நோக்கிய மேய்ப்புப் பணித்திட்டங்கள் பல புற மாற்றங்களை ஏற்படுத்தினாலும் விசுவாசிகளில் பெரும் பகுதியினர் பாரம் பரிய பக்தி முயற்சிகளை மட்டுமே கருத்தாய்க் கடைப்பிடிப்பதையும் விசுவாசத்திற்குப் பொருந்தாத செயல்களில் ஈடுபடுவதையும் தொடர்ந்தும் காணலாம்.

- மனத்தையும் மனிதத்தையும் மாற்றாத மறைக்கல்விகள், இதயத்தையும் இறை உறவையும் பாதிக்காத இறைக்கல்விகள், விசுவாசத்தையும் வாழ்வையும் குழைக்க இயலாத வழிபாடுகள், விழாக்கள் தொடர்கின்றன.

> மனத்தையும் மனிதத்தையும் மாற்றாத மறைக்கல்விகள், இதயத்தையும் இறை உறவையும் பாதிக்காத இறைக் கல்விகள், விசுவாசத்தையும் வாழ்வையும் குழைக்க இயலாத வழிபாடுகள், விழாக்கள் தொடர்கின்றன.

- விசுவாச வாழ்வைப் புதுப்பிப்பதில் சில உள்நாட்டுக் குழுக்களின் முயற்சிகளைத் தவிர அண்மைக்கால அருங்கொடைத் தியானங்கள், குணமாக்கல் வழிபாடுகள் பெரும்பாலும் வெளிநாட்டில் இருந்து வருகை தருபவர்களாலேயே நடாத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை தேடும் வினாக்கள்

- ✧ பல சமய பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்கின்ற இந்நாட்டில் சமயங்கள் அறிக்கையிடுகின்ற அன்பு வாழ்வும், ஒன்றிப்பும், சமத்துவமும், சகோதரத் துவமும், நீதியும், அமைதியும் ஏற்படாதது ஏன்?
- ✧ சமய பாரம்பரியங்கள், பக்தி முயற்சிகள், வழிபாடுகள் போன்றவற்றைக் கடைப்பிடிப் பதன் பொருள் என்ன?
- ✧ பல்லாயிரக்கணக்கான சமயக் குருக்கள், துற விகள், தொண்டர்கள், அமைப்புக்கள், மேற் கொள்ளும் பணிகளின் பயன் என்ன?
- ✧ இப்பின்னணியில், சமயங்கள் ஒளியிழந்து சாரமற்றுப் போய்விட்டனவா? என்ற வினாக் களும் ஆன்மீகம் பற்றிப் பார்க்க வேண்டிய தேவையும் எழுகின்றன.

> பல்லாயிரக்கணக்கான சமயக் குருக்கள், துறவிகள், தொண் டர்கள், அமைப்புக்கள், மேற்கொள்ளும் பணிகளின் பயன் என்ன?

## ஆன்மீகம்

ஆன்மவாழ்வு என்றவுடன் இவ்வுலகம் சாராதது, மறுவுலகம் சார்ந்தது என்று பொதுவாகப் பலர் எண்ணுவதுண்டு.

வாழ்வின் செயற்பாடுகளை இரு கூறுக ளாக்கி - ஆராதனைகள், செப தப முயற்சிகள், தியான யோகப் பயிற்சிகள், திருநாட்கள், திருப் பயணங்கள், போன்றவை ஆன்மீகம் சார்ந்ததென் றும் - உழைப்பு, ஓய்வு, சமூக பொருளாதார அரசியல் வாழ்வு, விளையாட்டு, பொழுதுபோக்கு, கலை கலாச்சாரம், போன்றவை இவ்வுலகம் சார்ந்த தென்றும் அழைப்பதுண்டு.

> ஒறுத்தலும் உபவாசமும், மந்திரமும் மனவெழுச்சியும், பக்தியும் பரவசமும், அற்புதமும் அருங் குறியும், ஆன்மீகத்தின் சிறப்பான வெளிப்பாடுகள் என்றும் கருதுவதுண்டு.

அத்தோடு ஆன்ம வாழ்விற்கான அழைப்பு குறிப்பிட்ட சிலருக்கே (குருக்கள், துறவிகள், பக்திமான்கள்) என்றும் குறிப்பிட்ட இடங்கள் (ஆலய வளாகங்கள், குருத்துவ துறவற இல்லங்கள், ஆச்சிரமங்கள்) குறிப்பிட்ட நடையுடை பாவனை இதற்குத் தேவையென்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒறுத்தலும் உபவாசமும், மந்திரமும் மனவெழுச்சியும், பக்தியும் பரவசமும், அற்புதமும் அருங்குறியும், ஆன்மீகத்தின் சிறப்பான வெளிப்பாடுகள் என்றும் கருதுவதுண்டு.

தரைபாயும் ஆறெல்லாம் கடலினையே சேரும்
தாவரங்கள் எல்லாமே கதிரோனை நாடும்
வேரினங்கள் எல்லாமே நீரிருப்பைத் தேடும்
மன்னுயிர்க்கு எல்லாமே உன்னருளே வேண்டும்.

என்ற பாடலின் வரிகள் காட்டும் இயல் உலக இயக்கம் போன்று,

மனிதன் அகத்தேடலுடன் தன் வாழ்வின் திசையமைவை இறைவனை நோக்கி நிலை நிறுத்துவதே ஆன்மீகமாகும்.

ஒருவர் அகத்தில் இறை நாட்டம் கொண்டு தன் வாழ்வு முழுவதையும் இதற்காக ஈடுபடுத்தும் போதுதான் ஆன்மீகப்பயணத்தைத் தொடங்குகின்றார்.

இப்பயணம் ஒருவரின் ஆளுமை முழுவதிலும் - அறிவு நிலையிலும், அன்பின் தளத்திலும், செயலின் வெளிப்பாட்டிலும், - நிகழும் ஒன்று.

ஒருவர் இறைவனோடு (மேற்) கொள்ளும் உறவுப்பயணம். எனவே ஓர் தொடர் பயணம். ஒரு சில நிகழ்வுகளில் (தியானம், வழிபாடு., திருப்பயணம்), சில அனுபவங்களில் (மனமாற்றம், ஆவியில் திருமுழுக்கு, பரவசப் பேச்சு), சில செயற்பாடுகளில் (செபம், நோன்பு..... ), சில நாட்களில் (ஓய்வு நாள், திருநாட்களில் .... ) முற்றுப் பெறுவதொன்றல்ல.

அத்தோடு ஆன்மீகம் வாழ்வின் பல தளங்களில் "பத்தோடு கூடிய பதினொன்றாவது" போன்றதல்ல. மனித வாழ்வு முழுவதற்கும் ஆதாரமும் அடித்தளமும், இதயமும் இயக்கமுமாக இருந்து அதற்குப் பொருளும் (அர்த்தமும்) நிறைவும் கொடுக்க வேண்டியது இதுவே.

> "உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆன்மாவோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக."

என்னும் கட்டளை ஆன்மீகம், மனித வாழ்வு முழுவதையும் உள்ளடக்கும் தன்மையுள்ளது என்பதையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித்தவிப்பது போல் கடவுளே என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கிறது. நீரின்றி வரண்ட தரிசு நிலம் போல் என்னுள்ளம் உமக்காக ஏங்குகின்றது." (தி.பா. 63:1)

என்ற திருப்பாடலின் வரிகள் ஆன்மீக ஏக்கத்தின் வெளிப்பாட்டையும்,

"காளைகள் தன் உடமையாளனை அறிந்து கொள்கின்றது. கழுதை தன் தலைவன் தனக்குத் தீனிபோடும் இடத்தைத் தெரிந்து கொள் கின்றது. ஆனால் இம்மக்களோ என்னைப் புரிந்து கொள்ளவில்லை" (எசா. 1:13)

என்ற முறைப்பாடு ஆன்மீக அறிவில்லாத குறைதனையும் சுட்டிக்காட்டுகின்றது.

மேலே பார்த்த ஆன்மீகம் பற்றிய கருத்தின்படி ஆன்ம வாழ்வென்பது அனைவருக்கும், அனைத்துக் காலத்துக்கும், எல்லா இடங்களுக்கும் பொதுவானது ஒன்றுதான். ஏனெனில் இறைவன் ஒருவரே, அவர் அனைவருக்கும் பொதுவானவர். அவரே உலகுக்கும் உயிர்களுக்கும் உள்ளங்களுக்கும் தொடக்கமும் ஆதாரமும் ஊற்றும் கதியுமானவர் "அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கின்றோம் இயங்குகின்றோம் இருக்கின்றோம்" (தி.தூ.பணி.17:28) எனவே ஆன்மீகம் (இறை அனுபவம்) ஒன்றுதான்.

(மனிதனின் வாழ்வுத்தேடலின் தன்மையும் நோக்கும் எப்பெயரில் அழைக்கப்பட்டாலும், அதுபற்றி முழுமையான அறிவும் தெளிவும் இல்லாவிட் டாலும், அவன் தன்னைக் கடந்து நிற்கும் குறிக்கோள், இலட்சியம் போன்ற வற்றை நோக்கிப் பயணம் செய்து வாழ்விற்கு அர்த்தம் தேடும் நெறிமுறை களும் ஆன்மீகம் என்று பொதுவாகப் பேசப்படுகின்றது.)

மனிதர்கள் வேறுபட்டவர்கள். தனித்தன்மை உள்ளவர்கள் (கைரேகை போல). எனவே வெவ்வேறு மனிதர்களால் ஒவ்வொருவரின் தனித்தன்மைக் கேற்ப, தனித்துவமான வழிகளில், வெவ்வேறு வளர்ச்சிப் படிகளில் (உடலில், அறிவில், உணர்வில்), வெவ்வேறு கலாச்சார சூழலில் இவ்வாழ்வு வாழப்படு வதால் வெவ்வேறு ஆன்மீக வெளிப்பாடுகள், முறைகள், நெறிகள், காணப் படுகின்றன.

**எடுத்துக்காட்டாக :-**

- இந்து, இஸ்லாமிய, யூத, கிறிஸ்தவ, (பௌத்த), சீக்கிய .... (சமய) நெறிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✣ விவிலிய, வழிபாட்டு, அருங்கொடை, அருட்சாதன.... (கிறிஸ்தவ) ஆன்மீகம்.
- ✣ கத்தோலிக்க, அங்கிலிக்கன், மெதடிஸ்ட், பெந்தகோஸ்த்து.... (கிறிஸ்தவ சபைகளின்) ஆன்ம நெறிகள்
- ✣ ஆதித்திருச்சபையின், திருத்தந்தையர்களின், மத்திய, நவீன கால, 2ஆம் வத்திக்கான் சங்க ஆன்மீகம்
- ✣ அகுஸ்தீனார், ஆசீர்வாதப்பர், இஞ்ஞாசியார், பிரான்சிஸ்கன், கார்மேல், திருக்குடும்ப (துறவற) ஆன்மீகம்.
- ✣ குருக்கள், துறவிகள், பொதுநிலையினர், திருமண.... .ஆன்மீகம்.
- ✣ சிறுவர், இளையோர், வளர்ந்தோர், முதியோர் .... ஆன்மீகம்.
- ✣ கீழைத்தேச, மேலைத்தேச, ஐரோப்பிய, ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க.... ஆன்மீகம்.
- ✣ இந்திய, இலங்கை .... தமிழீழ, தமிழக .... ஆன்மீகம்.
- ✣ விடுதலை, சுற்றுச் சூழல், பெண்கள், இடம்பெயர்ந்தோர் .... ஆன்மீகம்.

சமயமும் ஆன்மீகமும் ஒன்றல்ல ஆனால் தொடர்புடையது. மனிதன் பகுத்தறிவும் சமூக உணர்வும் உள்ளவன். அதுபோல் இறையுணர்வு கொள்ளக் கூடியவன். இந்த இறையுணர்வு சமய வாழ்வாகவும் சமய பாரம்பரியங் களாகவும் வெளிப்படுகின்றன. மனிதனின் சமய உணர்வு கூட்டு உணர்வாக (மந்தை உணர்வு போல்) மட்டும் இருக்கும் பொழுது, அது கும்பல் உணர்வு மட்டுமே.

இயற்கை, மனச்சான்று, வரலாற்று நிகழ்வுகள், மறையுண்மைகள் வழியாக வெளிப்படும் இறைவனுக்கு தனி மனிதன் கொடுக்கும் பொருத்தமான பதிலே இறை நம்பிக்கை (விசுவாசப்பற்றுறுதி) ஆகும். இந்த இறை நம்பிக்கையிலிருந்து உருவாகும் இறை - மனித உறவே (மேலே பார்த்தது போல) ஆன்மீகமாகும்.

ஆன்மீக வாழ்வின் புற, சமூக, கலாச்சார வெளிப்பாடாக சமயமும், சமய வாழ்வின் புறக் கூறுகளாக விசுவாச உண் மைகள், வழிபாட்டுச் சடங்கு முறைகள், ஒழுக்கச் சட்டங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வாழ்வின் அக உயிராக, உயிர்மூச்சாக, ஆன்மீகம் அமையவில்லையெனில் சமயம் சத்தற்ற சக்கையாகி விடும். உயிரற்ற உடல்போல் ஆகிவிடும். விவிலியத்தில் இறைவாக்கினர்களாலும், இயேசுவாலும், அப்போஸ்தலர்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு, சாடப்பட்டு, மாற்றப்பட வேண்டும் என இடித்துரைக்கப்பட்டதும் இந்த நிலையைத் தான்.

"வாய்ச்சொல்லால் இம்மக்கள் என்னை அணுகுகின்றனர். உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர். அவர்கள் உள்ளமோ என்னை விட்டுத் தொலைவில் இருக்கின்றது." (எசா.29:13)

"எண்ணற்ற உங்கள் பலிகள் எதற்கு?.. போதும் என்றாகி விட்டன. இவற்றில் எனக்கு நாட்டமில்லை.... எனக்கு அருவருப்பைத் தருகின்றது.... சுமந்து சோர்ந்து போனேன் .... உங்களைத் தூய்மைப்படுத்துங்கள்...., நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள்." (எசா. 1:10-11)

"நீங்கள் கிண்ணத்தையும், தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகிறீர்கள். ஆனால் அவற்றின் உட்புறத்தையோ கொள்ளைப் பொருட்களாலும், தன்னல விருப்புகளாலும், நிரப்புகிறீர்கள்" (மத். 23:25)

"இந்நிலையில் நீங்கள் ஒன்றாகக்கூடிவந்து உண்பது ஆண்டவரின் திருவிருந்தல்ல ஏனெனில் நீங்கள் உண்ணும் நேரத்தில் ஒவ்வொருவரும் தான் கொண்டு வந்த உணவை மற்றவர்களுக்கு முந்தியே உண்டு விடுகின்றீர்கள்." (1கொரி 11:20-21)

இதிலிருந்து, அகத்தில் ஆன்ம வாழ்வு வாழும் ஒருவர் புறத்தில் சமயத்தைக் கடைப்பிடிக்காதவராயும், புறத்தில் சமயவாதியாக உள்ள ஒருவர் அகத்தில் ஆன்மீகம் அற்றவராகவும் இருக்கக் கூடும் என்பது புலனாகின்றது.

லங்கள் ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடல் நோக்கி நதிகள் பாயும்
ஒளி நோக்கி மலர்கள் சாயும்
அகிலமும் படைத்த என் இறைவா
எனை நோக்கி வருவதேன்"

"நீ இறைவனைத் தேடிக்கொண்டிருக்க
இறைவன் உன்னையே தேடுகின்றார்
நீ அவர் புகழ் பாடிக்கொண்டிருக்க
அவர் உன் புகழ் பாடுகிறார்."

என்னும் பாடல்களின் வரிகள் கூறுவது போல்,

"இறைவனைத் தேடும் மனிதரை (சமய வரலாறுகள்) இறைவனே தேடி வந்து (பழைய ஏற்பாட்டு வரலாறு) மனுவுரு எடுத்த இறைமகன் இயேசுவின் வழியாக (புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள்) மானிடரனைவரையும் அன்புறவுக்கு அழைக்கின்றார்."

"இறைவனைத் தேடும் மனிதரை (சமய வரலாறுகள்) இறைவனே தேடி வந்து (பழைய ஏற்பாட்டு வரலாறு) மனுவுரு எடுத்த இறைமகன் இயேசுவின் வழியாக (புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள்) மானிடரனைவரையும் அன்புறவுக்கு அழைக்கின்றார்."

என்ற இறை வெளிப்பாடே கிறிஸ்தவ ஆன்ம வாழ்வுக்கான தொடக்கமும், அழைப்பும், தனித்தன்மையுமாகும்.

"பல முறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாட்களில் தம் மகன் வழியாக பேசியுள்ளார். இவரை எல்லாவற்றிற்கும் உரிமையாளராக்கினார்." (எபி.1:1-2)

வரலாற்றிலே ஆபிரகாமுக்கு தன்னை வெளிப்படுத்தி அவரின் சந்ததியாகிய இஸ்ராயேல் இனத்தோடு உடன்படிக்கை உறவை "யாவே" இறைவன் ஏற்படுத்தினார். (வி.ப. 19:3-6). இந்த உடன்படிக்கைக்கு இஸ்ராயேலர் பிரமாணிக்கமற்றவர்களாய் மாறிய பொழுது இறைவன் புதியதோர் நிறைவான உடன்படிக்கையை வாக்குப்பண்ணி, (எரேமி. 31:31-34, எசேக். 36) காலம் நிறைவுற்ற போது இயேசுவின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு வழியாக அதை நிறுவினார் (லூக். 22:20, 1கொரி. 11:25).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியைப் பொழிந்து புதிய உடன்படிக்கை மக்களை (திருச் சபையை) உருவாக்கினார்.

"நாம் கடவுளுக்கு பகைவர்களாய் இருந்தும் அவருடைய மகன் நமக்காக உயிரைக் கொடுத்ததால் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்" (உரோ. 5:10)

இந்த இறையருட்செயல் முறையை (நற்செய்தியை) ஏற்று விசுவசித்து, இந்த உடன்படிக்கை உறவில் இணைந்து செல்லும் பயணமே கிறிஸ்தவ ஆன்மீகமாகும்.

## கிறிஸ்தவ ஆன்மீகத்தின் அடிப்படைப் பண்புகள் :-

- இறைவார்த்தை (விவிலியம்) வழியாக வெளிப்படுத்தும் இறைவனில் விசுவாசம் கொண்டு நம்பிக்கை வைத்து அவரை அன்பு செய்து வாழுதல்.

- வாழும் கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுப் பாவ மன்னிப்படைந்து அவரை ஆண்டவராக அறிக்கையிட்டு திருமுழுக்குப் பெற்று அவரின் பாஸ்கா வாழ்வில் (பாவத்திற்கு இறந்து அருள் வாழ்விற்கு உயிர்த்து) பங்கு கொள்ளுவதன் வழியாக கிறிஸ்துவின் சாயலாக உருமாறுதல். (உரோ. 6:1-11)

- கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பப்பட்டு, இயக்கப்பட்டு புதுவாழ்வு வாழுதல். (யோவா. 3:5, கலா. 5:16-22)

- இயேசு இறை தந்தையோடு கொண்டிருந்த மகன் உறவில் வாழுதல். (உரோ. 8:11-16, கலா. 4:6-7) இந்த உறவின் வெளிப்பாடாக செப வாழ்வு அமைதல். (உரோ. 8:26-27)

- திரித்துவ உறவு வாழ்வில் பங்கு கொள்ளுதல்.

- கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் மனநிலையை அணிந்து கொண்டு (பிலிப் 2:5-8) தன்னலம் துறந்து அன்றாட சிலுவையை சுமந்து அவரைப் பின்பற்றுதல். (மாற் 8: 34-35)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கிறிஸ்துவுக்குள் பெற்ற திருமுழுக்கினால் கிறிஸ்துவின் மறை உடலாகிய திருச்சபையின் உறுப்பினர்களாய், இறைமக்கள் சமூகமாக அன்புறவில் இணைந்து (புனிதர்களின் தோழமையில்) வாழுதல். (1கொரி. 12:12-31, தி.தூ.பணி 2:42-47, 1யோவா. 4:11-12)

- திருச்சபையின் வளர்ச்சியிலும், ஒப்புரவாக்கும் பணியிலும் ஈடுபட்டு உழைத்தல். (உரோ.12:3-8, எபேசி. 1:9-10)

- காணமுடியாத இறைவனின் காணக்கூடிய வெளிப்பாடாக இயேசு இருந்தது போல் அவரின் தொடர்ச்சியாக விளங்கும் திருச்சபையின் அருட்சாதன வாழ்வில் பங்கு கொள்ளுதல். (மத். 28:19, யோவா. 20:22-23, லூக். 22:16-23, யாக. 5:13-14)

- திருச்சபையின் அமைப்பு வாழ்விலும் அன்னையும் ஆசிரியையுமான அதன் வழிகாட்டுதலிலும் பங்கெடுத்தல். (மத். 18: 18, எபேசி. 4:11-12)

- இயேசுவின் நற்செய்தி உண்மைகளை அளவு கோலாகக் கொண்டு அவர் மானிடர் மட்டிலும் குறிப்பாக சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ள ஏழைகள், துன்புறுவோர் மட்டில் அவர் வெளிப்படுத்திய அன்பு, மன்னிப்பு, இரக்கம் போன்ற மனநிலைகளைக் கொண்டு வாழுதல். (மத். 7:21-28, பிலி. 2:1-5)

- உலகத்தைப் புறக்கணிக்காமல் அதிலிருந்து ஒதுங்கி வாழாமல் உலக வாழ்வில் ஈடுபடுவதன் மூலம் அதைப் புனிதப்படுத்தி நிறைவுக்குக் கொண்டு வருதல், இறையரசைக் கட்டி எழுப்புதல். (யோவா. 17:10-19, உரோ. 8:20-22)

  வாழ்வின் பல்வேறு கூறுகளை (உடல், உள்ளம், ஆன்மா: அக, புற வாழ்வு: இறை, மனித உறவு: செபம்,செயற்பாடு: ஆண்மை, பெண்மை பண்புகள்) எதிர் துருவங்களாகப் பார்க்காமல் ஒருங்கிணையும் கூறுகளாக்கி ஆளுமையை மலரச் செய்தல்.

மேற்கூறப்பட்ட பண்புகளின் அடிப்படையில் கிறிஸ்தவ ஆன்மீகம் வாழப்பட, தாண்ட வேண்டிய தடைகள், மேற்கொள்ள வேண்டிய சவால்களாவன:-

- அருளாதாரத்தை விட பொருளாதாரத்தின் அடிப்படையில் கட்டப்படும் வாழ்க்கை முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☞ நுகர்வு கலாச்சாரம், எதிலும் (ஆன்மீகத்திலும்) உடன் நிறைவைத் தேடும் மனநிலை.
- ☞ மேலோட்டமான, நுனிப்புல் மேயும் நிலை (இறை வார்த்தை, வழிபாடு, செபம், புதுப்பித்தலில்)
- ☞ அணுவை, அண்டத்தை ஆராயும் அளவுக்கு ஆன்மாவை ஆய்ந்து அறிய (தி. பா 119) அவகாசமின்மை

- ☑ ஆன்ம வாழ்வுக்கான பசி, தாகம், ஏக்கம், தேடல்
- ☑ இறைவார்த்தையில் (விவிலிய) அடிப்படை அறிவு
- ☑ இறைவெளிப்பாட்டுக்கு பொருத்தமான பதிலாக விசுவாசம்
- ☑ அடிப்படை மனமாற்ற அனுபவம்
- ☑ வாழ்வில் இறைவனுக்கும் இறையாட்சிக்கும் முதலிடம்
- ☑ இறைவனை முழு இதயத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு ஆற்ற லோடும் ஏற்றுக் கொண்டு உறவில் வாழும் அர்ப்பணம்
- ☑ அறிவு, சடங்கு, சட்ட, சம்பிரதாய, பாரம்பரிய மட்டத்தைக் கடந்து இதய ஆழத்தில் வாழ்வு
- ☑ ஆன்மீக உருவாக்கம், பயிற்சி
- ☑ ஆன்மீக ஆசான்கள் ஆசிரியர்கள் மாதிரிகள், மையங்கள்

சமயங்களின் அக வாழ்வாக விளங்கும் ஆன்மீக நெறிகள் மனிதரை மெய்மையோடும், இறைவனோடும் இணைக்கின்ற அனுபவத்திற்கு இட்டுச் செல்வதால் சமயங்களைக் கடைப்பிடிப்போர் அவற்றின் ஆன்ம நெறிகள் காட்டும் ஆழ் நிலை (இறை) அனுபவத்தில் மட்டுமே ஒருங்கிணைய முடியும். சமயங்களின் புற வேறுபாடுகளால் உண்டாகும் போட்டிகள், மோதல்கள் போன்றவற்றுக்கு அப்பால் சமயங்கள் கூறும் அன்பும் ஒன்றிப்பும், சமத்துவமும் சகோதரத்துவமும், நீதியும் அமைதியும் ஏற்பட சமயங்களின் புறத் தளங் களுக்கு அப்பால் அவற்றின் அகத் தளத்தை நோக்கிப் பயணம் செய்ய உதவக்கூடிய பொருத்தமான ஆன்ம பயிற்சிகளை சமயங்கள் மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அருட்சகோ. அ. ஜேம்ஸ்நாதன்

## முகவுரை

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்றார் பெரியார் ஒருவர். அதிலும் நீ ஒரு தமிழ்ப்பெண் என்றால் மார்தட்டிச் சொல் என்கின்றார் பெண் விடுதலையை நேசிக்கும் கவிஞன். தமிழிற்கும் பெண்ணுக்கும் உறவுகள் அதிகம். தமிழைப் பெண்ணாகவும், பெண்ணைத் தமிழாகவும் போற்றியது பண்டைக்காலம். ஆனால் இன்று இலங்கையில் அதிலும் யாழ்ப்பாணத்தில் பெண்களின் நிலை பலவழிகளிலும் கேள்விக் கணைகளுக்கும், விமர்சனத்திற்கும், வியாக்கியானங்களுக்கும் உள்ளாகி உள்ளது.

ஆணாதிக்கச் சமுதாயம்தான் தமிழ்ச் சமுதாயம். இச்சமுதாயத்தில் பெண்களுக்கு ஓர் இடம் இருக்க வேண்டும் எனப் போராடும் ஆண்களும் உண்டு. அப்படிப் போராடும் பெண்களையும் ஆண்களையும் குட்டி அமர்த்தும் ஆண் ஆதிக்க மன்னர்களும் உண்டு.

சமூக பொருளாதார அரசியலப் பின்னணியில் இன்று பெண்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்று முதலாவது பகுதியில் சில ஆதாரங்களோடு சீர்தூக்கிப் பார்க்கின்றேன். சமயப் பின்னணியிலும், கலாச்சாரப் பின்னணியிலும் ஒரு பெண் எந்த இடத்தைப் பெறுகிறாள் என்று இரண்டாவது பகுதி விளக்கி நிற்கின்றது.

யூத கிறிஸ்தவ இறையனுபவப் பின்னணியில் ஒரு பெண் பெறும் வரைவிலக்கணம் எப்படி என்று பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய விவிலிய கண்ணோட்டத்தில் மூன்றாவது பகுதியில் பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக இன்றைய சமூக, கலாச்சார, சமயப் பிரதிபலிப்பில் பெண்களுக்கு ஓர் இறையியல் அனுபவம் தேவையா என்ற வினாவோடு விடை பெறுகின்றேன்.

## இன்றைய யாழ் சமுதாயத்தில் பெண்களின் நிலை:-

இன்றைய யாழ் சமூகத்தில் பெண்களுக்கு என ஒரு சில இடம் கொடுக்கப்பட்டாலும், பல வேறுபட்ட சமூக நிலைகளுக்குள்ளே அவர்கள் ஒதுக்கித் தள்ளப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். பொதுவாக யாழ் சமுதாயத்தில் பெண்கள் கல்வியில் முன்னேறி இருந்தாலும் பெண்களுக்கான உரிமைகள், அடக்கு முறைகள் சமுதாய ரீதியில் மாற்றம் காணப்படாமலேயே உள்ளது. பண்டைய நாட்களோடு ஒப்பிடும்போது மாற்றங்கள் அடக்கு முறைகள் குறைந்தாலும் அவர்களுக்கு உள்ள சமுதாய உரிமை நிலையில் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

### யாழ். மாவட்ட புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தரவுகளின் அடிப்படையில் பெண்களின் நிலை 2003ம் ஆண்டு

**மொத்தப் பெண்களின் எண்ணிக்கை - 591,828**

| வயது | எண்ணிக்கை |
|---|---|
| 0 - 04 | 22,677 |
| 15 - 19 | 28,114 |
| 60 - 64 | 14,000 |
| 75, | 10,000 |

### சமய அடிப்படையில் பெண்களின் நிலை:-

| சமயம் | எண்ணிக்கை | விகிதாசாரம் |
|---|---|---|
| இந்து | 504,487 | 85.24 |
| கிறிஸ்தவம் | 84,790 | 14.32 |
| முஸ்லிம் | 1,241 | 0.7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில், ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களின் விகிதாசாரம் கூடவாகவே உள்ளது. அதாவது 10 பெண்களுக்கு 6 ஆண்கள் என்ற எண்ணிக்கையே காணப்படுகின்றது. சமுதாயத்தின் கல்வி அறிவில் பெண்களின் நிலை உயர்ந்தே உள்ளது. யாழ்ப்பாணத்தில் காணப்படும் பாடசாலைகளில் அதிகமான பாடசாலைகளில் பெண்களே அதிகம் கல்வி பயிலுகின்றார்கள். பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் பெண்களின் எண்ணிக்கையும் விகிதாசாரமும் ஆண்களை விட அதிகமாகவே உள்ளது. பல்கலைக்கழகத் தெரிவுக்கு அழைக்கப்படும் பெண்களின் நிலை 59.17% ஆகும்.

> யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் பெண்களுக்கான பதவிகளும் மதிப்பும் உயர்வாக இருப்பதுபோல் காணப்பட்டாலும் மறைக்கப்பட்டு நடைபெறும் பெண் அடிமைத் தனங்கள் வெளிக் கொணரப்படுவதில்லை.

யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் பெண்களுக்கான பதவிகளும் மதிப்பும் உயர்வாக இருப்பதுபோல் காணப்பட்டாலும் மறைக்கப்பட்டு நடைபெறும் பெண் அடிமைத்தனங்கள் வெளிக்கொணரப்படுவதில்லை. உதாரணமாக, பெண்கள் மீதான சேட்டைகள், வார்த்தைப் பிரயோகம், பாலியல் ரீதியான இம்சைகள், பெண் கடத்தல், பாலியல் வன் கலவி, காதலிப்பதாக ஏமாற்றப்பட்டு வாழ்க்கை இழந்த பெண்கள், பெரிய செல்வந்தர்களின் வீடுகளில் வேலைக்காரிகளாக, அடிமைகளாக உள்ள பெண்கள், கூலி வேலை செய்து சுரண்டப்படும் பெண்கள், வரதட்சணைக் கொடுமை, வேலை வாய்ப்பின்மை, குறைந்த கூலி, இவ்வாறு இன்றைய சமூக தளத்தில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் ஏராளம்.

## பல தளங்களில் மறுக்கப்படும் பெண் உரிமைகள்:-

நிலவுடைமைச் சமுதாய அமைப்புத் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரைப் பெண் இரண்டாந்தரக் குடியாகவே கருதப்படுகின்றாள். பெண் குழந்தையின் வருகை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஒரு பெண் மகளாக, மனைவியாக, தாயாக இருக்கின்றாள். குடும்பக் கடமைகளை நிறைவேற்றி இன்முகத்தோடு வாழ வேண்டும். இவர்கள் வெளி உலகோடு அதிக ஈடுபாடு கொள்ளும்போது சமுதாயச் சேறு இவர்கள் மேல் பூசப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் சமத்துவம் கொள்கையளவில் மட்டுமே காணப்படு கின்றது. ஆண்கள் ஆட்சி செலுத்தக் கூடியவர்களாகவும் பெண்கள் ஆட்சி செலுத்தப்படக்கூடியவர்களாகவும் இருக்கின்ற நிலையில் சமத்துவம் ஒரு எட்டாக் கனியே. சிறு குழந்தைகள் முதல் முதிர்ந்த பெண்கள் வரை பாலியல் வன் கலவிக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். பாதுகாப்பற்ற ஒரு சூழலில்தான் பெண்களின் வாழ்வு தொடர்கிறது.

## பொருளியல் களங்களில் பெண்கள்:-

வாழ்வை நிர்ணயிக்கக்கூடிய முக்கியமான கூறுகளில் அடிப்படையான ஒன்று பொருளாதாரம். பல நூற்றுக்கணக்கான பெண்கள் கண்விழித்தது முதல் இரவு உறங்கச்செல்லும் வரை உழைத்துக்கொண்டே இருக் கின்றார்கள்.

ஒரு பெண் ஒரு நாளில் பல வேலைகளில் ஈடுபடுகிறாள். பெண்கள் செய்யும் அனைத்துப் பணிகளும் வாணிபரீதியான உழைப்பாக மதிப்பைப் பெற்றுத் தரவில்லை. வீட்டு வேலைகளைப் பெண்கள் செய்வது கடமையாக் கப்பட்டுள்ளது. தன்னுடைய உழைப்புக்கான ஊதியம் பெற முடியாத நிலையில் பெண்ணின் பொருளாதாரம் தற்சார்பு நடைமுறையில் காணமுடி யாதுள்ளது. இன்று யாழ்ப்பாணத்தின் பணித்தளங்களில் அதிகமாக அலுவ லகப் பணிகளில் ஈடுபடுவது பெண்களாகும். ஆசிரியைகளாக, அதிபர்களாக, வைத்தியர்களாக, தாதியர்களாகக் கடமையாற்றிப் பொருளாதாரத்திற்குப் பெரும் பங்காற்றுகின்றனர். மேலும் பல குடிசைக் கைத்தொழில்களில் பெண்கள் செய்யும் பணிகளும் பொருளாதாரத்திற்குக் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.

மொத்தப் பொருள் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு பெண்களின் உழைப் பில் இருந்து கிடைக்கின்றது. ஆனால் மொத்த வருமானத்தில் **பத்தில் ஒரு** பங்கு மட்டுமே அவர்கள் கைக்குக் கிடைக்கின் றது. பணித்தளங்களில் வேலை செய்யும் பெண்கள் பொருளாதாரச் சுரண்டலுடன் பாலியல் இம்சைகளுக்கும், கேலிப் பேச் சுக்களுக்கும் உள்ளாகின்றார்கள் என்பது மறைக்க முடியாத உண்மை. பாலியல் தொடுகை, பேச்சு, மிரட்டல் இவற்றால்

**மொத்தப் பொருள் உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு பெண்களின் உழைப்பில் இருந்து கிடைக்கின்றது. ஆனால் மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே அவர்கள் கைக்குக் கிடைக்கின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளரீதியாகப் பாதிக்கப்படும் பெண்கள், சமுதாயம் குறித்த பயம், வேலை இழக்க நேருமோ என்ற கவலை, வீட்டில் உள்ளோரின் உதவியின்மை போன்ற மோசமான விமர்சனங்களும் யாழ் பகுதிகளிலும் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது.

வீட்டு வேலைகள் அனைத்தும் செய்வதுதான் பெண்களின் பிறப்புரிமை என்பது பொய்ச் சட்டமாக இன்றைய சமுதாயத்தில் காணப்படுகின்றது. பெண் குழந்தைகள் மட்டுமே தம் வீடுகளில் வீட்டு வேலைகள் செய்யப் பயிற்சி பெறுகின்றனர். வீடுகளில் பெண்கள் உடல் உள நலமின்றி இருந்தாலும் அவ்வேலைகளைச் செய்ய அவர்களே நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவ்வீட்டு வேலைகளுக்கு கூலி இல்லை. அதனால் அதனையே தம் ஆயுட்காலம்தொட்டு ஆண்களின் ஆதிக்கத்தில் பெண்கள் செய்து இன்றும் இருக்கின்றார்கள்.

அலுவலகங்களில் பல பெண்கள் ஆண்களுக்குச் சரிநிகராக வேலை செய்தாலும் பதவி உயர்வு, கூடிய சம்பளம் என்பன எட்டாத கனியே. பல பெண்கள் அன்றாடக் கூலி வேலை செய்து தம் குழந்தைகளை வளர்க்கும் நிலை இன்றும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. தோட்டங்களில் நாட் கூலி பெறும் பெண்களுக்கு நியாயமான ஊதியம் கொடுப்பதில்லை. இதனைச் சுட்டிக் காட்டுபவர் எவரும் இல்லை.

## அரசியல் அரங்கில்:-

அரசியல் ஈடுபாடு என்பது அதிகாரத்தில் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் பங்கெடுப்பதாகும். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் இன்று தமிழ் பெண்களின் பெருமையை இன்று உலகமே வியந்து நிற்கின்றது. ஆண் போராளிகளுக்கு சரிநிகராக நின்று போராட்டத்தைத் தொடங்குகின்றார்கள். அவர்களின் வெற்றிகளும் பெருமைகளும் எடுத்துக்கூறுகின்றன.

தமிழ் அரசியலில் ஸ்திரம் அற்ற நிலையினால் பெண்கள் முழுநேர அரசியல் பணிகளில் ஈடுபட முடியாமல் உள்ளது. மேலும் ஆணாதிக்கம் உண்டாக்கும் ஆழமான உளவியல் பாதிப்புக்களால் பெண்கள் சமூக, அரசியல், இடையூறுகளுக்கு உள்ளாகின்றனர். இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து அரச பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பெண்ணாக திருமதி பத்மினி சிதம்பரநாதன் இருக்கின்றார்.

> ஆணாதிக்கம் உண்டாக்கும் ஆழமான உளவியல் பாதிப்புக்களால் பெண்கள் சமூக, அரசியல், இடையூறுகளுக்கு உள்ளாகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயத்தளங்களில்:-

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் பெண்களில் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றும் பெண்களின் நிலையை நோக்கின் இன்று ஆலயங்களிலுள்ள இருக்கைகளை நிரப்பும் பகுதியினர் பெண்கள்தான். திருச்சபையின் பக்தி முயற்சிகளில் கலந்துகொண்டு ஈடுபாடு கொள்வதில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் பங்கெடுத்த போதிலும் தலைமைத்துவம் என்பது அவர் களுக்கு எட்டாத கனியாகவே உள்ளது. நிரந்தர வாசகர் பணிநிலை, பீடத் துணைவர் பணிநிலை, என்று பொது நிலையினருக்குத் தரப்படும் உரிமைகள் ஆண்களுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. இது திருச்சபையின் ஆணாதிக் கப்போக்கைக் காட்டுகின்றது. திருமுழுக்கினால் அனைவரும் சமத்துவமும் சமமாண்பும் உடையவராகின்றனர் **(திருச்சபைச் சட்டம் 208).** இச்சட்டம் நடைமுறைகளில் சாத்தியமாகவில்லை.

பெண்ணிய வாதிகளின், பெண் சிந்தனையாளர்களின் இத்தகைய பொருமல்கள் பெண்களின் இன்றைய நிலையை சுட்டிக்காட்டுகின்றன. யாழ் சமுதாயத்தில் இந்து மக்களின் ஆதிக்கம் கிறிஸ்தவ சமூகத்தில் அதிக மாகவே உள்ளது. இந்து சமயத்தை எவரும் ஆரம்பிக்கவில்லை. எனினும் இந்துசமயம் வேதங்கள், உபநிடதங்கள் மூலம் தொடங்குகின்றது. இந்து தத்துவம் பெண்களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கின்றது. பெண் மையைப் பரம்பொருளிற்கு ஏற்றி பெருமைப்படுத்துகின்றார்கள். பெண்மைக்கு இறை வழிபாட்டில் இடம் கொடுக்கப்படுகின்றது. பெண் தாயாக உருவம் பெற்று அவளே கடவுளாகவும் மாறுகின்றாள்.

## சக்தி வழிபாடு:-

யாழ் சமுதாயத்தில் சக்தி என்றால் ஆற்றல் என்றும் செயல்திறன் என்றும் கருதி அதனை ஒரு பெண்மையாக்கி கடவுள் என இந்துக்கள் வழிபடுகின்றனர்.

பெண் ஆனவள் இந்து சமயத்தில் அன்னையாக, கன்னிப்பெண்ணாக, வாழ்க்கைத் துணைவியாக மாறிப் போற்றப்படும் அதே வேளையில், பெண் களுக்கான அடக்கு முறைகள் இருக்கின்றன. தாலி அறுத்த பெண் காரி யங்களுக்கு முன் செல்லக்கூடாது. துடக்கு எனக் கூறியும், கற்பு இழந்தவர் என்றும், மலடி என்றும் கூறி சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கும் இழிவான செயல்கள் இன்றும் யாழ் சமுதாயத்தில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைந்த சாரம் (கலாச்சாரம்):-

தமிழ் கலாச்சாரத்தில் பெண்களுக்கு ஒரு முக்கிய இடம் கொடுக் கப்படுகின்றது. பெண்களே தமிழின் கலாச்சாரம் என்று கூடக் கூறலாம். தலையில் பூ வைத்து, சேலை உடுத்தி ஒரு பெண்ணைப் பார்க்கும் கலாச் சாரம் தமிழர்களில் காணப்படுகின்றது. பெண்ணை தாய்மையாகப் போற்றும் உயர் குணம் தமிழர்களில் உண்டு.

ஒரு குடும்பத்தில் பெண்கள் தாய்க்குலமாகப் போற்றப்படுகின்றாள். கணவனுக்கு பிரமாணிக்கமுள்ள மனைவியாக, பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும் பொறுப்புள்ள அன்னையாக பெண் நோக்கப்படுகின்றாள்.

## பெண்கள் மீதான அடக்கு முறைகள்:-

**1. வரதட்சணை எனும் பிடிக்குள் பெண்கள்:-**

திருமணம் ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான நிகழ்வாகும். இந்த நிகழ்விற்கு அவள்படும் பாடு படாதபாடு. திருமணப் பெண்ணை விட அவள் கொடுக்கும் சீதனத்தை மட்டும் பார்த்துப், பெண் எடுக்கும் "ஆண்கள்" யாழ்ப்பாணத்தில் இல்லாமலில்லை. சீதனம் மகிழ்ச்சி யாக பெற்றோரால் தமது பிள்ளைகளுக்காக வரதட்சணை கொடுப்பது வழமையானது. ஆனால் இன்று இந்நிலைமை மாறி இலட்சங்களுக்காகப் பெண்கள் பேரம் பேசப்படும் துர்ப்பாக்கிய நிலை இன்றும் காணப்படுகின்றது.

> பெண்களைப் பெற்ற குடும்பங்களில் துன்பமும், துயரமும், ஏமாற்றங் களுந்தான் சொத்தாகக் காணப்படுகின்றது.

மிகவும் வறிய குடும்பங்களில் பிறக்கும் பெண்கள் தமது வறுமை காரணமாக, சீதனம் கொடுக்க முடியாத நிலையில் திருமணம் என்பது கனவாகவே தோன்றித் தமது வாழ்க்கை முழுவதும் தமது பெற்றோரில் தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் பெண்களைப் பெற்ற குடும்பங்களில் துன்பமும், துயரமும், ஏமாற்றங்களுந்தான் சொத்தாகக் காணப்படுகின்றது. இந்த ஏமாற்றங்களினால் தங்களது வாழ்கையை தற்கொலைகளில் முடித்துக் கொள்ளும் நிலைகளும் ஆங்காங்கே காணப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அழகு என்னும் நோய்:-

பெண்கள் அழகாக இருக்க வேண்டும், ஒல்லியாக, நீண்ட கூந்தல் கொண்டவளாக இருக்க வேண்டும் என்பது இன்று பெண்களுக்கான கலாச் சாரமாக அமைகின்றது. கறுப்பு நிறம், சதைப்பிடிப்பான, பருமனான பெண்கள் ஓரம் கட்டப்பட்டுப் பெண்களின் பண்பு சிதைக்கப்படுகின்றது.

பெண்களின் சதை சந்தையாகிறது. இன்று பெண்கள் மூலம் சந் தையை பிடிக்கத் துடிக்கும் நிறுவனங்கள் ஏராளம் தோன்றியுள்ளது. விளம் பரங்கள், நேரடியாகப் பெண்களின் உடலை விற்று இலாபம் தேடுகின்றனர். இன்று அனைத்துப் பொருட்களுக்கும் விளம்பரம் தேவை. இந்த விளம்பரங் களிற்கு பெண்களே பயன்படுத்தப்படுகின்றார்கள். அனைத்துத் தொலைக் காட்சிகளும் சினிமாக்களும் இதனையே வெளிக்காட்டுகின்றது.

## 3. தமிழ் சினிமா:-

இதன் மூலம் யாழ் தமிழ் பெண் பல எதிர்பாராத விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது. சினிமா மூலம் கவரப்படும் இளைஞர்களால் தமிழ்ப் பெண்களுக்கு ஏற்படும் தொல்லைகள் சொல்லிலடங் காது. இதனைத் தனியார் கல்வி நிலையங்களிலும், மக்கள் அதிகம் கூடும் இடங்களான ஆலயம், கோவில் போன்ற இடங்களிலும் காணலாம்.

காதலுக்காகப் பெண்களைக் கடத்தும் நிலையும் அதனை எதிர்க்கப் பலமின்றிப் பெண்கள் தற்கொலை செய்யும் நிலையும் இன்று யாழ் சமுதாயத் தில் உண்டு. பெண்களும் சினிமாவினால் கவரப்பட்டுத் தங்களது உடை, நடை பாவனைகளில் மாற்றங்களைச் செய்து தங்களையே இழிவாக்கும் நிலைகளும் இன்று இல்லாமல் இல்லை. தங்களிற்கு அனைத்திலும் சுதந்திரம் உண்டு என்று கூறி சினிமா உலகினால் ஏமாற்றப்பட்டு தங்களது உடலின் உறுப்புக்களை, உடைகளை வெளியில் காட்டி, இளைஞர்களின் மனங்களை யும் குழப்பி, தேவையற்ற பிரச்சினைகளையும் உருவாக்கின்றனர் என்பதும் உண்மை.

## 4. பாலியல் வன்முறைகள்:-

யாழ் நகர்ப்பகுதிகளில் பாலியல் வன்முறைகள் பல வடிவங்களைப் பெற்றுள்ளது. பாலியல் சீண்டல்கள், வக்கிரப் பேச்சுக்கள், தொடுதல், வன் புணர்ச்சி எனப் பல வடிவங்கள் பெற்றுள்ளது. இலங்கை இராணுவத்தினாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் காடையர்களாலும், காம வெறியர்களாலும், வல்லுறவுகள் ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றது. இச்செய்திகள் அச்சுக்கும், வெளி உலகிற்கும் வெளிவருவதில்லை. இதனால் அப் பெண் சமுதாயத்தில் தள்ளி ஓரம் கட்டப்படுகின் றாள். பெண் உடல், உள பாதிப்புக்களை அடை கின்றாள்.

யாழ் நகர்ப்பகுதிகளில் பாலியல் வன்முறைகள் பல வடிவங்களைப் பெற்றுள்ளது. பாலியல் சீண்டல்கள், வக்கிரப் பேச்சுக்கள், தொடுதல், வன்புணர்ச்சி எனப் பல வடிவங்கள் பெற்றுள்ளது.

**5. கள்ள உறவுகளும் கருக்கலைப்பும்:-**

இன்று யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை இதுவாகும். இளவயதிலேயே பெண்கள் காதலால் கவரப்பட் டுத் தங்களது கல்வியை இழப்பதும், ஆண்களால் ஏமாற்றப்பட்டு பக்குவப்படாத வயதிலேயே தங்களது கற்பை இழந்து வயிற்றைக் கருவால் நிரப்பி அதனை அழிக்க, அதனால் மன உளைச் சலையும், பிற நோய்களைப் பெறுவதும் உறவுகளை இழப்பதும் சர்வசாதரண மான விடயமாகும்.

காதல் போடுதல், லொட்ஜ் போடுதல் போன்ற பதங்கள் இன்று இளசுகள் வாயில் உலாவும் சொற்களே. பாடசாலைப் பெண்கள் தொடக்கம் பல்கலைக்கழகப் பெண்கள் வரை கருக் கலைப்பில் ஈடுபடுவதாகத் திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கின்றன.

## யூத பின்னணியில் பெண்கள்:-

ஆதியில் இறைவன் மனித குலத்தைப் படைக்கும்போது வெறுமனே ஆணை மட்டும் படைக்கவில்லை. பெண் அவனுக்குத் துணையாக இருக்கவே படைக்கப்பட்டாள். இதனால் தான் அவள் ஆதாமின் விலாவில் இருந்து உருவாக்கப்பட்டாள் என்ற கருத்துக் காணப்படுகின்றது. எனவே, பெண்ணும், ஆணும் சமன். பெண் ஆணுக்கு அடிமையில்லை. "கடவுள் தம்முருவில் மானிடரைப் படைத்தார்" (தொ.1.27) எனக் குறிப்பிடுகிறது புதிய விவிலிய மொழிப்பெயர்ப்பு.

## யூதப்பெண்கள் - பழைய ஏற்பாட்டுக் காலப் பின்னணியில்:-

யூத இனத்தில் பெண்களுக்கு எந்தவித உரிமைகளும் இருக்க வில்லை. அன்றைய சூழ்நிலையில் பெண்கள் அடிமைப்பட்டவர்களாகவே கருதப்பட்டு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் முதலில் தன்னைப் பெற்றெடுத்த தந்தைக்கு அடிமை. பின் கணவனுக்கு அடிமை. இறுதியில் மகனுக்கு அடிமையாகின்றாள். பெண்கள் சமுதாயத்தின் சொத்தாகக் கருதப்படுகின்றனர். (வி.ப.20:17) பெண்கள் - ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப் படுவதால், ஆண்கள் பல மனைவியரையும், வைப்பாட்டிகளையும், பெண் அடிமைகளையும் வைத்துக்கொள்ளலாம். (தொ.நூல் 16:2-3, வி.ப.2:7-11, நீதி.ப. 8:30, 12:8, 2 அரச 10:17)

பெண்களோடு பேசினால் பெரும் குற்றமாகும். வீட்டில் வரும் விருந்தி னரை ஆண்கள் தான் வரவேற்கவேண்டும். யூத சமுதாயத்தில் பொதுவாக தந்தை வழி மரபுதான் பினபற்றப்பட்டது. தாய்வழி மரபு காணப்படவில்லை. பெண்களுக்குத் தீட்டுக் காலங்கள் என்று விலக்கி வைக்கப்பட வேண்டிய காலம் அதிகமாகக் காணப்பட்டது.

பெண்ணுக்கு மாதா மாதம் 7 நாட்கள் தீட்டு. ஆண் குழந்தை பெற் றெடுத்தால் 40 நாட்களும், பெண் குழந்தை பெற்றெடுத்தால் 80 நாட்களும் தீட்டு என்று கணிக்கப்பட்டது. (லேவி 12:18:19-31) பெண்களுக்குச் சொத் துரிமையில்லை. (எண் 27:8) ஆண்களுக்கு மட்டுமே கல்வி கற்க உரிமை யுண்டு. பெண்களுக்கு வாய்ப்பு இல்லை. கோவிலிலும் பொது இடங்களிலும் பெண்களுக்கு உரிமையில்லை. தூய்மைப்படுத்தும் சடங்குகளுக்கே பெண் அதிகம் அனுமதிக்கப்பட்டாள். (லேவி. 12) விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும். (யோவான் 8.4)

உலகின் அழிவுக்கு காரணம் பெண்தான். அதாவது பெண்ணால்தான் பாவம் உலகில் நுழைந்தது. (சீ.தா.25-24) இறைவன் "யாவே" இஸ்ராயேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கை திருமண உடன்படிக்கைக்கு ஒப்பிடப்படுகின்றது. இதில் இறைவன் மணமகனாகவும், இஸ்ராயல் மக்கள் மணமகளாகவும் உருவாக்கப்படுகின்றார்கள்.

## பெண் தலைமைத்துவம் - பழைய ஏற்பாடு:-

பல பெண்கள் இஸ்ராயல் வரலாற்றில் மக்களை வழி நடத்தும் பாரிய தலைமைத்துவ பணிகளைச் செய்துள்ளார்கள். இறைவாக்கினர் மிரியம் இறைவனைப் புகழ்ந்து பாடி முன் செல்ல, பெண்கள் அனைவரும் அவர்பின் சென்றனர். (வி.ப. 15:20) இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய மாபெரும் தலைவர் மோசேயினைக் காப்பாற்றிய தாதிப்பெண்கள் சிப்ரா, பூவா (வி.ப. 1:15-21) நீதித்தலைவியும், இறைவாக்கினருமான தெபோரா (நீதி. 4-5-3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலும், புத்தி சாதுரியமும் உள்ள பூதித், எஸ்தர் போன்ற பெண்கள். இவ்வாறு பல பெண்கள் தலைமையை ஏற்றுச் செவ்வனே செய்து முடித்தார்கள்.

## புதிய பார்வையில் பூவையர்:-

இறைவன் யூத கலாச்சாரத்தின் பின்னணியில் பிறந்ததால் அவர் விரும்பியோ விரும்பாமலோ ஓர் ஆணாதிக்க சமுதாயத்தினுள் விழுந்துவிட்டார். ஆனால், இயேசுவின் பார்வையில் மாற்றம் காணப்பட்டது. பெண்களுக்குக் கொடுக்கவேண்டிய மதிப்பையும் மாண்பையும் கொடுத்தார். அவர்களைப் புகழ்ந்தார்.

திருத்தூதர் குழுவில் ஒரு பெண்கூட இடம்பெறவில்லை. இது ஆணாதிக்க கலாச்சாரத்தின் பாதிப்புக்குள் இயேசு வாழ்ந்தார் என்பதைக் காட்டுகிறது. ஆனால், இயேசுவின் வாழ்க்கை, சொல், பார்வை, அனைத்தையும் பார்க்கும்போது அவர் பெண்கள்மீது இருந்த தடைகளையும் தாண்டிப் புதிய பாதையைக் காட்டினார் என்பது தெரிகிறது.

சமாரியப் பெண்ணுடனான உரையாடல் (யோவான் 4:5-42) கனானியப் பெண் (மத் 15:21-28) மார்த்தா மரியா (யோவா 11:17-42) சிலுவைப் பயணத்தில் எருசலேம் மகளீர் (லூக் 23:27-30) ஆகியோரிடம் பேசி, பெண்களின் மேன்மையை, ஆளுமையை உறுதிப்படுத்தினார். பெண்களின் மாண்பையும் திருமணத்தையும் போற்றிப் பெண்களை இச்சையுடன் நோக்குவதே பாவம் என்று (மத் 5-28) கூறியுள்ளார். சமூக நோய்களில் அடிமைகளாக காணப்பட்ட பல பெண்களைக் குணப்படுத்தி சமூகத்தில் அவர்களையும் மாண்பு மிக்கவர்களாக உயர்த்துகின்றார். இவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள் ஆவர். பேதுருவின் மாமியார் குணம் பெறுதல் (லூக் 4:38-39) 18 ஆண்டுகள் கூன் விழுந்திருந்த பெண்ணைக் குணப்படுத்தியது (லூக் 13:10-17) இரத்தப் போக்கினால் துன்புற்ற பெண் நலமடைதல் (லூக் 8:43-48)

இயேசு பெண்களை வெறுக்கவில்லை. அவர்களுடன் நல்லுறவைக் கொண்டிருந்தார் என்பதற்கு மார்த்தா, மரியா சகோதரிகளின் உறவு நல்ல தொரு உதாரணம் ஆகும். இவ்வாறு இயேசுவின் பிறப்பு முதல் உயிர்ப்பு வரை பெண்கள் முன்னணியில் நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில ஆலோசனைகள்:

### 1. பணித்தள ஆலோசனைக் குழுவில்

சாதாரண குடும்பங்களில் பெண்கள் தமது நிர்வாகத்தினைத் திறம்பட செய்து சாதனை படைக்கும்போது அவர்களை ஆலய ஆலோசனைச் சபைகளிலும், பணித்தள நிதி நிர்வாகக் குழுக்களிலும் சேர்த்து அவர்களின் உதவியைப் பெறுவது நல்லதாகும்.

### 2. நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு

நற்செய்தி அறிவிப்புப் பணி ஆண்களுக்கு மட்டும் உரித்தானது அல்ல. இந்தப் பணியைப் பெண்களும் இணைந்து செயற்பட அழைக்கலாம். ஆலய நற்செய்தி அறிவிப்புக் குழுவில் பெண்களை ஈடுபடுத்தலாம். ஆலயக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தலாம். அருங்கொடை வழிபாடுகளைப் பெண்கள் முன்நின்று வழி நடத்த அனுமதிக்கலாம். செப வழிபாடுகளும், அன்பிய வழிபாடுகள் போன்ற நேரங்களில் பெண்களே தலைமையேற்று நடத்தலாம். பெண் பீடப்பணிப்பாளர்கள், இறை பணியாளர்கள் ஆன்மீகக் காரியங்களில் உதவலாம். நற்கருணைப் பணியாளர்களில் பெண்களையும் இணைத்துக் கொள்ளலாம்.

### 3. கல்விப் பணிகளில்

இன்று கல்வியில் முன்னேறும் விகிதாசாரம் ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிகம். எனவே, கல்வியைக் கற்றுக்கொடுக்க படித்த பெண்கள் முன்வரலாம். தையல் பயிற்சி நிலையங்கள், கைத்தொழிற் பயிற்சி நிலையங்கள் போன்றவற்றில் பெண்களை ஈடுபடுத்தலாம்.

### 4. கிறிஸ்துவின் பார்வையில்

ஆண் மேலாதிக்க கருத்தமைவில் கட்டப்பட்டுள்ள இன்றைய சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது இயேசு வெளிப்படுத்திய பக்கச்சார்பு நிலையை திருச்சபையும் வெளிப்படுத்த வேண்டும். பெண்கள் விடுதலையும் எழுச்சியும் திருச்சபையின் ஒரு முக்கிய பணியாக மாற வேண்டும். அவர்களை வலுவூட்டி ஆணுக்குச் சமனான மானிட சமத்துவத்தை மதித்து அதை நடைமுறையில் வெளிப்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

உலகமயமாக்கலின் வரவினால் பெண்களின் மீது திணிக்கப்படுவது பண்பாட்டுப் படையெடுப்புக்கெதிராகக் குரல் கொடுக்க வேண்டியது, செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியது, திருச்சபையின் இன்றியமையாத பணிகளில், இதுவுமொன்று. இந்நிலையில் மக்களை மையப்படுத்தி இயங்கும் மனித நேய இயக்கமான திருச்சபையும் உலகமயமாக்கலுக்கு எதிராக அறைகூவல் எழுப்ப வேண்டும்.

உலகமயமாக்கலிலும் சினிமா மோகத்தாலும் மற்றும் பல கருத்தியல் யதார்த்தங்களாலும் உண்டாகும் பாதிப்புக்கள் பெண்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை விளக்கிக் கூறவேண்டியது திருச்சபையின் நற்செய்திப் பணிகளிலொன்று. பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். கிறிஸ்தவப் பெண்கள் தங்களது கலாச்சாரத்திற்கு கேடு விளைவிக்கும் சக்திகளுக்கெதிராகப் போராட வேண்டும்.

சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் பெண்களுக்கு எதிரான பல்வேறு கருத்தியல்கள் உள்ளன. எனவே, இந்த அடிப்படைக் கட்டுக்களில் இருந்து, பெண்கள் விடுதலை பெற வேண்டும். அவர்கள் தங்களுக்கென்று ஒரு இலட்சியத்தை, இறையியலை உருவாக்கி அவர்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமுதாய அங்கமாக மாறவேண்டும்.

எனவே, சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் பெண்களுக்கு எதிரான பல்வேறு கருத்தியல்கள் உள்ளன. எனவே, இந்த அடிப்படைக் கட்டுக்களில் இருந்து, பெண்கள் விடுதலை பெற வேண்டும். அவர்கள் தங்களுக்கென்று ஒரு இலட்சியத்தை, இறையியலை உருவாக்கி அவர்களும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமுதாய அங்கமாக மாற வேண்டும். இதன் வெற்றிக்கு திருச்சபையும் பச்சைக்கொடி காட்ட வேண்டும். திருச்சபைக்குள்ளேயே இருக்கும் பெண் அடிமைத்தனங்கள் மாறவேண்டும். மாற்று உலகம் சமைக்கப் புறப்பட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்சகோ. ம. செல்வநாதன் பீரிஸ்

# பாதுவா புனித அந்தோனியார்

## பிறப்பும் அழைப்பும்

புனித அந்தோனியார் 1195ம் ஆண்டு புரட்டாதி மாதம் 15ம் திகதி போத்துக்கல் நாட்டின் தலைநகரான, லிஸ்பன் நகரில் பிறந்தார். இவர் தன்னுடைய 15வது வயதில் புனித அகுஸ்தினார் துறவற சவையில் புகுந்து அர்ப்பணிப்புள்ள சந்நியாசியானார். பின்னர் பிரான்சிஸ்கன் சபையில் இணைந்து துறவியானார்.

## பணிகள்:

புனித அந்தோனியார் தன்னுடைய துறவற வாழ்க்கை காலத்தில் பல புத்தகங்களை எழுதி பல சாதனைகளை நிலைநாட்ட முடியாது இருந்தாலும், இவரை பிரான்சிஸ்கன் சபையில் மறைந்திருந்த விலைமதிப்புள்ள "புதையலாக" அழைக்கின்றோம். இதற்கு பல காரணங்கள் உண்டு.

### சிறந்த மறையுரையாளர்

இவருடைய மறையுரைகள் அனைத்தும் மந்தைகளின் விசுவாசத் தினை பாதுகாத்து ஆழப்படுத்துவனவாக அமைந்தன. அதுமட்டுமல்லாமல் சிறப்பான மறையுரைகள் வாயிலாக பலரை மனமாற்றி தான் பெற்ற கிறிஸ்தவ அன்பின் ஆழத்தை மற்றவர்களுக்கு கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சிறப்பாக எல்லா மக்களும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில், எளிய நடையில், கிறிஸ்துவின் நற்செய்தியை எல்லோருக்கும் அறிவித்து அதன் மூலமாக ஏழை எளியவர்களுக்கு எளிதான முறையில் இறையியல் கருத்துக்களை புகுத்தி அவர்களை இறைவன் பால் ஈர்த்தார்.

இவர் இறைவார்த்தையை நாளும் வாசித்து, அதன்படி தானும் வாழ்ந்து மற்றவர்களும் இறைவார்த்தையை தம் வாழ்வாக்கி கொள்ள முன்மாதிரிகையாக வாழ்ந்து காட்டியவர். எப்போதும் இறைவார்த்தை இவருடைய கரங்களில் இருப்பது இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு.

இவர் இறைவார்த்தையை நாளும் வாசித்து, அதன்படி தானும் வாழ்ந்து மற்றவர்களும் இறை வார்த்தையை தம் வாழ்வாக்கி கொள்ள முன்மாதிரிகையாக வாழ்ந்து காட்டியவர். எப்போதும் இறைவார்த்தை இவருடைய கரங்களில் இருப்பது இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டு.

## இறையியல் ஆசிரியர்

இவர் பொலோஞ்ஞா (Bologna) ருலூஸ் (Toulouse) மொன்த்பெல்லியர் (Montpellier) பாதுவா (Padua) போன்ற இடங்களில் இயேசுவின் தெய்வீகத் தன்மையை சிறப்பான விதத்தில் எல்லா மாணவர்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் கற்பித்தார்.

மேலும் இவ்வுலக தீமைகள், பேதகங்கள் அனைத்திற்கும் எதிராக நின்று தனது அறிவாலும், இறைவார்த்தையாலும், எதிர்வாதங்களையும், எதிர்ப்புக்களையும் தெரிவித்து திருச்சபையின் விசுவாசத்தை அழியவிடாது பாதுகாத்து, வலுவூட்டி வந்தார். சிறப்பாக திரித்துவக் கொள்கைக்கு எதிரான பேதகம் மீண்டும் தலைதூக்கிய காலத்தில் கடவுள் ஒருவர், அவர் மூன்று ஆட்களாக இருக்கிறார்; பிதா, சுதன், தூய ஆவி ஆகிய மூவரும் ஒன்றாய் இணைந்து மூவொரு கடவுள் என்ற விசுவாச சத்தியத்தை உலகிற்கு எடுத்துரைத்தார். இதன் மூலம் திருச்சபையின் விசுவாசத்தை காக்கக்கூடியதாக இருந்தது. இவ்வாறாக இவர் இறையியல் ஆசிரியராக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திவ்விய நற்கருணையில் ஆழமான விசுவாசம்

இவர் நற்கருணை மட்டில் ஆழமான விசுவாசம் கொண்டு வாழ்ந்து வந்தார். நற்கருணையின் மேன்மையையும், மகத்துவத்தையும் எல்லோருக்கும் வெளிப்படுத்தி, அதிலே விசுவாசம் வைத்து வாழ வழிகாட்டினார். உண்மையாகவே நற்கருணையில் இயேசு உயிருள்ள விதத்தில் பிரசன்னமாய் இருக்கிறார் என்பதை பல தப்பறைகளான போதனைகள் மத்தியிலும் நிருபித்துக் காட்டி, மக்கள் நற்கருணை மட்டில் ஆழமான விசுவாசம் வைத்து வாழ தன்னுடைய போதனைகளால் மக்களை நல்வழிப்படுத்தினார்.

> நற்கருணையின் மேன்மையையும், மகத்துவத்தையும் எல்லோருக்கும் வெளிப்படுத்தி, அதிலே விசுவாசம் வைத்து வாழ வழிகாட்டினார். உண்மையாகவே நற்கருணையில் இயேசு உயிருள்ள விதத்தில் பிரசன்னமாய் இருக்கிறார் என்பதை பல தப்பறைகளான போதனைகள் மத்தியிலும் நிருபித்துக் காட்டி,

## அன்னை மரியாள் மட்டில் பக்தி கொண்டு விளங்கினார்

சிறு பராயத்திலிருந்தே மரியன்னை மீது பக்தியும், விசுவாசமும் கொண்டு புனித அந்தோனியார் வாழ்ந்து வந்தார். மரியாளின் பாடலை தொடக்கத்திலிருந்து முடிவுரை பக்தி உணர்வுடன் ஆலயங்களில் பாடுவதில் புனிதர் மகிழ்ந்திருந்தார். இவர் தன்னுடைய இளம்பராயத்திலிருந்து அன்னை மரியாள் மட்டில் மிகுந்த அன்பும் பற்றுதலும் கொண்டு வாழ்ந்து வந்ததனால் இவருடைய மனதுக்கு அன்னையின் பரிந்துரையால் அமைதி கிடைத்ததையும் உணர்ந்து கொண்டார்.

மேலும் அன்னை மரியாள், பற்றி தப்பறையான போதனைகள், நிலவிய காலங்களிலும் இவர் அன்னையிடம் விசுவாசம் வைத்து, அன்னைக்கு வணக்கம் செலுத்தவேண்டிய தேவையையும், அவசியத்தையும் எல்லோருக்கும் எடுத்துரைத்தார். குறிப்பாக அன்னையின் அமல உற்பவம் பற்றிய விசுவாசக் கோட்பாடு திருச்சபையில் இவருடைய காலப்பகுதியில் இல்லாது இருந்த வேளையிலும் அன்னைக்கு மிகவும் உன்னதமான நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்தினார். இவர் தன்னுடைய மறையுரையிலும், கற்பிப்பதிலும் அன்னைக்கு முக்கியத்துவம் கொடுத்து மரியியலை ஆழமாக விசுவாசிகள் விளங்கிக் கொண்டு அவளிடத்தில் அன்பும், பக்தியும் கொண்டு வாழ அனைவருக்கும் தகுந்த வேதாகம விளக்கங்களுடன் முன் மாதிரிகையான போதனைகள் வழியாக, வழிகாட்டி வந்தார். தானும் அன்னை மரியின் அளவு கடந்த அன்பையும், அரவணைப்பையும் உணர்ந்து கொண்டார்.

அன்னையின் அமல உற்பவம் பற்றிய விசுவாசக் கோட்பாடு திருச்சபையில் இவருடைய காலப்பகுதியில் இல்லாது இருந்த வேளையிலும் அன்னைக்கு மிகவும் உன்னத மான நிலையில் வணக்கம் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்.

## நிறை அமைதியில்

இவ்வாறாக, இவர் பல ருக்கு வழிகாட்டியாக, ஆசிரியராக, நல்ல ஆன்மீகத் தந்தையாக விளங்கினார். இவர் தன்னிடம் அமைதி தேடி வருவோருக்கு ஆறுதல் அளித்து, இறை அமைதியை சுவைக்க வழிகாட்டியவர். இறுதியாக 1231ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். 1232ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ம் திகதி திருத்தந்தை 9ம் கிறகோரியார் இவரைப் புனிதராக பிரகடனப்படுத்தினார். இவர் இறந்து 32 ஆண்டுகளின் பிறகு 1263ம் ஆண்டு 4ம் மாதம் அவரது கல்லறை திறக்கப்பட்டபோது அவரது நா மட்டும் அழியாமல் அப்படியே இருந்தது. இது பதுவை நகர பேராலயத்தில் ஓர் அழகிய பேழையில் வைக்கப்பட்டது. பின்னர் திருத்தந்தை 12ம் பத்திநாதர் "அந்தோனியார் திருச்சபையின் மாமேதை" என்ற பட்டத்தை இவருக்கு அருளினார். இன்றும் அமைதி தேடி செல்வோருக்கு ஆறுதல் அளித்து புதுமை செய்யும் கோடி அற்புதராக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## Priestly formation in the history of the Church

**Rev. Fr. S.V.B. Mangalarajah**

Priestly formation has always been a widely discussed topic. The success or failure of priestly ministry of a priest is attributed largely to the formation he underwent.

Jesus Christ gave formation to the first priests, the Apostles by the direct way and since then the formation of priests has been going on for the past 20 centuries. After the period of the Apostles and their disciples and especially after the 4th C. We find certain gaps setting in. It became no longer possible to give a comprehensive formation and not all priests had all the opportunities and hence they were on many occasions not well versed in Theology. They were not always known for their zeal for souls and not seldom living sound moral lives.

We come across always priests who were living exemplary lives and priests who were scholars in Sacred Scripture and Theology. There were also many popes who wanted a sound formation to be imparted to the priests and secular leaders like Charlmagne who wanted the clergy in his realm to be zealous and educated.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It was only after the Council of Trent in the 16th C. that the modern day seminary formation was instituted. The contributions of the church in France with the help of some able men like St. Vincent de Paul, Olier and St. John Eudes was remarkable in paring the way for modern seminary formation. Pope Leo XIII and his successors gave incentive for the seminaries in the mission lands like ours. Thanks to then great men who emphasized the importance of the indigenous clergy, inculturation, indigenization etc., we are able to have our own seminary forming the seminarians to be priests in and for our culture and context.

## The Eucharist in the light of the Tamil Struggle

**Rev. Fr. Stany Antony OMI**

It is an attempt to re-read the mystery of the Eucharist in the light of the Tamil struggle. The Eucharist which Jesus celebrated is not a past event, but a living event, renacted daily whenever mass is celebrated. It is not merely recalling the Golgotha event, but sacramentally actualizing the same sacrifice. The loss of lives, martyrdom, and sacrifice have become part and parcel of the Tamil struggle and we need to understand the real meaning of the Eucharistic sacrifice in all its dimensions, so that Tamil struggle can be purified and it can help the Tamil society to live in hope amidst the hopeless and became a resurrected society.

## Towards Home

**Rev. Fr. M.V.E. Ravichandran**

This article analyses the importance given to the peaceful living in a personally owned house in the religio-cultural experience of the Tamil people. It goes on identifying the extent to which this peaceful living is disturbed and denied to the Tamil people in today's socio-political situation in Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Then this contextual experience is discussed in the background of Judaic Christian religious experience. Finally some practical and pastoral suggestions are highlighted to enhance this experience and to elevate it to a sacramental experience of the Divine Home.

# Eela-tamil theological perspective and the Jaffna St. Francis Xavier's Seminary

**Rev. Bro. F.T. Judethas**

Tamil culture is one of the ancient cultures in the world. We, the Tamils are expected to spread our religious faith by incorporating our culture. Tamil Catholics should not situate our religious life outside our culture. Both should go hand in hand. Then only it would bear good fruit in our soil.

With the idea of giving a contextual formation St. Francis Xavier's seminary was started by the late Bishop Rt. Rev. Dr. B. Deogupillai. On the process of foundation of this seminary our late bishop had to face many challenges from the ecclesiastical authorities. But his canonical knowledge and the capacity of foreseeing things persuaded him to proceed. Thus now we have got a seminary in our soil.

Eelatamil theology can be analyzed with the help of the following four aspects: politics, economics, religion, society. We are oppressed in these aspects. We need to be liberated from these oppressions. This can only be done by those who live Christ in their life. Political life is for service to others. It should not be for any authority or power. The solution given by Jesus Christ for the economic problem is sharing. The creation is the free gift of God to humanity. Religion should show the right path to the people. All the religions should work together for peace. Unwanted customs, practices that help to perpetuate oppression should be annihilated. It is the duty of all Christians.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The ministers who are going to serve the people who are oppressed in so many ways should incorporate all these things into their life. By this they should be able to give solutions to those problems in the light of Christ. Suffering, trials, persecutions, etc. has become part and parcel of the life of our people. The future ministers also should experience all these things by being in their midst and thus they should be worthy ministers to these people. This is the purpose of this seminary.

# The Existential truths in the first three chapters of Genesis

**Rev. Fr. S.J.Q. Jeyaranjan**

It is an undoubted and undisputed fact that man is the crown or the pinnacle of creation. It is only man, as a rational and spiritual being, endowed with free will and intellect, is able to communicate with God, the creator and with his fellow beings. We are specially created by God, to be special to him all through.

The first creation account according to priestly tradition (Gen 1:1-2:4a) is presented in a solemn liturgical style. Creative power of God's word is well brought out through the use of the Hebrew verb 'bara' and its being used seven times adds for the biblical fullness. The Hebrew verb 'bara' suggests that God is the agent of creation and that he created out of nothing. All other things needed for man were created through a command. But before human creation, there is a divine council (Gen 1:26) which holds for the supremacy of human, with the second lordship over the creations.

In the second creation account presented by yawistic tradition, God is very close to human beings. The author's style is anthropomorphic and down to earth. God created man from the clay of the earth and blew into his nostrils the breath of life (Gen 2:7). If not for God's breath of life, man has no life; he is inanimate.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The same way though the woman is created from the rib of man, for her to have life she depended on God's blowing.

The companionship of man and woman cannot be equated with any other thing. It is the complementality of man and woman that paves the way for the sustenance of the world. That inter-dependency and relationship get disturbed through isolating God's commandment.

Thus the first three chapters of Genesis clearly tell us that we are from God and we are for God. The words of St. Paul make it clear: "For in him we live and move and have our being".

## Mary is our Living Mother

**Rev. Bro. E.S.C. Mariathas**

"Here am I, the servant of the Lord; Let it be with me according to your word" (Lk1:38).

Mary is not only the mother of Christ and therefore the mother of God; she is also the mother and mediator of grace and therefore the mother of the Church, the mystical body and of the people of God. The key to Mary's greatness and dignity is her divine maternity. She becomes our Mother at the very moment she uttered her 'fiat' that is let it be done and the word became flesh. This was ratified when Jesus spoke from the cross, "Behold thy son behold thy mother".

From the instant of her 'fiat' she contributed to the salvation of all the elect. In the order of grace, the head and the members are born of the same mother also as Jesus is the fruit of her womb.

The virgin Mary who at the message of the angel received the word of God in her heart and in her body and gave life to the world is



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

acknowledged and honoured as being truly the Mother of God and mother of all the living human beings. She is also the beloved daughter of the father and the temple of the Holy Spirit.

The Church indeed contemplating her already hidden sanctity and all her vivid apparitions, has reached the greatest perfection whereby she exists without spot or wrinkle.

# Is Capital Punishment Necessary?

Rev. Fr. P. Christunayagam.

In Sri Lanka about three months back it was the story in all the media that the Government is going to reintroduce the Capital Punishment that has been stopped since 1971. In the O.T. it is said: "Whoever sheds the blood of man, by man shall his blood be shed; for God made man in his own image" (Gen. 9:6). But at the same time the O.T. spoke also of divine mercy: "As I live says the Lord, I swear I take no pleasure in the death of the wicked man, but rather in the wicked man's conversion, that he may live" (Ez.33: 11). In the N.T. in Jn.8: 1-11 the Lord refuses to support the death sentence of the woman caught in adultery.

St. Augustine the famous theologian who had to face this problem many times, underlines the task of the secular power to help the Church in the struggle against the heretics. At the same time he insisted on our duty to bring them back to the flock, as the shepherd who leaves the nintynine on the mountains and go in search of the one that went astray (Mt. 18: 12-14). Another famous theologian St. Thomas Aquinas justifies the killing of an offender. To explain it he gives an analogy of a sick limb, which has to be amputated for the good of the physical body. He says the offender is the sick limb of the society that needs to be cut off to protect the well-being of the social body, to safeguard the common good.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When the Catechism of the Catholic Church speaks about the capital punishment it says, that the legitimate defense can be not only a right, but also a great obligation, for those who are responsible for other's life. And it declares that the legitimate public authority can punish in case of extreme gravity, with capital punishment. But at the end it concludes that if bloodless means are sufficient to defend human lives against an aggressor public authority should limit itself to such means.

When the Pope John Paul II speaks about the Capital Punishment in his encyclical *Evangelium Vitae,* he says, even if a man is a fierce offender, we cannot reduce him to an object, but rests always as a person. God is always good to everyone regardless of his being good or wicked. Further he says God gave Cain a distinctive sign, not to condemn him but to protect and defend him from those wishing to kill him.

Therefore once again let us go back to what prophet Ezekiel said, God doesn't take pleasure in the death of the wicked, but rather in the wicked man's conversion. As St. Ambrose writes God, preferred the correction rather than the death of a sinner. He did not desire that a homicide be punished by the execution of another homicide.

# The Role of the Animators in the Growth of Anpiams. (BCCs)

**Rev. Fr. Anthonythas Dalima.**

The emergence of BCCs is prevalent in many Asian Countries. The people have the great thirst for the Word of God and to be formed as Communities. Especially they have the tendency to build up their communion. Therefore great attention should be paid for this new phenomenon.

To fulfill this need more effectively we need Animators. These Animators have to be trained well and proper orientation should be given to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

them and properly motivated to be real witness of Christ from their own experience. As the Anpiams begin to form, the need for training Animators to play their part in these Anpiams has become more and more evident.

At the same time the Animators also have to pay more attention on their own life style. They must consider their Prayer life, Community spirit, Self evaluation, openness and Social involvement seriously.

# Suffering

**Rev. Bro. B. Brian**

Suffering is an inseparable and inevitable moment in our day today life experience. The people of to day are faced with many burdens, depression and oppression due to various kinds of unexpected difficulties in life specially by war, hatred, various kinds of diseases and death. These unexpected waves of suffering come in our life and leave us with lots of untold miseries and unbearable burdens, as their remains. A typical example to these unexpected waves of suffering is the recent 'tsunami' incident which has caused innumerable disasters to many valuable human lives and properties. In this pathetic situation people live with plight, seeking consolation and hoping for a new fruitful future, because living with depression will in no way give an answer to the question of suffering. We must swim against the current of suffering in order to make our burdens easy and to have hope for a better future.

A fine example we can draw from the Bible where people underwent many difficulties and persecutions to safeguard their faith but they did not lose their hope in God. Especially in the New Testament Jesus went through many sufferings and hardships in order to bring us eternal life: so behind every suffering there is a glimpse of hope for a better future. Therefore in this way if we accept all our crosses every day, we will have a better life in future.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Historical Background of Ecumenism and the Foundations of Faith

**Rev. Fr. S.F. Kirupananthan**

The Holy Father Benedict XVI has renewed the call and commitment for ecumenism inviting the churches and Ecclesial communities to sustain in prayer for visible communion and as the head of Roman Catholic Church he depends on them for the much fuller communion in Hope. Any historical burden of division should not overburden those Christians who are born in different tradition of Faith commitment. The formation of World Council of Churches in reformed churches and the renewal of Vatican II in Roman Catholic Church for clarion call for ecumenism were marked as unique events in the history of ecumenism.

## Towards the Media Theology

**Rev. Bro. E. Edwinathan**

Today, unquestionably the media takes the central place, slowly and deeply. The masses are drawn to believe the information, the life-style, the culture it promotes as Gospel truths, and adopt them without any rhyme or reason. This article broadly and clearly analyses its origin, its socio-political-economical background, its religious influences, impacts etc,. Theologically this attempt points out the roots of the media, its merits or defects and its results too.

This is also an attempt to suggest some good and meaningful ideas: for example the director or chair – person or the journalist, who co-ordinates the proper functioning of the well – known media, should be conscientiously committed to control and channel the media with responsibility focussed on the general welfare of the people. The writer also quotes instances to show how Jesus too used the current form of media in his life – time, in the proclammation of the word of God.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

In fine, the writer challenges the readers' responsibility towards the media. Are we using it as a past – time, a source of information or a dogma on faith and morals to be adhered to?

# Christian Spirituality

**Rev. Fr. Christian Vaz**

Though there are many definitions for spirituality which would arise from time to time we could be able to define it as the direction and regulation of life towards the infinite Lord. With the inner search of everybody, this form of spirituality may differ from country to country, people to people as each has his or her own uniqueness. Religion and spirituality are not the same thing but they are inter-related. The process of joining in the covenant of the Lord and believing in the gospel which was proclaimed by Christ is called Christian spirituality. Uniting in the life of the Trinity, denying ourselves and carrying our own crosses, participating in the progress of the Catholic Church, obeying God and the authority of the church are same basic elements of Christian spirituality. At the same time materialism, consumeric culture and the massive success in technology are the growing obstacles for the Christian spirituality. Finally Religions should direct the people towards God without identifying the differences and contraries with other religions. It should prepare the way to God with the appropriate spiritual exercises to the people.

# A Theological view of the Women of Jaffna

**Rev. Bro. A. James Nathan**

**Women are suppressed in all levels of society, whether it be socio-political - economic - cultural or religious stratas. With regard to the Jaffna women, the violation of their rights is high. They are considered as second**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

class citizens, because of male domination. From birth to death, women undergo several hardships, too numerous to mention. Approximately 1/3 of the total income of a country comes from the working women, whereas they get only 1/10 of it.

Their talents and potentials are today shockingly manifested in many fields; particularly in modern warfare in our country! However, it is not so in the religious sector as supporters of women liberation strongly affirm. Jesus Christ broke all barriers of the Old Testament and up-lifted women, respecting their human rights, with genuine love and concern. All Christian evangelizers down the past twenty centuries tried to journey along the "new path" traced by their master. Thus great vision and courage are required to face the challenges ahead and create a new Women Theology, according to the signs of the times.

The above controversial topic poses for the readers three points in a nut-shell:

- ❖ Following the foot-prints of the Risen Christ, the Church must raise its voice against the pressures imposed on the traditional culture of women by globalization.
- ❖ The enlightened and educated women ought to fight against and vanquish the evil forces, which undermine Christian culture.
- ❖ Evangelization is not the prerogative of men alone; therefore the church has the duty to give a legitimate place to all women, in keeping with its Magisterium



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வாசக நெஞ்சங்களே!

எங்கே உங்கள் விமர்சனங்கள்
காலம் தாமதியாது எமக்கு எழுதி
அனுப்புங்கள்
இறையியல்சார்பான
தெளிவின்மைகள் உங்களிற்கு
உண்டா? எழுதி அனுப்புங்கள்
விடைகள் உங்களிற்குத்
தெரியப்படுத்தப்படும்.

***நிர்வாகக் குழு.***

அடுத்து வெளிவர இருப்பது



**பிரிவால்**
**வந்த**
**உறவு**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

அனுப்புபவரின் பெயர் :

விலாசம் :

**இடமிருந்து வலம் :**

06. ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வை பின்பற்றி வாழ முற்படும் மக்களின் கூட்டு வாழ்க்கையை தற்காலத்தில் வாழ முயற்சிக்கும் முறை?
(5) வலமிருந்து இடமாயுள்ளது

10. வயதுபோன மூதாட்டியை இவ்வாறும் அழைக்கலாம். (3)

13. திருமணத்தின் பண்புகளில் ஒன்று? (6)

21. மனிதனை கொல்வது எப்போதுமே _____ தான் (3)

30. மனித வாழ்வுக்கு மற்றொரு பெயர்? (3) வலமிருந்து இடமாயுள்ளது

31. கோடி அற்புதர் என அழைக்கப்படுபவர்? (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிருந்து கீழ் :

01. அருட்சாதனங்களில் ஒன்று? (5)

06. ஒரு பெண் முதலில் தன்னை பெற்றெடுத்த தந்தைக்கு _____ (3)

15. வார்த்தை என்பதை குறித்து நிற்கும் எபிரேய மூலச் சொல்? (3)

21. என்ற _____ வரிசைளை என்றோ கேட்ட நினைவு (3) கீழிலிருந்து மேலாகவுள்ளது

26. தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உதவும் பண்பை வளர்த்தது எனக் கூறும் நிகழ்வு? (5) (கீழிருந்து மேலாகவுள்ளது)

30. ஒவ்வொருவருக்கும் தான் விரும்பும் மதத்தை பின்பற்ற இருப்பது _____ ஆகும். (3) கீழிருந்து மேலாகவுள்ளது

☞ விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.

☞ விடைகள் வந்து சேர வேண்டிய இறுதிநாள். ஒக்டோபர் 10, 2005.

☞ குறுக்கெழுத்துப்போட்டிக்குரிய விடைகள் யூன் 2005ம் ஆண்டுக்குரிய வண்ணம் 2இல் (இதே புத்தகத்தில்) உள்ளது.

## முகவரி குறுக்கெழுத்துப் போட்டி

இல. 19. இறையியல் கோலங்கள்,
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 18

**சரியான விடைகள்:**

**இடமிருந்து வலம்**

1. மாற்கு
4. வாக்கு
8. தாய்மை
19. ஆணிவேர்
25. துன்புறும்
31. வலுவற்றது

**மேலிருந்து கீழ்**

1. மாந்தர்
2. வேற்றுமை
6. குழந்தை
11. பிறக்கும்
16. ஆற்றுகை

### பரிசில் பெறுவோர்

**1ம் பரிசு : வே. சதாதீபன்**
மாதா கோவில்
துன்னாலை
கரவெட்டி

**2ம் பரிசு : செ. மார்செலோபியோ**
சென். ஜேம்ஸ் வீதி
இளவாலை

**3ம் பரிசு : ச. சஞ்ஜீவ்குமார்**
இல– 36. ஆனந்தம் பண்ணை
D - 8 உருத்திரபுரம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இனிய இறையியல் கோல வாசகர்களே ......

கடந்த ஆண்டுக்கான சந்தா செலுத்தாதவர்கள் அதற்கான ஆண்டுக் கட்டணம் 100/- ரூபாவை, தங்களின் முகவரி பதிவெண்ணுடன் தயவு செய்து அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
இறையியல் கோலங்கள்,
புனித. சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

நீங்கள் உங்கள் சந்தாவைக் காசுக் கட்டளையாகவோ (Monery Order) அல்லது பணமாகவோ அனுப்பி வைக்கலாம்.

உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் எமது இறையியல் கோல வளர்ச்சிக்கு எதிர்பார்த்து நிற்கின்றோம்.

நன்றி.

நிர்வாகக் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 100/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 10
Euro 8

தனிப்பிரதி 30/=

தொடர்பு கொள்க :

**இறையியல் கோலங்கள்**
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly

Annual Subscription : Local (Incl. postage) Rs. 100/=
Foreign (Incl. postage) US $ 10
Euro 8
Single Copy Rs. 30/=

Correspondence to:

**Irai Iyal Kolangal**
St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna
Sri Lanka.
Tel: 021 222 2482, 021 222 7145

Redg No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org